# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-2

பிப்ரவரி-2020 (ஜமாஅத்துல்ஆகிர்-1441)

விலை ரூ. 20/-



## நாடாளுமன்ற தாக்குதலின் மூளை - தவேந்தர் சிங்

## பதிலடி தந்த ஈரான் பதுங்கிய அமெரிக்கா

# NPR, NRC, CAA - தேசிய குடியுரிமைச் சட்டம் - ஓர் ஆய்வு

## மக்கள் எழுச்சியும் அரசின் அடக்குமுறையும்

بسم الله الرحمن الرحيم

“

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

”


பதிலடி தந்த ஈரான்... பதுங்கிய அமெரிக்கா... - 6

வெறுப்பை கக்கிய இந்துத்துவ பிஜேபி தலைவர்கள் - 15

நாடாளுமன்றத் தாக்குதல் முயற்சி..! அதேபோல்..? - 17

அப்சல் குருவின் மனைவி உச்ச நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதம் - 19

தேசிய அளவில் என்.ஆர்.சி அறிவிக்கப்படவில்லையா? - 24

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 28

என்.ஆர்.சி. காவல் மையங்களில் மனநிலை பாதித்தும் தற்கொலை செய்து கொண்டும் 100 பேர் மரணம் - 31

மக்கள் எழுச்சியும் அரசின் அடக்குமுறையும் - 32

சுதந்திர இந்தியா தீவிரவாதம் - 39

இஸ்லாத்தைத் தாக்குவதே இலக்கு - 48

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் - 50

செய்கு அஹ்மத் சர்ஹிந்தின் தியாக வாழ்க்கை - 52

குடியுரிமை திருத்த சட்டம் (CAA) தேசிய குடியுரிமை பதிவேடு (NRC) தேசிய மக்கள் பதிவேடு (NPR) - ஒரு புரிதல் - 54



பிப்ரவரி-2020 (ஜமாஅத்துல்ஆகிர்-1441)

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# குடிமக்களுக்கு எதிரான ஆட்சியும் குடிமக்களுக்கான ஆட்சியும்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் என்.ஆர்.சி., சி.ஏ.ஏ.வுக்கு எதிரான பெரும் போராட்டங்கள் நாடெங்கிலும் வாரத்தின் ஏழு நாட்களுக்கும் ஒரு நாளின் 24 மணி நேரமும் நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் பாசிச பிஜேபி அரசு இந்த போராட்டங்களுக்கு செவி சாய்ப்பதாக இல்லை.

மக்களின் அமைதியான போராட்டங்களுக்கு பாசிச அரசின் பதில் வேறு விதமாக இருக்கிறது. சிலஇடங்களில் அரசே முன்னின்று பொதுமக்களை சுட்டு கொலை செய்கின்றது. வேறு சில இடங்களில் அரசு ஏற்பாடு செய்த அல்லது மத்திய அமைச்சர்கள் உட்பட்ட பல்வேறு இந்துத்துவாவினரின் வெறுப்பு பிரச்சாரத்தினால் தூண்டப்பட்டவர்கள் அமைதி வழியில் போராடும் பொதுமக்களை கொலை செய்கிறார்கள். பின்னர் அந்த கொலைகளை காட்டி மக்களை பயமுறுத்து கிறார்கள்.

ஆனால் மக்களோ பயந்தபாடில்லை. கொலைகாரர்களின் துப்பாக்கி குண்டுகளை கொசுவை பிடிப்பது போல் கையில் பிடித்து காயம்படும் வீரதீரமான போராட்டக்காரர் களை கண்டு நாடே வியக்கின்றது. சுதந்திர போராட்டத்திற்கு பிறகு மிகப்பெரியதொரு போராட்டத்தை நாடு கண்டு வருகிறது.

ஆனாலும் அமித்ஷா அரை அங்குலமும் பின் வாங்க மாட்டேன் என்று வீரவசனம் பேசி வருகின்றார். ஒரு நாளைக்கு ஒரு பேச்சு என்று இவரும் நாட்டின் பிரதமரும் மாறி மாறி பொய் பேச நாடே அல்லோலகல்லோலப் படுகிறது. குரங்கின் கையில் கிடைத்த பூமாலைக்கு ஒப்ப இவர்கள் கையில் நாடு கிடைத்துள்ளது என்று ஒருபுறம் சிலர் சொல்ல வானரத்தின் கைகளில் கிடைத்த கூர் வாளுக்கு ஒப்ப இவர்கள் கையில் அதிகாரம் கிடைத்துள்ளது என வேறு சிலர் கூறுகின்றனர்.

வஞ்சனையாக ஆட்சியை பிடித்து நாட்டின் பூர்வீக குடிமக்களில் 19 இலட்சம் பேரை அகதிகளாக்கி விட்டு இன்னும் கோடி கணக்கான பூர்வீக குடிமக்களை அகதிகளாக்க அலையும் பாசிசம் ஒரு பக்கம் இருக்க இதற்கு நேர் மாற்றமாக வரலாற்றில் ஒரு பக்கம்.

ஜெருசலம் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் கைகளில் வீழ்கிறது. ஜெருசலத்தின் அதிகாரத்தில் இருந்த கிறித்தவ தலைவர் ஜெருசலத்தின் அதிகாரத்தை உமர் (ரலி) அவர்களின் கைகளில் ஒப்படைக்கின்றார். கலீஃபாவிற்கும் கிறித்தவர்களுக்குமிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. கிறித்தவர்கள் முழு சுதந்திரத்தோடும் முழு உரிமையோடும் நடத்தப்படுவார்கள் என்று அந்த ஒப்பந்தம் உறுதி அளித்தது.

இந்த நிலையில் தான் இஸ்லாத்திற்கு எல்லா காலத்திலும் துரோகம் இழைத்துக் கொண்டிருந்த யூதர்கள் உமர்(ரலி) அவர்களிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார்கள்.

"கலீஃபா உமர் அவர்களே, நாங்கள் கிறித்தவர்களாலும் ரோமர்களாலும் 500 ஆண்டுகளாக கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நீதித்தவறாத தங்களின் ஆட்சியை நாங்கள் அறிவோம். எங்களுக்கும் இந்த மண்ணில் வாழ உரிமையை பெற்றுத் தாருங்கள். நாங்கள் 200 குடும்பத்தினர் உள்ளோம். எங்களுக்கும் ஜெருசலத்தில் வாழும் குடியுரிமையை பெற்றுத் தாருங்கள்"

கலீஃபா உமர் (ரலி) அவர்கள் நினைத்திருந்தால் சதாகாலமும் இஸ்லாத்திற்கு எதிராக செயல்பட்டு கொண்டிருந்த அந்த

யூதர்களை விரட்டியிருக்கலாம். அவர்களின் கோரிக்கையை நிராகரித்திருக்கலாம். ஆனால் அப்படி செய்யவில்லை.

கிறித்தவர்களிடம் யூதர்களுக்காக சிபாரிசு சென்றார்கள் கலிஃபா உமர் (ரலி) அவர்கள். கிறித்தவர்கள் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக கோபம் கொள்ளவில்லை உமர் (ரலி) அவர்கள்.

தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடத்தில் தங்களுக்கு கீழ் வாழும் கிறித்தவர்கள் தன் கோரிக்கையை மறுப்பதா? என்ன ஆணவம் உங்களுக்கு? என்று சினங் கொள்ளவில்லை. நிர்ப்பந்தித்து இருவேறு இனத்தவரை குடியமர்த்தினால் அங்கு ஒற்றுமை குலையும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள் கலிஃபா அவர்கள். எனவே, அவர்களிடம் சமாதானம் பேசினார்கள்.

"கலிஃபா அவர்களே இந்த யூதர்களை நீங்கள் அறியமாட்டீர்கள். அவர்களுக்கு இருக்க இடம் கொடுத்தால் மிகுந்த பிரச்சனைகளை இந்நிலத்தில் இந்த யூதர்கள் உருவாக்கிவிடுவார்கள்" என்று கூறினார்கள் கிறித்தவர்கள்.

அவர்களால் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படுமாயின் அதற்கான நஷ்ட ஈட்டை தானே தருவதாக வாக்களிக்கிறார்கள் கலிஃபா. இதன் பின்னர் 50 யூத குடும்பங்களை மட்டும் ஜெருசலத்தில் குடியேற கிறித்தவர்கள் சம்மதிக்கிறார்கள். இந்த செய்தி யூதர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. யூதர்கள் மீண்டும் கோரிக்கையை முன்வைக்கிறார்கள்.

"குறைந்த பட்சம் 100 குடும்பங்களை யாவது குடியமர்த்த உரிமை பெற்றுத் தாருங்கள்" என்று கோருகிறார்கள்.

மீண்டும் கிறித்தவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தப்படுகிறது. இந்த முறை 70 குடும்பங்களுக்கான அனுமதியை உமர் (ரலி) பெற்றுவிட்டார்கள். இதுவே இறுதியாக் கப்பட்டு 70 குடும்பங்கள் ஜெருசலத்தில் குடியமர்த்தப்பட்டன. இவ்வாறாக அந்த வரலாறு நீள்கிறது.

கலீஃபா உமர் (ரலி) அவர்கள் அந்த இடத்தின் ஆட்சியாளர். சர்வ அதிகாரமும் படைத்தவர். அவர் இட்டதே சட்டம் எனும் நிலையில் அவர் எந்த உத்தரவும் இடவில்லை, யூதர்களுக்காக கிறித்தவர்களிடம் பேச்சு வார்தை நடத்துகிறார். தனக்கு கீழ் வாழும் வெவ்வேறு சமூகங்கள் நிம்மதியாகவும் ஒற்றுமையுடனும் வாழவேண்டும் என்பதும் அவர்களுக்கிடையே நீதிநிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதும் இஸ்லாம் அவருக்கு கற்றுக்கொடுத்த நெறிமுறை. இது தான் இஸ்லாமிய ஆட்சி.

யூதர்கள் தங்கள் வாழ்நாளில் ஏதாவது ஒரு ஆட்சியின் கீழ் நிம்மதியாக வாழ்ந்தார்கள் என்றால் அது இஸ்லாமிய ஆட்சியில் தான் என்று யூத வரலாற்றாசிரியர்களே குறித்து வைத்திருக்கும் அளவிற்கு இஸ்லாமிய ஆட்சியில் நீதி நிலைத்திருந்தது. குடிமக்களின் உரிமை மதிக்கப்பட்டது.

**நாட்டினை துண்டாட துடித்துக் கொண்டிருக்கும் பாசிச சக்திகளுக்கு இதில் பாடமுண்டு. அவர்களுக்கு மட்டுமல்ல பர்மா, இலங்கை என தன் சொந்த மக்களை கொன்று குவித்து சுகம் காணும் ஆட்சியாளர்களுக்கும் இதிலே நிச்சயம் பாடமுண்டு.**

**அதே சமயம், தன் சொந்த நாட்டை விட்டு விரட்டப்பட்ட நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு கட்டளையிட்டான்,**

**தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான், (அல்குர்ஆன் - 9:13)**

# பதிலடி தந்த ஈரான் பதுங்கிய அமெரிக்கா



உலகமே அவர் என்ன சொல்லப்போகிறார் என்று அன்றைய தினம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஏனெனில் பேசப்போவது உலகச் சட்டாம்பிள்ளை அமெரிக்காவின் திமிர் பிடித்த அதிபர் டொனால்ட்டிரம்ப். உலகத் தையே தன்னுடைய அடாவடித்தனங்களால் பயமுறுத்திக் கொண்டிருந்த டொனால்ட் டிரம்பின் அமெரிக்கப்படைகள் மீது ஈரான் நேற்றைய தினம் தான் ஏவுகணைகள் வீசி தாக்குதல் நடத்தியிருந்தது. எனவே, நிச்சயம் பதிலடி அல்லது போர் என்று தான் டொனால்ட் டிரம்ப் அறிவிப்பார் என எதிர்பார்த்து பலர் காத்திருந்தனர். ஆனால், போர் வல்லுனர்கள் பலர் அமெரிக்காவிற்கு அதற்கான துணிச்சல் நிச்சயம் கிடையாது என்றே கணித்தனர். கடைசியில் அவர்களின் கணிப்பே வென்றது.

## ட்விட்டரில் டிரம்ப்

முந்தைய தினம் தான் ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படைகள் தங்கும் முகாம்கள் இரண்டை நோக்கி ஈரான் வெற்றிகரமாக ஏவுகணைத் தாக்குதலை நிகழ்த்தியிருந்தது. தாக்குதல் நிகழ்ந்தவுடன் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ட்விட்டரில், “எல்லாம் நன்மைக்கே, ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்தளங்கள் இரண்டை ஈரானின் ஏவுகணைகள் தாக்கியுள்ளன. எவ்வளவு பேர் இறந்தனர், எவ்வளவு சேதம் என்பது குறித்து மதிப்பீடு நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை எல்லாம் நன்றாகவே உள்ளது. உலகின் எந்த பகுதியிலும் நாம் தான் பலமான, தரமான இராணுவம். நான் நாளை காலை உங்களுக்கு அறிக்கை அளிக்கிறேன்” என்று கூறியிருந்தார். எனவே, நிச்சயம் பதிலடி ஏதாவது கொடுத்து விட்டு அல்லது கொடுப்பது குறித்து டிரம்ப் ஏதாவது கூறுவார் என எதிர்பார்த்து பத்திரிகை யாளர்கள் கூடியிருந்தனர். ஆனால், அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

## தலைகவிழ்ந்த டிரம்ப்



“தங்கள் தரப்பில் யாரும் இறக்கவில்லை. தங்களுக்கு பெரிய சேதம் ஏதுமில்லை”, என்று தலை கவிழ்ந்தவண்ணம் டிரம்ப் கூறியபோது உலகம் அதை நம்பவில்லை. சேதங்களை மதிப்பீடு செய்ய உலகத் தொழில்நுட்ப வல்லுனர்களான அமெரிக்காவிற்கு ஒருநாள் தேவைப்பட்டது என்பதை நம்ப யாரும் தயாராக இல்லை. டொனால்ட் டிரம்ப் அதனை தெரிவித்த விதமும் உடல்மொழியும் நிச்சயம் அமெரிக்காவிற்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியது. பின்னர் வந்த செய்திகள் இதை உறுதிப்படுத்தின.

“1979ம் ஆண்டு போன்றே இப்போதும் மத்திய கிழக்கு நாடுகளிலும் அதனை தாண்டியும் ஈரானின் அழிவு தன்மைகளையும் உறுதியை சீர்குலைக்கும் தன்மைகளையும் பல தேசங்கள் சகித்துக் கொண்டு வருகின்றன. ஆனால் அந்த நாட்கள் இப்போது முடிந்து விட்டன” என்று கூறி டிரம்ப் புலம்பினாலும் இன்னமும் அமெரிக்காவிற்கு அந்த நாட்களை ஈரான் நினைவுபடுத்திக் கொண்டே இருப்பதை உறுதிப்படுத்தியது.

அதே சமயம் டிரம்ப் ஈரான் குறித்து நீலிக்கண்ணீரும் வடித்தார். “உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. வீட்டில் செழிப்பு, உலக நாடுகளுடன் நேசம் என அனைத்தும் உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறது. யாரெல்லாம் அமைதியை விரும்புகிறார்களோ அவர்களுடன் அமைதியாக செல்லவே அமெரிக்கா விரும்புகிறது” என்று கூறினார்.

“ஈரானை செழித்து வளரச் செய்யவும் அதன் மகத்தான திறனை பயன்படுத்திக் கொள்ளும் படியும் ஓர் ஒப்பந்தத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்“ என்று கூறிய டிரம்பை போர் வல்லுனர்கள் கேலியாக பார்த்தனர். உலக வல்லரசு என பீற்றிக் கொள்ளும் அமெரிக்காவின் படைகளை ஏவுகணை வீசி தகர்த்த ஒரு நாட்டின் வளர்ச்சிக்காக ஒப்பந்தம் போடப்பட வேண்டும் என்று கூறிய அமெரிக்க அதிபரின் வார்த்தைகளை உற்று நோக்கும் போது உண்மையிலேயே ஈரானை கண்டு அஞ்சி நடுங்கி விட்டார் என்றே அவர்கள் கணித்தனர்.

அமெரிக்கா ஏன் ஈரானை தாக்காமல் அவர்களுடன் சமாதானம் பேசிக்கொண்டிருந்தது என்றால் ஈரானுடைய பலமும் அவர்களின் தீரமும் அப்படியானது.

## ஈரான் ஏன் அமெரிக்காவை தாக்கியது

ஈரானின் இரண்டாம் நிலைத் தலைவரும் குத்ஸ் படைகளின் தளபதியுமான காசிம் சுலைமானி அவர்களை அமெரிக்கா நயவஞ்சகமாக ஈராக்கிற்கு வரவழைத்து அவரை ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டு வீசி 03 ஜனவரி 2020 அன்று கொலை செய்தது.

உலக நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு மாற்றமாக ஒரு நாட்டின் தலைவரை கொலை செய்து, அதுவும் மற்றொரு நாட்டில் வைத்து கொலை செய்து தான் ஒரு கொலைகார நாடுதான் என்பதை உறுதி செய்தது அமெரிக்கா.

டொனால்ட் டிரம்ப்பின் நேரடி உத்தரவின் பேரில் இந்த தாக்குதல் நடந்ததாக அமெரிக்கா



தெரிவித்தது. அமெரிக்கா தேன் கூட்டில் கை வைத்து விட்டது, கொள்ளிக்கட்டையை எடுத்து தலையை சொறிந்து கொண்டதற்கு சமமானது இது என்று உலக போர் விமர்சகர்கள் தெரிவித்திருந்தனர்.

ஈரான் நிச்சயமாக பதிலடி கொடுக்கும். அது அமெரிக்காவிற்கு பெரும் அவமானகரமானதாகவே இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இவர்கள் எதிர்பார்ப்பு எதையும் ஈரான் பொய்யாக்கவில்லை. தங்களுடைய தலைவரின் இறப்பிற்கு துக்கம் அனுஷ்டரித்த

பின்னர் தாங்கள் யார் என்பதை உலகிற்கு குறிப்பாக அமெரிக்காவிற்கு காட்டியது.

அமெரிக்காவின் மாபாதக கொலை செயலுக்கு பதிலடியாகவே ஈரான் அமெரிக் காவை தாக்கியது. பதிலடிகள் கடுமையாகவும் அமெரிக்காவை கலங்கவைக்கும் அளவிலும் இருக்கும் என்று ஈரானின் தலைவர் கொமைனி ஏற்கனவே ஊடகங்களில் தெரிவித்திருந்தார். அதன்படி அமெரிக்க படைகள் ஈராக்கில் தங்கி யிருந்த தளங்களின் மீது 08 ஜனவரி 2020இல் ஈரான் ஏவுகணைகளை வீசி தாக்கியது. அய்ன் அல் ஆசாத் விமானதளத்திலும் அல்அன்பார் என்ற இடத்திலும் இந்த தாக்குதல்கள் நடைபெற்றன. இந்த தாக்குதல்கள் மிகத் துல்லியமாகவே இருந்தன. அமெரிக்காவின் ஏவுகணைகளை தடுக்கும் அமைப்புகள், ஏவுகணைகளை வானிலேயே தடுத்து அழிக்கும் அமைப்புகள் எதுவும் ஈரானின் ஏவுகணை தொழில்நுட்பத்தின் முன் எடுபடவில்லை.

## அமெரிக்காவிற்கு ஏற்பட்ட இழப்பு

இந்த தாக்குதலில் 80 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதாக ஈரான் அறிவித்தது. முதலில் இந்த தாக்குதலில் தங்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லை என்றும் யாரும் இறக்கவில்லை என்றும் தெரிவித் திருந்த டிரம்ப்பின் பொய் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. இந்த தாக்கு தலில் இறந்தவர்களின் தகவல்கள் தெளிவாக வெளியாகவில்லை என்றாலும் இந்த தாக்குதலில் பலத்த மூளைக்காயம் (traumatic brain injuries (TBI) ) அடைந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்ததாக பி.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்தது. அதனை பின்னர் 64 எனநியூயார்க்டைம்ஸ்பத்திரிகைபதிவிட்டது.



எனவே, இதைக் கொண்டு மதிப்பீடு செய்தால் நிச்சயம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று போர் வல்லுனர்கள் கணித்தனர். ஆனால் இவர்களுக்கெல்லாம் தலைவலி, அதற்காகத்தான் இவர்கள் சிகிச்சை பெற்றுவருகிறார்கள் என டிரம்ப் கதைவிட்டார். ஆனால் இந்த கதை எடுபடவில்லை.

இப்படி மூளைக்காயம் அடைந்தவர்கள் அதிலிருந்து மீள குறைந்தது 10 வருடங்களுக்கு மேலாகி விடும். அதன் பின்னரும் அவர்கள் மற்றவர்களின் உதவியின்றி சாதாரணமாக வாழ இயலாது. எனவே, இந்த 64 பேரும் கிட்டத் தட்ட நடைபிணங்களே. தன்னுடைய தாக்கு தலை துல்லியமாக நிகழ்த்திய ஈரான் அத்துடன் இருந்துவிடவில்லை. தன்னுடைய அடுத்த தாக்குதலுக்கு திட்டமிட்டது.

## ஈரானின் அடுத்த தாக்குதல்

ஈரான் தன் தாக்குதலை கனக்கச்சிதமாக நடத்தி முடித்திருந்தாலும் அத்துடன் திருப்தி அடைந்து கொள்ளவில்லை. "நாங்கள் அமெரிக் காவுடன் போரை விரும்பவில்லை. என்றாலும் எங்களுடைய தளபதியை கொன்றதற்கான பதிலடியை தான் தந்திருக்கிறோம். அதுவும் பன்னாட்டு விதிகளுக்கு உட்பட்டு தான்" என்று ஈரான் அறிவித்திருந்தது. அமெரிக்காவும் நாங்களும் அமைதியைத் தான் விரும்புகிறோம். இத்துடன் இதனை முடித்துக் கொள்வோம் என்ற பாணியில் அறிக்கைகள் விட்டது.

எனவே, போர் பதற்றம் தணிந்ததாக உலகமே கணித்தது. விலையேறிய பெட்ரோலியம் விலை குறைந்தது. பங்கு சந்தைகள் நிதானமாகின. தங்கம் விலை குறைந்தது. அமெரிக்கா இனி ஈரான் தாக்காது என்ற எண்ணம் கொண்டது. பின்னர் ஈராக்கிலும் வளைகுடா நாடுகளிலும் நிறுத்தி வைத்திருந்த தன் படைகளுக்கு எச்சரிக்கையை வாபஸ் வாங்கியது. இதனால் அமெரிக்கப் படைகள் தங்களுடைய பாதுகாப்பு

அம்சங்களை குறைத்துக் கொண்டு இயல்பு நிலைக்கு திரும்பின. இந்த சமயத்தில் தான் ஏவுகணைகளைக் கொண்டு இந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இந்த தாக்குதலிலும் அமெரிக் கப்படைகளுக்கு ஏற்பட்ட சேதம் என்ன என்பது குறித்து வெளியுலகிற்கு தெரியவில்லை.

இதன் பின்னர் ஜனவரி 27ம் நாள் மீண்டும் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது தாக்குதல் நடைபெற்றது. மூன்று ஏவுகணை களைக் கொண்டு இந்த தாக்குதல் நிகழ்த்தப் பட்டது. இந்த தாக்குதலிலும் எவ்வளவு உயிர் சேதம், பொருள் சேதம் என்பதை அமெரிக்கா வெளியிடவில்லை.

## காசிம் சுலைமானியை கொன்றவரை கொன்று பழிதீர்ப்பு

தாலிபான் இராணுவம் தளபதி காசிம் சுலைமானி அவர்களின் கொலைக்கு காரணமாக இருந்தவரை விமானத்தில் பயணித்த போது சுட்டு வீழ்த்தியது. சி.ஐ.ஏ. எனப்படும் அமெரிக்க உளவுத்துறையின் தலைவர்களில் ஒருவரான மைக்கேல் டி ஆண்டிரியா என்பவர் தான் சுலைமானி அவர்களின் கொலைக்கு காரணம். “இருட்டு அரசக்குமாரர், அயதுல்லா மைக்“ என்ற புனைப்பெயர்களுடன் செயல்பட்டு வந்த இவர் கடந்த ஜனவரி 27 2020 அன்று தாலிபான் களால் கொல்லப்பட்டார். தாலிபான்கள் இவர் பயணித்த அமெரிக்க E-11A BACN விமானத்தை சுட்டு வீழ்த்தினர். இவருடன் சேர்ந்து சில அமெரிக்க வீரர்களும் பலியானதாக தகவல்கள் கூறின. மற்றொரு செய்தி இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறின. இந்த விமானங்களில் இருந்த பல முக்கிய இராணுவ ஆவணங்களை தாலிபான்கள் கையகப்படுத்தி யுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த தாக்குதலின் பின்னணியில் ஈரான் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலின் மூலம் ஈரான் அமெரிக்க முக்கியஸ்தர்களின் பிரயாண விபரம் முதற்கொண்டு தன் கையில் மிகத் துல்லியமாக வைத்திருப்பது உறுதியாகி உள்ளது. இது அமெரிக்காவிற்கு நிச்சயம் பயத்தை உண்டாக்கும் விஷயமாகும்.

## இதற்கு முன்னரே காசிம் சுலைமானியை கொல்ல முயற்சி

காசிம் சுலைமானியை அவ்வளவு சுலபமாக கொலை செய்து விட முடியாது. ஏனெனில் இதற்கு முன் பலமுறை அவரை கொலை செய்ய முயற்சிகள் நடந்துள்ளன. அந்த முயற்சி களிலிருந்து அவர் வெற்றிகரமாக தப்பி வந்துள் ளார். குத்ஸ் படைகள் அந்த முயற்சிகளை தடுத் துள்ளன. இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் தலைவரான காசிம் சுலைமானியை கொல்ல அக்டோபர் 3, 2019-இல் ஒரு முயற்சி நடைபெற் றது. அதை வெற்றிகரமாக ஈரானின் உளவுத்துறை முறியடித்தது. “ஹிப்ரு-அரபு” உளவுப்படையை சேர்ந்த 3 பேர் சுலைமானியை கொலை செய்வ தற்காக பணியமர்த்தப் பட்டு அவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

“ஹிப்ரு-அரபு” படை என்பது இஸ்ரேலும் சவுதியும் சேர்ந்த உளவுப்படை. 2009ம் ஆண்டு ஜனவரி 20ம் தேதியிலிருந்து 2009ம் ஆண்டு பெப்ரவரி 9ம் தேதி வரை பாத்திமா நாட்கள் என்ற பெயரில் பெருமானார் (ஸல்) அவர்களின் மகளாரின் நினைவு ஈரானில் கடைபிடிக்கப் பட்டது. இந்த நாட்களில் சுலைமானி அவர்கள் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். அப்போது 500 கிலோ வெடிபொருட்களைக் கொண்டு அவரை கொலை செய்ய சதி திட்டம் தீட்டப் பட்டிருந்தது. அதனை குத்ஸ் படைகள் தங்கள் உளவுத்துறை மூலம் கண்டறிந்து முறியடித்தன. அந்த மூவரையும் கைது செய்தனர். இதே போல் இதற்கு முன் பலமுறை சுலைமானியை கொலை செய்ய நடந்த பல முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்த முறை சமாதானம் பேசுவதாக அழைத்து அவரை கொலை செய்துவிட்டனர்.

## காசிம் சுலைமானியை கொலை செய்தது எப்படி?


அப்துல் மஹ்தி

ஈரானுக்கும் சவூதி அரசுக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடந்து வருகிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப் ஈராக்கின் பிரதமர் அப்துல் மஹ்தி அவர்களை தொடர்பு கொண்டு ஈரானுக்கும் சவூதிக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தும் சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யும்படி கோரினார். சவூதிக்கும் ஈரானுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்த காசிம் சுலைமானி கொலை செய்யப்பட்ட தினம் ஈராக்கின் பிரதமரும் சுலைமானி அவர்களும் சந்தித்து பேசுவதாக இருந்தது. சவூதி அரசாங்கத்தின் சார்பில் முன்வைக்கப்பட்ட சமாதான திட்டத்தை ஈரான் ஏற்றுக்கொள்கிறதா என்பது குறித்தே இந்த பேச்சுவார்த்தை. எனவே, ஈராக்கின் பிரதமர் காசிம் சுலைமானியுடன் ஈராக்கில் பேச்சுவார்த்தை நடத்த நாள் குறிக்கிறார். இடம் தேர்வு செய்கிறார். இதனை அமெரிக்காவிற்கும் தெரிவிக்கிறார். அமெரிக்கா தனக்கே உரிய நயவஞ்சகதனத்துடன் சுலைமானி வரும் நாளை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்தது. அவர் விமானநிலையத்திற்கு வந்து விட்ட செய்தி கிடைத்தவுடன் ஆளில்லா விமானங்களை அனுப்பி அவர் சென்ற காரின் மீது ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தி அவரை கொன்றது. விமான நிலையத்தில் அவருடன் ஈராக்கின் போராட்ட குழு தலைவர்களின் ஒருவருமான அபூ மஹ்தி அல் முஹந்திஸ் அவர்களும் இதில் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் இந்த சதித் திட்டங்களை ஈராக்கின் பிரதமர் அப்துல் மஹ்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அமெரிக்காவை கடுமையாக சாடினார். ஈராக்கின் இறையான்மையை அமெரிக்கா சீர்குலைத்து விட்டதாகவும் அத்துடன் ஈராக்கை விட்டு வெளியேறுமாறும் அமெரிக்காவை கடுமையாக பேசியிருந்தார்.

அமெரிக்கா பதிலுக்கு அப்படியானால் ஈராக்கை சீர்அமைக்க நாங்கள் செலவு செய்த தொகையை ஈராக் நட்டஈடாக தரவேண்டும் என்று கூறி பதிலுக்கு ஈராக்கை மிரட்டியிருந்தது. ஆக மொத்தத்தில் ஈராக் அமெரிக்காவின் கைகளை விட்டு நழுவி விட்டது என்று அரசியல் வல்லுனர்கள் கூறினர்.

எனவே, நடந்து முடிந்தவற்றின் அடிப்படையில் தற்போது ஈரானே அமெரிக்காவை வீழ்த்தியுள்ளது என்று போர் வல்லுனர்கள் கணிக்கின்றனர்.

## யார் இந்த காசிம் சுலைமானி?



கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக அமெரிக்காவிற்கு பெரிய தலைவலியாக இருந்தவர் தான் காசிம் சுலைமானி. 1957ம் ஆண்டு பிறந்த இவர் 1998ம் ஆண்டிலிருந்து தான் சாகும் வரை ஐ.ஆர்.ஜி.சி எனப்படும் புரட்சிகர காவல்படையின் தலைவராக (மேஜர் ஜெனரலாக) இருந்தவர். ஒரு கட்டிட பணியாளராக தன் வாழ்நாளை தொடங்கிய சுலைமானி பின்னர் 1979ம் புரட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். ஈரானின் குர்திஸ்தான் பகுதியில் நடந்த போர்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் போது அவர் பெரிய தலைவர் எல்லாம் கிடையாது. ஆனால் அந்த போர்கள் அவருக்கு நிறைய அனுபவத்தை கற்றுக் கொடுத்தன.

## சிறந்த இராணுவ தந்திரம்

அதன் பின்னர் 8 வருடங்கள் அமெரிக்க ஆதரவுடன் ஈராக் நடத்திய போரில் எல்லா இராணுவ நடவடிக்கைகளிலும் சுலைமானி அவர்களின் பங்களிப்பு உள்ளது என்றால் அது மிகையல்ல. ஈராக்கில் நடந்த மறைமுகமான பல இராணுவ நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர் இவர். ஈரான் ஈராக்கை தாண்டி ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான் என இவருடைய செல்வாக்குக்கு கட்டுப்பட்ட நபர்கள் உள்ள நாடுகள் ஏராளம். ஹமாஸ் அமைப்பினருக்கு இராணுவப்பயிற்சி அளித்து அவர்களுக்கு ஏவுகணை தொழில்நுட்பத்தை கற்றுக் கொடுத்து அவர்களை இஸ்ரேல் இராணுவத்திற்கு பெருத்த தலைவலியாக மாற்றியதும் இவர் தான். இராணு வத் தந்திரங்களில் மட்டுமல்லாமல் இராஜதந்தி ரத்திலும் இவர் சிறந்தவராக இருந்தார்.

எனவே, விரும்பினாலும் விரும்பாவிட்டா லும் உலகில் பல நாடுகளில் நடக்கும் பிரச்சனை களுக்கு இவருடன் பேரம் பேச வேண்டிய நிர்ப் பந்தம் அமெரிக்காவிற்கு உருவானது. ஷியா முஸ்லிமாக இருந்தாலும் சுன்னி முஸ்லிமாக இருந்தாலும் அவர்களுடன் இவர் பேணிய உறவு அலாதியானது. இதன் காரணமாகவே ஈராக்கின் துணை அதிபராக இருந்த ஒசாமா அல் நுஸைஃபி அவர்கள் சுலைமானி அவர்களின் தாயாரின் ஜனாசா தொழுகைக்கு டெஹ்ரான் சென்று கலந்து கொண்டார்.

2003ம் ஆண்டு ஈராக் ஆக்கிரமிப்பிற்குபின் அமெரிக்காவிற்கு எதிராக போராடிய சுன்னி முஸ்லிம்களுக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் இரு பிரிவுக்கும் தேவையான உதவிகளை சுலைமானி செய்தார். இதன் மூலம் ஈராக்கின் முக்கிய பிரச்சனைகளில் முடிவு செய்யும் மையப்புள்ளியாக இவர் மாறினார். ஈராக்கில் நடக்கும் எந்த ஒன்றிற்கும் இவருடைய தலையீடு இல்லாமல் எந்த முடிவையும் எடுக்க இயலாது என்ற நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டது.

## அமெரிக்காவின் தோல்விக்கு காரணம்

அமெரிக்கா ஈராக்கில் தோற்றதற்கான காரணத்தையும் தன் படைகளை பின்வாங்கிய தற்கான காரணத்தையும் ஆளுமை செலுத்த இயலாமல் போனதற்கான காரணத்தையும் பின்வருமாறு வல்லுனர்கள் விளக்குகின்றனர். அமெரிக்கா 2003இல் ஈராக்கை ஆக்கிரமித்த பின்னர் அதற்கு அதன் ஆணைகளை கேட்டு நடக்கும் தேவையான வலைப்பின்னல்கள் இல்லாமல் போனது. அதற்கு காரணம் அதற்கான முன்னேற்பாடுகளை ஏற்கனவே ஈராக்கில் அமெரிக்க செய்யவில்லை. அல்லது செய்ய இயலாமல் போனது.

ஆனால் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக சுலைமானி ஈராக்கில் தன் வலைப்பின்னல்களை சிறப்பாக செய்து வந்தார். சதாம் உசேன் அதிப ராக இருந்த போதே சுலைமானி ஈராக்கில் தன் ஆளுமையை கொஞ்சம் கொஞ்சமாக விரிவு செய்து கொண்டே வந்தார். ஷியா முஸ்லிம், சுன்னி முஸ்லிம் ஆகிய இரு பிரிவினருடனும் இவருக்கு நல்ல உறவு இருந்தது. இரு தரப்பி னரையும் அடுத்தவர்கள் குறித்து எது மாதிரி யான தவறான கருத்துகளை கொண்டிருக்கிறார் கள் என்பதை அவர்களுக்கு புரிய வைத்து இரு வருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தினார்.

## சுலைமானிக்கு கிடைத்த உளவுத்தகவல்கள்

இதுவே அவர் தன் வலைப்பின்னலை ஈராக் முழுவதும் மட்டுமன்றி வளைகுடா நாடுகள் முழுவதும் பரப்ப போதுமானதாக இருந்தது. இவர்கள் உணர்வுபூர்வமாக சுலைமானிக்கு உதவினார்கள். இதன் காரணமாக அவருக்கு கிடைத்த உளவுத்தகவல்கள் 100 சதவீதம் நம்பக்கூடியதாக இருந்தது.

ஆனால் அமெரிக்காவோ தன் இராணுவத் தையே முழுமையாக நம்பி இருந்தது. அதில் பணியாற்றியவர்கள் உணர்வு பூர்வமானவர்கள் அல்லர். அவர்கள் இராணுவத்தில் கட்டாய சேவைக் காரணமாகவோ அல்லது சம்பளத்திற் காகவோ பணியாற்றினார்கள். இதன் காரண மாகவே பல்வேறு சம்பவங்களில் அமெரிக்க இராணுவவீரர்கள் அவர்களின் அதிகாரிகளை தங்களின் துப்பாக்கிளாலே சுட்டுக் கொன்றார்கள்.

சுலைமானி முறையாக எந்த இராணுவக் கல்லூரியிலும் படித்தவர் அல்லர். ஆனால்

அவருடைய போர் வியூகங்கள் எல்லோருடைய விழிகளையும் விரிவடைய வைத்தது என்றால் மிகையல்ல.

“அவர் அரசியல்ரீதியாக புத்திசாலி, அவர் எல்லாரிடமும் உறவு வைத்திருந்தார். உலகின் எல்லா பகுதிகளிலும் தொடர்பு வைத்திருந்தார்” என்று கூறுவது மொசாத்தின் முன்னாள் தலைவர் மெய்ர் டாகன் (Meir Dagan) என்பவர்.

## சுலைமானியின் இயல்புகள்

சுலைமானி அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் எழுந்துவிடுவார். இரவு 9.30 மணிக்கெல்லாம் படுக்கைக்கு சென்று விடுவார். சுலைமானிக்கு கடுமையான முதுகுவலி இருந்தது என்றாலும் அவர் தன்னை வலிமையற்றவராக உணர்ந்ததே இல்லை. தன் மனைவியை மிகவும் மதிப்போடு நடத்துபவர். அவருக்கு மூன்று மகன்கள் இரண்டு மகள்கள். கண்டிப்பான அதே சமயம் அன்பான தந்தை அவர். மலேசியாவில் வாழும் அவரின் மகள்களில் ஒருவரான நர்கீஸ் என்பவரைப் பற்றி அவர் அதிகம் கவலைப் படுவார். நர்கீஸ் இஸ்லாத்தின் விழுமியங்களில் இருந்து விலகி செல்கிறார் என்பதே அவரின் கவலை. சுலைமானி இசையை வெறுப்பார்.

சுலைமானி தந்தை பட்ட கடனுக்காக சிறு வயதிலேயே வீட்டைவிட்டு சென்று கட்டிட கூலியாளாக வேலை செய்தவர். மன்னர் ஷாவின் ஆட்சிக்காலத்தில் அவருடைய பெற்றோர்கள் விவசாயம் செய்வதற்காக 900 டோமான் (ஈரானிய பணம்) கடன் பெற்றார்கள். அதை திருப்பி செலுத்த இயலவில்லை. அவர் இதே போல் கடன் பெற்ற உறவினர் சிறுவன் ஒருவனுடன் கட்டிட வேலைக்கு சென்றார். ஒரு நாளைக்கு 2 டோமான் கூலி. 8 மாதங்களுக்கு பிறகு அவர் தன் பெற்றோர் பெற்ற கடன் தொகையை திரட்டினார். வீடு திரும்பினார். அதன் பிறகு அவர் பெரிய படிப்பு எதுவும் படிக்கவில்லை. ஆனால் உடற்பயிற்சி செய்வது ஆன்மீக உரைகள் கேட்பது என தன்னை இஸ்லாத்துடன் இணைத்தே வளர்த்துக் கொண்டார்.

1979இல் அயாதுல்லா கொமைனி அவர்களின் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர் புரட்சிகரப்படையில்



தன்னை இணைத்துக் கொண்டார். இந்தப்படை ஈரானின் இராணுவம் புரட்சி செய்து ஆட்சியை பிடிப்பதையும் கொமைனிக்கு அவர்களால் ஏற்படும் ஆபத்தை தடுக்கும் வண்ணமும் உருவாக்கப்பட்டது. இது கொமைனியின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும். இந்தப்படையின் காரணமாகவே அமெரிக்காவால் ஈரானில் எந்தவிதமான இராணுவப்புரட்சியையும் உருவாக்க இயலாமல் போனது.

## ஈரான் ஈராக் போர்

ஈரான் ஈராக் போரில் சுலைமானிக்கு கொடுக்கப்பட்டது ஒரே ஒரு வேலை தான். அங்கு போரிடும் இராணுவ வீரர்களுக்கு தேவையான தண்ணீரை தடையின்றி கொடுப்பது. 55 நாட்களுக்கு மட்டுமே இந்த வேலை என்று கூறி அனுப்பப்பட்ட அவர் பின்னர் 8 ஆண்டுகளுக்கு அங்கேயே தங்கி இந்த வேலை மட்டுமன்றி பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டி இருந்தது. ஆனால் அவர் சோரவில்லை. இது தான் அவருடைய பலம். ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் முடிந்த வரை போராடுபவர் அல்லர் அவர், அந்த காரியத்தை முடிக்கும் வரை போராடுபவர். அதற்கு 5 நாட்கள் தேவைப்பட்டாலும் சரி 5000 நாட்கள் தேவைப்பட்டாலும் சரி.

ஒவ்வொரு போருக்கு முன்னரும் அவர் தன் படையினருடன் ஆரத்தழுவி அவர்களுக்கு ஸலாம் கூறி அனுப்பி வைப்பது அவர் வழமை. அதேப்போல் தன் படையினருடன் பேசும் போதும் இறந்த தன் வீரர்களின் பெருமையையும் இறைவன் அவர்களுக்காக வழங்கப்போகும் நற்கூலிகளையும் எடுத்துக் கூறுவதுடன் தாங்கள் இன்னும் இறைவழியில் இன்னுயிரை

நீக்கவில்லையே என்று கூறி பாவமன்னிப்பும் கோருவார்.

## குத்ஸ் தலைவராக பொறுப்பேற்பு

*1998இல் சுலைமானி குத்ஸ் படைகளின் தலைவராக பொறுப்பேற்றார். தான் பொறுப் பேற்றவுடன் ஹிஸ்புல்லாவுடனும் அதன் தலை வர்களான ஹசன் நஸ்ரல்லா மற்றும் முக்னியுடன் தன் உறவை வலுப்படுத்திக் கொண்டார். அப்போது தெற்கு லெபனான் இஸ்ரேலின் வசம் இருந்தது. தெற்கு லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்து 16 வருடங்கள் ஆகி இருந்தன. சுலைமானி தன் குத்ஸ் படைகளை லெபனானுக்கு ஹிஸ்புல்லாவிற்கு உதவ அனுப்பி வைத்தார். குத்ஸ் படையினர் அவர்களுக்கு பயிற்சி அளித் தார்கள், உதவினார்கள், ஆயுதங்களை தந்தார்கள், திட்டமிட்டு கொடுத்தார்கள். இறுதியில் கடுமை யான தாக்குதல் காரணமாக 2000இல் இஸ்ரேல் லெபனானை விட்டு வெருண்டு ஓடியது. இது சுலைமானியின் மிகப்பெரிய வெற்றியாக பார்க்கப்பட்டது.*

*அதன் பின்னர் அமெரிக்காவை எதிர்க்கும் பல்வேறு இஸ்லாமிய குழுக்களுக்கு சுலைமானி உதவி செய்து வந்தார். இதில் ஹமாஸ் அமைப் பிற்கு இவர் செய்த உதவிகள் முக்கியமானவை. அவர் அனைவரையும் விட சிறந்தவராகவும், வேகமானவராகவும் இருந்தார். அமெரிக்கா வையோ மேற்கத்தைய நாடுகளையோ எதிர்க் கவும் அவர்களின் வளர்ச்சியை இஸ்லாமிய நாடுகளில் தடுக்கவும் கிடைத்த எந்த வாய்ப்பை யும் அவர் பயன்படுத்திக் கொள்ள தவறவே இல்லை.*

*2004ம் ஆண்டுகளில் ஈராக்கில் அமெரிக்க இராணுவம் சாலையோரங்களில் புதைத்து வைக்கப்பட்ட ஒருவகையான குண்டுகளினால் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. அன்றைய காலக்கட்டத்தில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர்களில் 20 சதவீதத்திற்கு மேற்பட்ட அமெரிக் கப்படையினர் இந்த குண்டுகளினாலேயே இறந்தார்கள். இந்த குண்டுகள் அந்த பகுதி களில் உள்ள நடமாட்டத்தினை உணர்ந்து வெடிக்கும் வகையிலான அதிநவீன குண்டு. இந்த குண்டுகளை விதைக்கும் திறன் குத்ஸ் படையினருக்கு மட்டுமே உண்டு என்பதும் இந்த குண்டுகள் சுலைமானியின் ஏற்பாடு என்பதும் அனைவருக்கும் வெட்ட வெளிச்சம்.*

## சுலைமானியை கைது செய்ய நடந்த முயற்சி?

*2006ம் ஆண்டில் ஈரானின் புரட்சிப்படை தலைவர் முஹம்மது அலி ஜஃபரியும் காசிம் சுலைமானியும் ஈராக்கின் எல்லையை நோக்கி வருவதாக அமெரிக்க உளவுத்துறை தகவல் தெரிவித்தது. எல்லையில் குர்திஷ் படையினர் அவர்களை வரவேற்க தயாராக உள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. அமெரிக்க படைத் தளபதி மிக் கிரிஸ்டால் (McChrystal) அவர்களை எப்படியும் பிடித்துவிடுவது என தன் படை களுடன் காத்திருந்தார். கடைசியாக அவர்கள் இருந்த இடத்தை மிக்கிரிஸ்டால் கண்டுபிடித் தார். அது ஈராக்கிற்குள் நூறு மைல்கள் உள்ளாக இருந்தது. குர்திஷ் நகரமான எர்பில் என்ற இடத்தில் ஒரு சாதாரண வீடு தூதரகம் என்ற பெயருடன் இருந்தது. அங்கிருந்த யாருக்கும் அங்கே ஒரு தூதரகம் இயங்கி வருவது தெரியாது. அதற்கு காரணம் அங்கே தூதரக அதிகாரிகள் என்ற பெயருடன் மற்ற வேலைகளை செய்து வந்தது தான். உள்ளே நுழைந்த அமெரிக்கப்படைகள் 5 ஈரானியர் களை கைது செய்தது. அவர்கள் அனைவரும் ஈரான் தூதரக பாஸ்போர்டுகளை கையில் வைத் திருந்தனர். ஆனால் அங்கு காசிம் சுலைமானி இல்லை. இவர்கள் வருவதை இவர்களுக்கு முன்னால் அறிந்து கொண்ட காசிம் சுலைமானி அங்கு வரவே இல்லை. இங்கு வருவதாக போக்கு காட்டி விட்டு அவர் வேறோர் இடத்தில் குர்திஷ் தலைவர் மசூர் பர்சானியை சந்தித்துவிட்டு சென்றார்.*

## பழிக்கு பழி

*அதற்கு அடுத்த 9 நாட்களுக்கு பிறகு தெற்கு ஈராக்கில் 5 வாகனங்கள் கர்பலா ப்ரவின்சியல் சென்டரை வந்தடைந்தது. அந்த கார்களுக்குள் இருந்தவர்கள் மிகச்சிறப்பாக ஆங்கிலம் பேசி னார்கள். அமெரிக்க இராணுவ உடை அணிந் திருந்தார்கள். அடையாள அட்டைகளை தொங்கவிட்டிருந்தார்கள். வாகனத்தில் இருந்து எகிறி குதித்து இறங்கி கட்டிடத்திற்குள் நுழைந்த*

அவர்கள் அமெரிக்க இராணுவவீரர்கள் பணியாற்றிய கட்டிடத்திற்குள் நுழைந்து ஒரு இராணுவ வீரரை கொன்று 4 பேரை சிறைபிடித்து சென்றார்கள். சிலமணி நேரத்திற்கு பிறகு அந்த நான்கு பேரும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். குத்ஸ் படைகளை சிறைபிடித்ததற்கு பகரமாகத் தான் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்பது அனைவரும் அறிந்தது.

2008ம் ஆண்டில் முக்ததா அல் சதர் படையினர் தொடர்ந்து அமெரிக்க இராணுவ துருப்புகளை நோக்கி தாக்குதல்களை நிகழ்த்தி யவண்ணம் இருந்தனர். அப்போது அமெரிக்க படைகளின் ஜெனரலாக இருந்த டேவிட் பெர்ரேயஸ் (David Petraeus) ஈராக்கின் அதிபராக இருந்த ஜலால் தலபானி என்பவர் மூலம் சுலைமானியுடன் தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். அப்போது அமெரிக்காவின் தூதரகத்தின் மீதும் அமெரிக்க தளங்களின் மீதும் நடக்கும் தாக்குதல்களை நிறுத்தும்படி சுலைமானியிடம் கோரினார். அதற்கு சுலைமானி இவ்வாறு தாக்குதல் நடத்து பவர்களை சிறைபிடிக்க தன் ஆட்களை அனுப்பியிருப்பதாக கூறினார். அதற்கு டேவிட் பெர்ரேயஸ் “நான் ஞாயிற்றுக்கிழமை பிறந்தவன் தான், ஆனால் போன வாரம் ஞாயிற்றுக்கிழமை அல்ல” என்று கூறினார். அதாவது நான் கைக் குழந்தை அல்ல என்ற பொருள்பட. அதன் பின்னர் சுலைமானி சத்ர் படைகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி போர்நிறுத்தத்தை கொண்டு வந்தார்.

2006ம் ஆண்டு ஹிஸ்புல்லா இஸ்ரேலுடன் நடத்திய 34 நாட்கள் போரின் போது பாக்தா தில் தாக்குதல்கள் குறைந்திருந்தன. இஸ்ரேலு டனான போர் முடிவு பெற்றவுடன் சுலைமானி அமெரிக்க தளபதிக்கு ஒரு செய்தி அனுப்பி இருந்தார். “கடந்த 34 நாட்களாக நீங்கள் பாக்தாத்தில் அமைதியாக இருந்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். நான் சில நாட்கள் பெய்ரூட்டில் சற்று வேலையாக இருந்து விட்டேன்” என்று அதில் அனுப்பி இருந்தார். 2000ம் ஆண்டிலிருந்து 2006ம் ஆண்டுவரை வருடத்திற்கு 100 மில்லியன் டாலரை ஈரான் ஹிஸ்புல்லாவுக்கு தந்து வந்திருக்கிறது.

ஹிஸ்புல்லா வளர்ந்து சுயேச்சையாக செயல்படும் அளவிற்கு வந்து விட்டாலும் இன்றும் அவர்களை ஆட்டுவிப்பது கொமைனியு சுலைமானியும் தான் என்கிறார்கள்.

ஆக இப்படி அமெரிக்காவிற்கு எல்லா வகையிலும் தலைவலியாக இருந்த ஒருவரைத் தான் அமெரிக்கா வஞ்சகமாக வலைவிரித்து சமாதான பேச்சுக்கு என வரவழைத்து கொலை செய்துள்ளது.

ஈரானின் ஹயாதுல்லா கொமைனியின் மறைவுக்கு பிறகு இவருடைய மறைவிற்கு கூடிய கூட்டம் தான் மிகப்பெரியது என்று கூறுகிறார்கள்.

அமெரிக்கா காசிம் சுலைமானியை வேண்டுமானால் கொன்றிருக்கலாம். ஆனால் அவர் உருவாக்கி வைத்துள்ள கட்டமைப்புகளை அவ்வளவு எளிதாக அழிக்க இயலாது என்றே வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

**-அபூ அஃப்ரஹ்**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# வெறுப்பை கக்கிய இந்துத்துவ பிஜேபி தலைவர்கள்

மக்கள் தங்களுக்கு பாதுகாப்பில்லை என கோரிக்கை வைக்கும் போது அந்த ஆட்சியாளர் அவர்கள் பாதுகாப்புக்கு உறுதி தருகிறோம் என சொல்ல வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இந்தியாவை ஆளும் இந்த பிஜேபி அரசு உங்களுக்கு பாதுகாப்பு இல்லை. உங்கள் மீது வன்முறையை நாங்களே ஏவுவோம் என பேசினால் என்ன நடக்கும்? அதனைதயங்காமல்செய்து வெறுப்பை வளர்த்தார்கள். அதனால் நிகழ்காலத்தில் கோட்சேக்களையும் உருவாக்கினார்கள்.

## ஜின்னா சுதந்திரமா?... பாஜகவா?...

மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் டெல்லியில் ஒரு கூட்டத்தில் பங்கேற்கும் போது சொல்கிறார், “உங்களுக்கு ஜின்னா வழி சுதந்திரம் வேண்டுமா அல்லது பாரத் மாதா கி ஜே” வேண்டுமா”

இதன் அர்த்தம் உங்களுக்கு இரண்டு வழி தான் இருக்கிறது. பாஜக சொல்லும் இந்துத்துவத்தை ஏற்றுக்கொண்டு அடிமையாக வாழ வேண்டும்! இல்லையென்றால் பாகிஸ்தானுக்கு ஓடுங்கள்.

இப்படி வெறுப்பு பிரச்சாரத்தை தூண்டுபவர் சாமானிய மனிதரல்ல. மத்திய அமைச்சர் பதவியில் இருப்பவர். (scroll 24.01.2020)

## சாஹின் பாக் – மினி பாகிஸ்தான்

டெல்லியில் பிப்.8ம் தேதி தேர்தல் நடக்க போகிறது. இது வெறும் தேர்தல் அல்ல. இந்தியாவா பாகிஸ்தானா என்ற போட்டி. இதில் யார் வெற்றி பெறுவார்கள் என பார்க்கலாம். டெல்லியில் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகளின் ஆட்சி இருந்ததால் சஹீன் பாக் போன்ற “குட்டி பாகிஸ்தான்” உருவாயிருக்கிறது.

(scroll 24.01.2020)

## இந்தியாவுக்கு எதிரானவர்கள்

பாஜகவின் பேச்சாளரான சம்பித் பாத்ரா, மக்கள் காந்தி வழியில் சுதந்திரம், நேரு வழியில் சுதந்திரம் என்று கோசம் போடும் வீடியோவை காட்டி இவர்கள் ஜின்னா வழியில் சுதந்திரம் கேட்கிறார்கள், இவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்று பேசினார். (scroll 24.01.2020)

## நாயை போல சுட்டுக்கொல்லுங்கள்

சிஏஏவுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுபவர்களை சுடும் மாநில அரசை புகழ்ந்து பேசுகிறார் பாஜகவை சேர்ந்த திலீப் கோஸ். போராட்டங்களில் பொதுச்சொத்துகளை சேதப்படுத்துபவர்களை நாயை போல சுட்டுகொள்ளுங்கள் என்று பேசிவிட்டு சென்றார்.

## சஹீன்பாக்கில் கூடி இருப்பவர்கள் பயங்கரவாதிகள்

பாஜகவின் டெல்லியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பர்வேஷ் வர்மா ஊடகங்களுக்கு பேட்டி கொடுக்கும் போது. சஹீன் பாக்கில் லட்சக்கணக்கான மக்கள் கூடி இருக்கிறார்கள். அவர்கள் உங்கள் வீட்டுக்குள் புகுந்து உங்கள் சகோதரிகளையும் உங்கள் பெண் குழந்தைகளையும் கற்பழித்து கொல்வார்கள். அப்படியானவர்களை என்ன செய்யலாம் என மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

பாஜக இந்த தேர்தலில் வென்றால் சஹீன் பாக்கில் கூடி இருக்கும் மக்கள் ஒரு மணி நேரத்தில் அகற்றப்படுவார்கள்.

## வெறுப்பு பிரச்சாரத்தால் உருவாக்கப்பட்ட கோட்சேக்கள்

பாஜகவின் தலைவர்கள் பேசி வந்த வெறுப்பு பிரச்சாரங்கள் நாடு முழுக்க கலவர வெறி மன நிலையில் இருக்கும் சங்பரிவாரத்தினருக்குள் புகுந்தது. நாடு முழுக்க சிஏஏ வுக்கு ஆதரவாக பாஜகவினால் நடத்தப்பட்ட ஊர்வலங்களில் சிஏஏ சட்டத்தை பற்றி பேசாமல் முஸ்லிம்களுக்கு எதிரான கோசம் போடப்பட்டது.

ஊடுருவல்காரர்களை அடித்து விரட்டு வோம், தொப்பிக்காரர்களை சுட்டுக்கொல் வோம் போன்ற கோசங்கள் ஊர்வலத்தில் வெளிப்படையாக வைத்தார்கள்.

அத்தோடு நிற்காமல் கையில் துப்பாக்கியுடன் சஹீன் பாக்கிற்கும், ஜாமியா கல்லூரிக்கும் வந்த இந்துத்துவ சிந்தனை கொண்ட பயங்கரவாதிகள் ஜாமியாவில் போராட்டம் நடத்தும் ஒருவர் மீது துப்பாக்கியால் சுட்டான். இப்படி கோட்சேக் களையும் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள்.

பிரதமர் மோடி இச்சட்டம் இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்களுக்கு ஆபத்தில்லை என்று பேசுகிறார். ஆனால் தொடர்ந்து பாஜக தலைவர்கள் இஸ்லாமியர்களை குறி வைத்து தற்போதே வெளியேற்றுவோம், தாக்குவோம் என்று பேசி வருகிறார்கள். இவர்கள் போராட்டங்களை நிறுத்த முனையவில்லை. போராட்டத்தை கலவரமாக மாற்றி குஜராத்தை போன்று ஓர் இனப்படுகொலையை நாடு முழுக்க நடத்த திட்டமிடுகிறார்கள். ஆனால் சிஏஏவுக்கு எதிராக வன்முறை ஏவப்பட்ட போதிலும் அற வழியில் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்வதால் வெறியர்களின் கலவர எண்ணமும் சின்னாபின்னமானது.

**– அபூ சித்திக்.**

# திட்டவட்டமாக முஸ்லிம்களுக்கு எதிரானது CAA

மூன்று நாடுகளில் வந்திருப்பவர்களுக்கு மட்டும் தான் இச்சட்டம் என திரும்ப திரும்ப பொய் சொல்லப்படுகிறது. ஆனால் இது ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கு எதிரானது என்பதையே நமக்கு அரசாணைகள் உணர்த்துகின்றன.

அதுமட்டுமல்ல இத்திட்டம் நீண்ட காலமாக நடைபெற்று வந்திருக்கிறது. முஸ்லிம் களை மட்டும் தனிமைப்படுத்த 2014ம் ஆண்டி லிருந்தே பல அரசாணைகள் வெளிவந்திருக்கிறது.

குறிப்பாக முஸ்லிம் அகதிகள் மட்டும் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாத சூழலை 2014ம் ஆண்டிலேயே மோடி அரசு உருவாக்கி விட்டது.

நீண்ட நாள் விசா (LTV) என்ற விசாவை இந்தியாவில் நீண்ட காலமாக தங்கி இருப்ப வர்கள் பெறுவார்கள். இந்த விசாவை முஸ்லிம் களுக்கு தரக்கூடாது என அரசாணை 2014ம் ஆண்டே பிறப்பிக்கப்பட் டிருக்கிறது.




இந்த விசா இருந்தால் தான் இந்தியாவில் தங்கி இருக்கும் ஒருவர் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். அதனால், முஸ்லிம்கள் விண்ணப்பிக்க முடியாத அளவுக்கு இத்தகைய வேலையை செய்திருக்கிறார்கள் இந்துத்துவ பாசிச அரசு.

இன்னும் இதுபோல் முஸ்லிம்களுக்கு எதிரான பல அரசாணைகள் வெளியிடப்பட்டி ருப்பதாக வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள்.

(இந்து தமிழ் 23.01.2020)



# நாடாளுமன்றத் தாக்குதல் முயற்சி..! அதேபோல்..?

2001ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் நாள் நடந்தது. 2020 இந்த ஆண்டு ஜனவரி 13 ஆம் நாள், நாம் சொன்னதெல்லாம் உண்மை என்பது மீண்டும் ஒருமுறை உண்மையாக்கப்பட்டுள்ளது.

13, ஜனவரி 2020 அன்று கஷ்மீரில் ஒரு காவல்துறை அதிகாரியுடன் சில முஸ்லிம் அப்பாவிகள் சிக்கினார்கள். இந்தக் காவல் துறை அதிகாரி அந்த முஸ்லிம் அப்பாவி இளைஞர்களைக் கொண்டு, ஜனவரி 26-இல் டெல்லியில் ஓர் தீவிரவாத தாக்குதலை (நாடாளு மன்ற தாக்குதல்) பாணியில் திட்டமிட்டு நகர்ந்துள்ளனர்.

இவர்கள் கைது செய்யப்பட்டபோது இதே காவல்துறை அதிகாரி ஹூஸைன் தான் அப்சல் குரு போன்றவர்களை டெல்லிக்கு அனுப்பி தீவிரவாத தாக்குதலை நடத்திட ஏற்பாடு செய்தார் என்ற உண்மை தெரிய வந்துள்ளது.

2001-இல் நாடாளு மன்ற தாக்குதல் எப்படி ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அழுத்தமான ஆதாரங்களுடன் “நாடாளு மன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்” என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டோம்.

விசாரணை கமிஷன் வைத்து விசாரிக்கப் படாத தாக்குதல்

நாம், கடந்த 19 பத்தொன்பது ஆண்டுகளாக நாடாளுமன்ற தாக்குதல் முழுமையான ஓர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டு வருகின்றோம். அதற்கான காரணத்தையும் விளக்கமாகவே குறிப்பிட்டு வருகின்றோம்.

அவை -

1) இந்தத் தாக்குதல் பாரதீய ஜனதா கட்சி இந்தியாவை ஆண்டு கொண்டிருந்தபோது நடைபெற்றது.

2) தாக்குதல் நடக்கும்போது பாரதீய ஜனதா கட்சி மிகப்பெரிய ஊழல்களில் சிக்கி இருந்தது.

குறிப்பாக அதன் சவப்பெட்டி ஊழல் ஊரையும், உலகையும் நாடாளுமன்றத்தையும் உலுக்கிக் கொண்டிருந்தது.

அதே நேரத்தில், இவர்கள் நாடாளு மன்றத்தில் ஒரு பாசிச பயங்கரவாத சட்டத்தைக் கொண்டு வந்திட இருந்தார்கள். அதுதான் “பொடா” POTA - Prevention of Terrorist Activitiest Act. இந்தச் சட்டத்திற்கான வரைவை இவர்களால் நாடாளு மன்றத்தில் அறிமுகப்படுத்திடக் கூட முடியவில்லை. அந்த அளவுக்குநாடாளு மன்றம் அல்லோலகல்லோலப்பட்டது. இவர்கள் மீது வீழ்ந்த ஊழல் குற்றச் சாட்டுக்களால்.

நாட்டு மக்கள் இவர்கள் புனிதர்கள், ஒழுக்கமுள்ளவர்கள், கட்டுப்பானவர்கள் எனக் கொண்டிருந்த கண்ணியமிகு கருத்துக்கள் கருகி விட்டன. மக்கள் - மன்றத்தில் சின்னதாகவும் சில்லியாகவும் போய்விட்டது.

அனைத்தையும் மறைக்க, அவர்கள் ஏற்பாடு செய்ததுதான் நாடாளுமன்றத் தாக்குதல்...

அதேபோல், இப்போது NPR - NRIC, CAA இவற்றிற்கெதிராக, நாடெங்கும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இன்றைய ஆட்சியாளர்கள், பாசிசத்தைப் பாதை

யாகக் கொண்வடர்கள் என்பதை வேகமாக உணர்ந்து வருகின்றார்கள். இவர்கள் கொள்கை அளவில் வீழ்ந்து விட்டார்கள். இன்னும் எத்தனை நாளைக்கு இவர்கள் கோலச்ச முடியும்? என்ற வினா, மக்களுக்குள் எழுந்துள்ளது.

அத்தனையிலிருந்தும், மக்களின் கவனத்தை திசை திருப்பிட மிகப்பெரிய தீவிர தாக்குதலுக்கு ஏற்பாடு செய்ய விருக்கின்றார்கள். கஷ்மீரில் இப்போது கைது செய்யப்பட்டிருக்கும், தவேந்தர் சிங் இதற்கான ஏற்பாடுகளை - அதாவது நமது குடியரசு தினத்தன்று இப்படி யொரு தாக்குதலை ஏற்பாட்டை செய்ய விருந் தார். ஆனால், அதற்கு அவன் பயன்படுத்திட இருந்த முஸ்லிம் இளைஞர்கள் அதனை வெளிப்படுத்தி விட்டார்கள்.

அன்றைக்கு நாடாளு மன்றத் தாக்குதலை ஏற்பாடு செய்தவர்கள்தாம். இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கின்றார்கள். தவேந்தர் சிங், சிக்கிய வுடன் அதிர்ந்து போனார்கள். முழு உண்மையும் வெளியே வருவதற்கு முன்பு அவரைக் காப்பாற்றியாக வேண்டும் என்பதனால் தங்கள் எடுபிடிகளான 'NIA' என்ற தேசிய முகவாண்மை அமைப்பிடம் ஒப்படைத்துவிட்டார்கள். இந்த உண்மையை அதாவது, நாடாளுமன்ற தாக்கு தலின் உண்மைகள் - இப்போது குடியரசு தினத் தன்று நடத்தவிருந்த தாக்குதல் பற்றிய சதிகள் அனைத்தையும் மறைத்து விட்டார்கள்.

இந்த தவேந்தர் சிங். எப்படிப் பட்டவர், அவர் நாடாளுமன்ற தாக்குதலில் என்ன செய்தார் என்பனவற்றை நாடாளுமன்ற தாக்கு தலில் தூக்கிலிடப்பட்ட ஷஹீத் அஃப்ஸல் குருவின் மனைவி உச்ச நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். அதனை நாம் இந்த இதழில் தனிக் கட்டுரையாக தந்துள்ளோம்.

Kashmir Times 21st Oct, 2004, PUDR Report Appendix, 18.

## அன்பகம் மதரஸாவில் சிறப்பு அழைப்பாளர் நிகழ்ச்சி





அன்பகம் மதரஸாவில் கடந்த 10.12.2019 முதல் 13ம் தேதி வரையில் 3 நாள் சிறப்பு அழைப்பாளர் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ரஃபீன் அவர்கள் கலந்துக் கொண்டார்கள். இதில் இறையச்சம், சகோதரத்துவம், சொர்க்கம், நரகம், சூரா அல்ஃபாத்திஹா தஃப்ஸீர், சூரா முஃக்மீன் தஃப்ஸீர், ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது.

- யாசர் அரஃபாத்.ஷி

# அப்சல் குருவின் மனைவி உச்ச நீதிமன்றத்திற்கு எழுதிய கடிதம்



இந்த நூலில் தரப்படும் பெரும்பாலான தகவல்கள் "Dec. 13 Terror Over Democracy. By Nirmalangshu Mukherjee" டிசம்பர்-13 ஜனநாயகத்தின் மீதான தீவிரவாத தாக்குதல் தொகுத்தவர் நிர்மலாங்ஷு முகர்ஜி என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவைதாம்.

முதலில் நாடாளுமன்றத்தைத் தாக்கிட சதி செய்ததாகக் கூறப்படும் முக்கியக் குற்றவாளி முஹம்மத் அஃப்ஸல் என்பவரைப் பற்றிப் பார்ப்போம்...

இவர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.என். திங்காரா என்பவரால் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டவர். பின்னர் உச்ச நீதிமன்றத்தாலும் தண்டிக்கப்பட்டவர். பின் இரகசியமாகத் தூக்கிலிடப்பட்டவர்.

இந்தத் தண்டனையைப் பற்றி முஹம்மத் அஃப்ஸலின் மனைவி தபஸ்ஸும் தான், உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் இப்படிக் குறிப்பிடுகின்றார். நமது நாடாளுமன்றம் எப்படி முற்றுகையிடப்பட்டது என்பதைச் சுருக்கமாகச் சொல்வதால் அதை அப்படியே தருகின்றோம்.

"இந்தியா முழுவதும் மக்கள் நாடாளு மன்றத்தின் மீது நடந்த தாக்குதலைக் கண்டித் திருக்கிறார்கள். நானும் கண்டிக்கின்றேன். இதனைக் கண்டிக்கும்போதே இதில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நியாயமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும். அவர்கள் உண்மையிலேயே குற்றவாளிகள் தானா என்பதைக் கண்டுபிடிப்பதற்கு எல்லா வகையான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்படும் முன் அவர்கள் தரப்பு வாதம், அவர்களின் நிலைப்பாடு



ஆகியவை முழுமையாகக் கேட்கப்பட வேண்டும்."

"நான் உங்களிடம் எங்களது கதையை முழுமையாகக் கேட்க வேண்டும் என முறையிடு கின்றேன். அதன்பின் தண்டிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்றால் தண்டியுங்கள். அஃப்ஸ லுடைய கதையும், என்னுடைய கதையும் கஷ்மீரில் வாழும் இளம் தம்பதியரின் கதைகளுள் ஒன்றுதான். எங்கள் கதை, எங்கள் கஷ்மீர் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் சோகமான கதைகளுள் ஒன்று."

"1990 அஃப்ஸல், 'ஜே.கே.எல்.எஃப்' என்ற ஜம்மு கஷ்மீர் விடுதலை முன்னணி (JKLF) Jammu & Kashmir Liberation Front இயக்கத்தால்

(கஷ்மீரில் வாழும் ஆயிரக்கணக்கான இளைஞர் களைப் போல்) கவரப்பட்டார். அவர் பாகிஸ் தான் சென்றார். அங்கிருந்த கருத்து வேறுபாடு களால் மனம் உடைந்து திரும்பிவிட்டார். டெல்லிக்குச் சென்று தன்னுடைய படிப்பைத் தொடர்ந்திட முயற்சிகளை மேற்கொண்டார். அவர் எப்போதும் படிக்க விரும்பினார். அதற்கு முன் அவர் எம்.பி.பி.எஸ். டாக்டராகப் படித்துக் கொண்டிருந்தார்.


என் கணவர் சாதாரணமான வாழ்க்கை யையே வாழ்ந்திட விரும்பினார். அதனால் நமது இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின ரிடம் சரணடைந்தார். எல்லைப் பாதுகாப்புப் படையினரிடம் அவர் சரணடைந்தவர் என்ற சான்றிதழைத் தந்திட வேண்டும். ஆனால், அதைத் தந்திடவில்லை. "அவர் சரணடைந் தவர்" என்ற சான்றிதழைத் தர மறுத்துவிட் டார்கள். சான்றிதழ் தந்திட வேண்டும் என்றால் இன்னும் இரண்டு பேரைச் சரணடையச் செய் திட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். இதனால் இன்னும் இரண்டு பேரைச் சரணடை யச் செய்தார். அதன்பின்னர் அஃப்ஸலுக்கு ஒரு சான்றிதழைத் தந்தார்கள். அதில் 'அவர் சரணடைந்தவர்' எனக் குறிப்பிட்டிருந்தார்கள்.

"சரணடைந்த ஒருவராக கஷ்மீரில் வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் சிக்கலான ஒன்று. ஆனாலும் அவர் தன் குடும்பத்தோடு கஷ்மீரிலேயே வாழ்ந்திடுவது என முடிவு செய்தார். 1997-ல் அவர் ஒரு சிறு வியாபாரத்தைத் தொடங்கினார். அது மருத்துவக் கருவிகள், மருந்து ஆகியவை தொடர்பான வியாபாரம். மருத்துவக் கருவிகளை வாங்கி விற்பதும் இதில் அடங்கும். அடுத்த வருடம் நாங்கள் திருமணம் முடித்துக் கொண்டோம். அவருக்கு அப்போது வயது 28, எனது வயது 18"

நாங்கள் கஷ்மீரில் வாழ்ந்த காலங்கள் வரை இந்திய பாதுகாப்புப் படையினர் எங்களைத் தொடர்ந்து கொடுமைப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். யார் யார் மீதெல்லாம் சந்தேக மிருக்கின்றதோ அவர்களைப் பற்றிய தகவல் களைத் தந்திட வேண்டும். அவர்களை உளவு பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என அழுத்தங்களும், அல்லல்களும் தந்து கொண்டே இருந்தார்கள். '22 ரைஃபிள்ஸ்' என்ற இராணுவப் பிரிவைச் சார்ந்த மேஜர் இராம்ராய் என்பவர் அஃப்ஸலை அவமானப்படுத்தினார். கேவலமான சொற்களை அடிக்கடி சர்வ சாதாரணமாக பிரயோகப்படுத்தினார்.

இந்திய பாதுகாப்புப் படையினர் அஃப்ஸலை அவர்களுடைய முகாம்களுக்கு அடிக்கடி அழைத்துச் சென்றார்கள். சித்ரவதை செய்தார்கள். அவரிடமிருந்து தகவல் எடுக்க வேண்டும் என்று சொல்லியே இதையெல்லாம் செய்தார்கள். ஒருநாள் இரவு, இந்தியப் பாதுகாப் புப் படையைச் சார்ந்தவர்கள் எங்களுடைய வீட்டுக்கு வந்தார்கள். எங்களையெல்லாம் வாய்க்கு வந்தபடி வைதார்கள். அஃப்ஸலை அவர்களுடைய முகாமுக்கு அழைத்துச் சென்றார்கள். பிறிதொரு முறை கஷ்மீரின் 'எஸ்.டி.எஃப்' (Special Task Force) சிறப்புப் பாதுகாப்புப் படையின் முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். இந்த முகாம்கள் ஃபல்ஹாலன் - பாட்டான் பகுதியில் உள்ளது.

சில நாட்கள் கழித்து சிறப்புப் பாதுகாப்புப் படையினர் அவரை தங்களுடைய 'ஹம்ஹாமா' (Humhama STF Camp) முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த முகாமில் வைத்து டி.எஸ்.பி.



தவேந்தர் சிங், டி.எஸ்.பி. வினாய் குப்தா ஆகியோர் ஒரு லட்சம் ரூபாய்-ஐ லஞ்சமாக அஃப்ஸலிடம் கேட்டார்கள். இந்த ஒரு லட்சம் ரூபாயைக் கொடுக்கும் அளவிற்கு நாங்கள் வசதிவானவர்கள் அல்ல. அதனால் நாங்கள் எங்களிடமிருந்தவை அனைத்தையும் விற்றுவிட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானோம். என்னுடைய திருமணத்தில் கிடைத்த சிறிய தங்க நகையையும் விற்றிட வேண்டியதாயிற்று. இத்தனையையும் அஃப்ஸலை நாங்கள் இந்தச் சித்திரவதைகளிலிருந்து காப்பாற்றிட இழக்க வேண்டியதாயிற்று.

அனைத்தையும் கொடுத்தாலும் அஃப்ஸல் தொடர்ந்து சந்தித்த சித்திரவதைகளுக்கு அளவில்லை.

அஃப்ஸலை குளிர்ந்த நீரில் நிறுத்தி வைத்தார்கள். பெட்ரோலை அவருடைய மலத்துவாரத்தில் ஊற்றினார்கள். ஒரு அதிகாரி 'ஷாந்தி சிங்' என்பவர் (அஃப்ஸலை) கடுங்குளிரில் தலைகீழாக மணிக் கணக்கில் தொங்கவிட்டார், அஃப்ஸலுடைய மறைவிடத்தில் மீண்டும் மின்சாரத்தைப் பாய்ச்சினார். இந்தச் சித்தர வதைகளின் ரணங்களிலிருந்து வெளியே வந்திட அவர் பல மாதங்கள் மருத்துவ சிகிச்சைப் பெற வேண்டியதாயிற்று. இந்த சிகிச்சைக்காகவும் ஏராளமான பணத்தைச் செலவுச் செய்திட வேண்டியதாயிற்று.

அஃப்ஸல் ஏதேனும் தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். அதனால்தான் அவரை இப்படிச் சித்திரவதைச் செய்திருக்கலாம் என நீங்கள் நினைக்கலாம்.

இப்படிச் சித்திரவதைச் செய்யப்பட்டது அவரிடமிருந்து தகவல்களைச் சேகரிக்கத்தான் என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால் கஷ்மீரின் சூழலை நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும். கஷ்மீரில் வாழும் ஒவ்வொருவருக்கும் கஷ்மீரில் என்ன நடந்துக் கொண்டிருக்கின்றது என்பது தெரிந்திருக்கும். அவர் அங்கு நடப்பவற்றில் பங்கு பெறுகின்றாரோ இல்லையோ அங்கு என்ன நடக்கின்றது என்பது நிச்சயமாகத் தெரிந்திருக்கும்.

மக்கள் அனைவரையும் தகவல் சொல்பவர்களாக, உளவு பார்ப்பவர்களாக, மாற்றுவதன் மூலம், அண்ணனுக்கெதிராக தம்பியையும், கணவனுக்கெதிராக மனைவியையும், பிள்ளைகளுக்கெதிராக பெற்றோர்களையும் மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அஃப்ஸல் தன்னுடைய குடும்பத்தோடு அமைதியாகவே வாழ விரும்பினார். ஆனால் எஸ்.டி.எஃப். "STF" என்ற சிறப்புக் காவல் படையினர் அதை அனுமதிக்கவில்லை.

இந்தச் சிறப்புக் காவல் படையினர் (எஸ்.டி.எஃப்) கஷ்மீரில் கொலைகளுக்கு மிகவும் பெயர் பெற்றவர்கள். அவர்கள் மக்களிடம் பணம் பறிக்கும் வித்தையில் காட்டிய வேகத்தில் மக்கள் மருண்டு போனார்கள். எந்த அளவுக்கு அவர்கள் பெயர் மக்கள் மத்தியில் கெட்டுப்போய் விட்டதென்றால் அவர்களிடமிருந்து மக்களை மீட்பதைத் தேர்தல் அறிக்கையாக வைத்திடும் அளவுக்கு அவர்களின் பெயர் கெட்டுப்போய் விட்டது. முஃப்தி முஹம்மது ஸயீத் (இவர் PDP என்ற கட்சியின் தலைவர்) அவர் தனது தேர்தல் அறிக்கையில் நான் முதலமைச்சரானால் மொத்த (எஸ்.டி.எஃப்) சிறப்புக் காவல் படையினரையும் அகற்றிவிடுவேன் என வாக்குறுதி வழங்கினார்.

இந்தச் சிறப்புப் படையினர் (எஸ்.டி.எஃப்) மனித உரிமை மீறல்களுக்கும் மிகவும் பெயர் பெற்றவர்கள். இந்த மனித உரிமை மீறல்களோடு மக்களை கொலை செய்வது, சொல்லாமல் கொள்ளாமல் சிறைப்பிடிப்பது, சித்திரவதைச் செய்து, மூர்க்கத்தனமான, குரூரம் நிறைந்த சித்திரவதைகளைக் கட்டவிழ்த்து விடுவது, இவற்றிற்குப் பெயர் பெற்றவர்கள்.

இதுபோன்ற குரூரமான சூழ்நிலைகளிலிருந்து அஃப்ஸல் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பினார். அதனால், அவர் தன் வீட்டை விட்டு வெளியேறினார். தன் குடும்பத்தையும் துறந்தார். டெல்லி வந்தார். டெல்லியில் வந்து வயிறு பிழைக்க விரும்பினார். அங்கே தன்னுடைய வாழ்க்கையைச் சீர் செய்திட முயற்சி செய்தார். வாழ்க்கை ஓரளவுக்கு நிலை பெற்றதும் என்னையும், எங்களது நான்கு வயது மகனையும் டெல்லி அழைத்து வாழ்க்கையைத் தொடங்க முடிவு செய்தார். ஏனைய எல்லாக் குடும்பங்களையும் போலவே நாங்கள் ஒன்றாய் வாழ்ந்திட விரும்பினோம். எங்கள் ஒரே மகனை ஆளாக்கிட ஆசைப்பட்டோம். எல்லாக் குடும்பங்களையும் போல் நாங்களும் அமைதியாக

வாழ்ந்திட அவாவுற்றோம். ஆனால் மீண்டும் எஸ்.டி.எஃப் (சிறப்புக் காவல் படையினர்) என் கணவரை டெல்லியில் துரத்தத் தொடங்கினார்கள். அத்தோடு எங்களுடைய எல்லா கனவுகளும் தகர்ந்து தவிடு பொடியாயின.

இந்தச் சிறப்புக் காவல் படையினர் என் கணவரிடம் முஹம்மத் என்பவரை கஷ்மீரி லிருந்து டெல்லிக்கு அழைத்து வர வேண்டும் எனக் கட்டா யப்படுத்தினார்கள். என்னுடைய கணவர் இந்த முஹம்மத் என்பவரையும், தாரிக் என்பவரை யும் சிறப்புக் காவல் படையினரின் (கஷ்மீர்) முகாமில் வைத்தே சந்தித்தார். இவர்களைப் பற்றி என்னுடைய கணவருக்கு எதுவும் தெரியாது. அதேபோல் ஏன் இப்படியொரு வேலையை கஷ்மீர் சிறப்புக்காவல் படையின் முகாமிலிருந்து இவர்களை டெல்லிக்கு அழைத்து வரும் பணியை செய்யச் சொல்கின் றார்கள் என்பதும் என் கணவருக்குத் தெரியாது. (பின்னாலிருந்த மிகப்பெரிய சதியைப் புரிந்திட இயலவில்லை)



தவேந்தர் சிங்

இவற்றையெல்லாம் என்னுடைய கணவர் நீதிமன்றத்தில் விரிவாக எடுத்துச் சொன்னார். ஆனால் நீதிமன்றமோ பாதியை எடுத்துக் கொண்டது. மீதியை மறுத்துவிட்டது. என்னு டைய கணவர் முஹம்மதை கஷ்மீரிலிருந்து டெல்லிக்கு அழைத்து வந்தார் என்பதை நீதிமன்றம் எடுத்துக் கொண்டது. முஹம்மதை சிறப்புக்காவல்படைதான் கஷ்மீர் முகாமிலிருந்து டெல்லிக்கு அழைத்துச் செல்லும்படி பணித்தது என்பதை ஏற்றுக்கொள்ள நீதிமன்றம் மறுத்தது.

கீழ் நீதிமன்றங்களில் அஃப்ஸல் என்ற எனது கணவருக்காக வாதாட யாரும்இல்லை. நீதிமன்றம் ஒரு வழக்கறிஞரை நியமித்தது. அவரோ என் கணவரிடம் என்ன நடந்தது என்பதை எப்போதும் கேட்டதில்லை. அதே போல் அவருக்கு எதிராகச் சாட்சியம் சொன்ன வர்களைக் குறுக்கு விசாரணையும் செய்ய வில்லை. அவர் என் கணவரை வெறுத்தார். நீதிபதி 'திங்கரா' அவர்களிடம் என்னுடைய கணவர் அந்த வழக்கறிஞர் எனக்காக வாதாடவேண்டாம் என்று எவ்வளவோ சொன் னார். ஆனால் நீதிபதி 'திங்கரா' அதைக் கண்டு கொள்ளவே இல்லை. உண்மையில் என் கணவர் கீழ் நீதிமன்றத்தில் தனது தரப்பில் எதையும் எடுத்துச் சொல்லிட இயல வில்லை. என்னுடைய கணவர் எதையேனும் சொல்லிட முற்படும் போதெல்லாம், நீதிபதி அதை முற்றாகப் புறக் கணித்தார். செவி மடுக்க மறுத்தார். அவர் தன்னுடைய மத துவேஷங் களை வெளிப்படையாகவே நீதிமன்றத்தில் காட்டினார். மொத்தத்தில் கீழ் நீதிமன்றங்களில் என் கணவர் தன் தரப்பு வாதங்களைச் சமர்ப்பித்திட இயலவில்லை.

உயர்நீதிமன்றத்தில் ஒருவர் மனித உரிமை வழக்கறிஞர் எனக் கூறிக்கொண்டு என்னுடைய கணவருக்காக வாதாட முன் வந்தார். என் கணவரும் அதை ஏற்றுக் கொண்டார். ஆனால் அவர் என் கணவருக்காக வாதாடவில்லை. மாறாக நீதி மன்றத்திடம் என் கணவரைத் தூக்கி லிட்டுக் கொலை செய்யக்கூடாது; விஷ ஊசியைப் போட்டுத்தான் சாகடிக்க வேண்டும் என வாதாடினார். அஃப்ஸல் இந்த வழக்கறிஞரை உச்ச நீதிமன்றத்தில் வைக்க வேண்டாம் எனக் கூறிவிட்டார். என் கணவருக்காக ஒரு வழக்கறி ஞரை வைத்திடும் வாய்ப்பு எனக்கிருக்கவில்லை. எனக்கு டெல்லியில் யாரையும் தெரியாது. வேறு வழியின்றி அஃப்ஸல், டாக்டர் எஸ்.ஏ.ஆர். ஜீலானியைக் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட (வழக்கறிஞர்) குழுவுக்குக் கடிதம் எழுதினேன். இந்தக்குழு 'சுசில்குமார்' என்ற வழக்கறிஞரை வைத்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் சாட்சியங் களுக்குள் செல்ல முடியாது என்று கூறிவிட்டது. அதனால் என் கணவரின் நிலையையோ, வாதங்களையோ நீதிமன்றங்களில் வைத்திட இயலவில்லை. அதனால் என் கணவருக்கு என்ன நடக்கும் என்று தெரியவில்லை.

என் கணவரைத் தூக்கில் போட்டு விடக்கூடாது என்றும், அவருடைய வழக்கை நியாயமாக நீதியாக விசாரிக்க வேண்டும் என்றும்

உச்சநீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தன்னுடைய தரப்பு வாதத்தைச் சொல்லிட வாய்ப்பளிக்கப்படாத ஒருவரை, தனது நிலையை விளக்கிட வாய்ப்பளிக்கப்படாத ஒருவரை நீங்கள் (உச்சநீதிமன்றம்) தூக்கிலிடமாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன். சம்பவம் நடந்தவுடன் காவல்துறையினர் என் கணவரை ஊடகங்களின் முன் ஒப்புதல் வாக்குமூலம் தந்திட கட்டாயப்படுத்தினார்கள். இது வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்னரே நடைபெற்றது. காவல்துறையினர் அவரை அவமானப் படுத்தினார்கள், அடித்தார்கள், சித்திரவதை செய்தார்கள். அவருடைய வாயில் சிறுநீர் கழித்தார்கள்.

இவற்றையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லுவதற்கு வெட்கமாகவே இருக்கின்றது. ஆனால் சூழ்நிலைகள் என்னைக் கட்டாயப் படுத்தியதால் இவற்றையெல்லாம் சொல்லிட வேண்டியதாயிற்று. இவற்றையெல்லாம் எழுத்தில் வடிப்பதற்கு மிகையான தைரியம் தேவைப்பட்டது. இப்போது ஆறு வயதாகி விட்ட என் மகனின் தந்தையைக் காப்பாற்றிடுவதற்காக நான் இவற்றையெல்லாம் சொல்லிட வேண்டியதாயிற்று.

என்னுடைய கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் பேசுமா? என் சார்பில் நீங்கள் பேசுவீர்களா? நான் என் கணவருக்காகவும் என் மகனின் தந்தைக்காகவும் வாதாடுகின்றேன் என்பதை உண்மைதான். அதே நேரத்தில் கஷ்மீரில் வாடும் என்னைப்போன்ற பெண்களுக்காகவும் வாதாடுகின்றேன்...!

இந்த மொத்த விவகாரத்திலும் நாடாளு மன்றத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எஸ்.டி.எஃப் என்ற சிறப்புப் பாதுகாப்புப் படையின் கண்காணிப்பில் நீண்ட நாட்கள் இருந்தவர்கள் என்பது புலப்படும். இதனால்தான் விருப்பு வெறுப்பற்ற ஒரு விசாரணை நாடாளுமன்றத் தாக்குதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனநாயக உரிமைகளுக்கான மக்கள் குழுமம் கேட்கின்றது.

Source : Annexe 18 of : December 13, Terror Over Democracy
Appeal for Justice : Published by Promilla & Co., New Delhi.




நாடெங்கும் கிளர்ச்சிகள் போராட்டங்கள் சிஏஏ எனப்படும் குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கும் என்.ஆர்.சிக்கும் எதிராக நடந்து கொண்டிருக்கும் நிலையில் பொய்மையே தனது வாய்மை என கொண்டிருக்கும் மோடியும் அமித்ஷாவும் நாடாளுமன்றத்திலும் பல்வேறு கூட்டங்களிலும் என்.ஆர்.சி குறித்து பல்வேறு பொய்களை கூறி வருகின்றனர்.

அவை அனைத்தும் உண்மையா என ஆய்வு செய்தபோது இல்லை அவை அனைத்தும் பொய்கள் என தெரிய வந்தது. அவற்றை மக்கள் மன்றத்தில் பட்டியலிடுகிறோம்.

### 1. தேசிய அளவில் என்.ஆர்.சி அறிவிக்கப்படவில்லை? இது உண்மையா?

இல்லை. அது July 2019இலேயே கெசட்டில் அறிவிக்கப்பட்டுவிட்டது.

In pursuance of sub-rule (4) of rule 3 of the Citizenship (Registration of Citizens and Issue of National Identity Cards) Rules, 2003, the Central Government hereby decides to prepare and update the Population Register (PR) and the field work for house to house enumeration throughout the country except Assam for collection of information relating to all persons who are usually residing within the jurisdiction of local registrar shall be undertaken between the 1st day of April 2020 to 30th September, 2020."

3. National Register of Indian Citizens. – (1) The Registrar General of Citizen Registration shall establish and maintain the National Register of Indian Citizens.

(2) The National Register of Indian Citizens shall be divided into sub-parts consisting of the State Register of Indian Citizens, the District Register of Indian Citizens, the Sub-district Register of Indian Citizens and the Local Register of Indian Citizens and shall contain such details as the Central Government may, by order, in consultation with the Registrar General of Citizen Registration, specify.


Source: Citizenship (Registration of Citizens and Issue of National Identity Cards) Rules, 2003




அந்த அறிவிப்பில் அது பின்வருமாறு கூறுகிறது. குடியுரிமை (குடிமக்கள் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்) விதிகள்2003 இன் விதி 3 இன் துணை விதி (4) ஐப் பின்பற்றி, மக்கள்தொகை பதிவேடு (பிஆர்) தயாரித்து புதுப்பிக்க மத்திய அரசு இதன்மூலம் முடிவு செய்கிறது. உள்ளூர் பதிவாளரின் அதிகார எல்லைக்குள் பொதுவாக வசிக்கும் அனைத்து நபர்களுடனும் தகவல்களை சேகரிப்பதற்காக அஸ்ஸாம் தவிர நாடு முழுவதும் வீடு வீடாக கணக்கீடு செய்யப்படுவது 2020 ஏப்ரல் 1 முதல் 2020 செப்டம்பர் 30 வரை மேற்கொள்ளப்படும். "

எனவே தேசிய அளவிலான என்.ஆர்.சி அறிவிக்கப்படவில்லை என்பது தெளிவான பொய்.

# தேசிய அளவில் என்.ஆர்.சி அறிவிக்கப்படவில்லையா?


MINISTRY OF HOME AFFAIRS
(OFFICE OF THE REGISTRAR GENERAL CITIZEN REGISTRATION, INDIA)
NOTIFICATION
New Delhi, the 31st July, 2019

S.O. 2753(E).—In pursuance of sub-rule(4) of rule 3 of the Citizenship (Registration of Citizens and Issue of National Identity Cards) Rules, 2003, the Central Government hereby decides to prepare and update the Population Register and the field work for house to house enumeration throughout the country except Assam for collection of

(1)

3933 GI/2019

2 THE GAZETTE OF INDIA : EXTRAORDINARY [PART II—SEC. 3(ii)]

information relating to all persons who are usually residing within the jurisdiction of Local Registrar shall be undertaken between the 1st day of April, 2020 to 30th September, 2020.

[F. No. 9/5/2019-CRD (NPR)]

VIVEK JOSHI, Registrar General of Citizen Registration

...ation of July 31, 2019

## 2. மக்கள் தொகைகணக்கெடுப்பு பதிவேடும் என்.ஆர்.ஐ.சி (என்.ஆர்.சி)க்கும் தொடர்பில்லை. அவை இரண்டும் இணைக்கப்படாது என்பது உண்மையா?

இல்லை இரண்டிற்கும் தொடர்புண்டு. இரண்டும் இணைக்கப்படும். அப்படித்தான் அரசு இதழ்அறிவிப்பு தெரிவிக்கிறது.

The "population register" the gazette notification mentions the first step towards preparing the NRIC. This is what the sub-rule (5) of Rule 3 of the 2003 Rules says: "The Local Register of Indian citizens shall contain details of persons after due verification made from the population register."

(5) The Local Register of Indian citizens shall contain details of persons after due verification made from the Population Register.

Source: Citizenship (Registration of Citizens and Issue of National Identity Cards) Rules, 2003

இந்திய குடிமக்களின் உள்ளூர் பதிவேட்டில், மக்கள் தொகை பதிவேட்டில் இருந்து முறையான சரிபார்ப்பிற்குப் பிறகுகிடைக்கப் பெறும் நபர்களின் விவரங்கள் இருக்கும். "

குடியுரிமை (குடிமக்களின் பதிவு மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் வெளியீடு) விதிகள், 2003 மக்கள் தொகை பதிவேட்டை இவ்வாறு வரையறுக்கிறது: "மக்கள்தொகை பதிவு என்பது பொதுவாக ஒரு கிராமம் அல்லது கிராமப்புற பகுதி அல்லது நகரம் அல்லது வார்டு அல்லது ஒரு நகரம் அல்லது நகர்ப்புறத்தில் உள்ள ஒரு வார்டுக்குள் எல்லை நிர்ணயிக்கப் பட்ட (குடிமக்கள் பதிவு பதிவாளர் ஜெனரல் அவர்களால் வரையறுக்கப்பட்ட) பகுதியில் வசிக்கும் நபர்களின் விவரங்களைக் கொண்ட பதிவேடு ".

என்.ஆர்.ஐ.சி பற்றி, அது கூறுகிறது: "இந்திய குடிமக்களின் தேசிய பதிவு என்பது இந்தியாவிலும் இந்தியாவிற்கு வெளியேயும் வாழும் இந்திய குடிமக்களின் விவரங்களைக் கொண்ட பதிவு". என்.ஆர்.ஐ.சி நான்கு துணை பகுதிகளாகபிரிக்கப்படும்: (அ) இந்திய குடிமக்களின் மாநில பதிவு (ஆ) இந்திய குடிமக்களின் மாவட்ட பதிவு (இ) இந்திய குடிமக்களின் துணை மாவட்ட பதிவு மற்றும் (ஈ) இந்திய குடிமக்களின் உள்ளூர் பதிவு மற்றும் " குடிமக்கள் பதிவு பதிவாளர் ஜெனரலுடன் கலந்தாலோசித்து, மத்திய அரசு விவரங்களை குறிப்பிடலாம்" (விதி 3)

## மக்கள் தொகை பதிவு என்.ஆர்.ஐ.சிக்கு எவ்வாறு மாற்றப்படும்?

Sub-rule (3) of Rule 4 says: For the purposes of preparation and inclusion in the local register of Indian citizens, the particulars collected of every family and individual in the Population Register shall be verified and scrutinised by the local registrar who may be assisted by one or more persons as specified by the Registrar General of Citizen Registration."

விதி 4 இன் துணை விதி (3) கூறுகிறது: "இந்திய குடிமக்களின் உள்ளூர் பதிவேட்டில் தயாரித்தல் மற்றும் சேர்ப்பதற்கான நோக்கங்களுக்காக, மக்கள் தொகை பதிவேட்டில் ஒவ்வொரு குடும்பம் மற்றும் தனிநபரின் சேகரிக்கப்பட்ட விவரங்கள் உள்ளூர் பதிவாளரால் குடிமக்கள் பதிவு பதிவாளர் ஜெனரலால் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் உதவியோடு சரிபார்க்கப்பட்டு ஆராயப்படும்.. "

"During the verification process, particulars of such individuals, whose citizenship is doubtful, shall be entered by the local registrar with app ropriate remark in the population register for further enquiry and in case of doubtful citizenship, the individual or the family shall be informed in a specified pro-forma immediately after the verifi cation process is over."

2003 விதிகளின் விதி 4 இன் துணை விதி (4) இந்த சரிபார்ப்பு மற்றும் ஆய்வுச் செயல்பாட்டின்போது என்ன நடக்கும் என்பதை மிகத் தெளிவுபடுத்துகிறது: "சரிபார்ப்புச் செயல்பாட்டின்போது, குடியுரிமை சந்தேகத்திற்குரிய நபர்களின் விவரங்கள் உள்ளூர் பதிவாளரால் பொருத்தமான குறிப்புடன் மக்கள்தொகை பதிவேட்டில் மேலதிக விசாரணைக்காக உள்ளிடப்படும். சரிபார்ப்பு செயல்முறை முடிந்த உடனேயே சந்தேகத்திற்குரிய குடிமக்களின் விஷயத்தில் தனிநபர் அல்லது குடும்பத்தினர் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் இந்தவிஷயம் குறித்து தெரிவிக்கப்படுவார்கள். "

(அ) "சந்தேகத்திற்கிடமான குடிமக்கள்" எந்த அடிப்படையில் அடையாளம் காணப்படு

வார்கள் அல்லது குறிக்கப்படுவார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை, (ஆ) "குறிப்பிட்ட புரோ-ஃபார்மா" இன்னும் பொது களத்தில் இல்லை. இவை விளக்கப்பட்டு வெளியிடப்படும் வரை செயல்முறை மர்மமாகவேஇருக்கும் என்பது தெளிவாகிறது.

என்.ஆர்.ஐ.சி செயல்பாட்டில் அடுத்தது: "இந்திய குடிமக்களின் உள்ளூர் பதிவேட்டின் வரைவு துணை மாவட்டம் அல்லது தாலுகா பதிவாளரால் வெளியிடப்படும், ஏதேனும் ஆட்சேபனைகளுக்காக அழைப்பதற்காக அல்லது சேர்ப்பதற்காக ..." (துணை விதி (6) (அ ) 2003விதிகளின் விதி 4 இன்).

நபர்களின்பெயர்கள், அவர்களின் முகவரி அல்லது பிற விவரங்கள் போன்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்கள் பொதுவாக எதற்காகவும் வெளியிடப்படவில்லை அல்லது வேறு எந்த செயல்முறைக்கும் பயன்படுத்தப் படுவதில்லை. தவிர, மக்கள் தொகை கணக் கெடுப்பு வேறு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது - 1948 மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம்.

ஆனால் பி.ஆர் / என்.பி.ஆர் மற்றும் என்.ஆர்.ஐ.சி ஆகியவை 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம், குடியுரிமை (திருத்தம்) சட்டம் (2003 இன் சி.ஏ.ஏ) மற்றும் 2003 விதிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஆம் ஆண்டில், முந்தைய என்.டி.ஏ ஆட்சியின்போது, 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் 2003 ஆம் ஆண்டின் குடியுரிமை (திருத்தம்) சட்டத்தின் மூலம் (2003 ஆம் ஆண்டின்சிஏஏ) (அ) "சட்டவிரோதமாக குடியேறியவர்" மற்றும் (பி) (என்ஆர்ஐசி) திருத்தப்பட்டது,.

2003 ஆம் ஆண்டின்சிகிகி இன் பிரிவு 2 கூறுகிறது: "சட்டவிரோத குடியேறுபவர் "என்பது இந்தியாவுக்குள் நுழைந்த ஒரு வெளிநாட்டவர் - (i) செல்லுபடியாகும் பாஸ்போர்ட் அல்லது பிற பயண ஆவணங்கள் இல்லாமல் மற்றும் எந்தவொருசட்டத்தாலும் அல்லது கீழ் பரிந்துரைக்கப்பட்ட பிற ஆவணங்கள் அல்லது அதிகாரம் இல்லாமல் அந்த சார்பாக; அல்லது (ii) செல்லுபடியாகும் பாஸ்போர்ட் அல்லது பிற பயண ஆவணங்கள் மற்றும் அந்த சார்பாக எந்தவொரு சட்டத்தி னாலும் அல்லது கீழ் பரிந்துரைக்கப்பட்ட பிற ஆவணங்கள் அல்லது அதிகாரத்துடன், ஆனால் அனுமதிக்கப்பட்டகாலத்திற்கு அப்பால் அதில் இருக்கும் ". (பிரிவு 2)

2003 ஆம் ஆண்டின்சிகிகி ஆல் பிரிவு 14A சேர்க்கப்பட்டபோதுழிஸிமிசி வந்தது.

2010-11 ஆம் ஆண்டில் யுபிஏ ஆட்சியின் போது NPR செயல்முறை முதன்முதலில்வந்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி ஆதார் திட்டத்துடன் (இந்தியர்களுக்கான தனித்துவ மான அடையாளம்) செயல்பட்டதால், அது அடுத்த கட்டத்திற்கு முன்னேறவில்லை என அறிவுசார் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அடுத்து, NPR 2015 இல் சீர்படுத்தப்பட்டது, ஆனாலும், அது ழிஸிமிசி க்கு முன்னேறவில்லை.

சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் இப்போது உள்ளதன்படி, அதாவது 2003 திருத்தத்திற்குப் பிறகும் பிரதான சட்டத்தில் மக்கள் தொகை பதிவேட்டைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை -.

## NPR, NRC மற்றும் CAA இடையே எந்த தொடர்பும் இல்லையா?

## உண்மை: அவை அனைத்தும் ஒன்றுக் கொன்று தொடர்புடையவை.

நாம் கவனிக்கத்தவறும் விஷயம் NPR-2020 இன் நோக்கம் சட்டவிரோதமாக குடியேறியவர் களை அடையாளம் காண்பது. இது முடிந்ததும், அனைத்து முஸ்லிம்களும் CAA (2019 இன்) மூலம் வடிகட்டப்பட்டு நாடு முழுவதும் தடுப்பு மையங்களில்வைக்கப்படுவார்கள்.

உண்மையில், மக்கள் தொகை பதிவேட்டை (அல்லது என்.பி.ஆர்) அறிவிக்கும் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு 2 நாட்களுக்கு முன்னர் (ஜூலை 31, 2019 இல்), ஒரு முக்கிய தேசிய நாளேடு அனைத்து மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் குறைந்தது ஒரு தடுப்புக் காவல் மையத்தை அமைக்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதாக வெளியிட்டது.

அசாமில் என்.ஆர்.சி தேர்வில் தோல்வியுற்ற வர்களுக்கு அல்லது இந்தியாவில் வேறு எங்கும் என்.ஆர்.ஐ.சி தேர்வில் தோல்வியுற்றவர்களுக்கு, நாடு முழுவதும் குறைந்தது 12 தடுப்பு மையங் கள் தயார் செய்யப்படுகின்றன - அசாமில் 10, நவி மும்பையில் ஒன்று மற்றும் பெங்களூர் கிராமத்தில் (நெலமங்களா).

தேவையான ஆவணங்கள் அல்லது தகவல்கள் குறித்து தெளிவு இல்லை: 12, 14 அல்லது 15?


மேலே காட்டப்பட்டுள்ள NPR-2020இல் தந்தை மற்றும் தாய் பிறந்த இடம் பற்றிய தகவல்களைத் தேடுவது 2003 விதிகளில் இல்லை.

ஏனெனில், 2003விதிகள் 12 தகவல்களைத் தேடுகின்றன: "இது (மக்கள் தொகை பதிவேட் டில்) 12 விவரங்களைக் கொண்டிருக்கும்: பெயர், தந்தையின் பெயர், தாயின் பெயர், பாலினம், பிறந்த தேதி, பிறந்த இடம், குடியிருப்பு முகவரி (தற்போதைய மற்றும் நிரந்தர), திருமண நிலை (எப்போதாவது திருமணம் செய்து கொண்டால், மனைவியின் பெயர்), காணக்கூடியஅடையாளக் குறி, குடிமகனைப்பதிவுசெய்த தேதி, பதிவு செய்த வரிசை எண் மற்றும் விதி 13 இன் கீழ் வழங்கப்பட்ட தேசிய அடையாள எண். (2003விதிகளின் விதி 3 இன் துணை விதி 3).

மறுபுறம், இந்தியாவின் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணை யர் அலுவலகம் என்.பி.ஆர் பற்றிய விவரங்களை வழங்க அதன் வலைத்தளத்தை புதுப்பித்தது. இது "தேசியம்" உட்பட 15 வகையான தகவல் களைத் கேட்டது, ஆனால் "தந்தை மற்றும் தாயின் பிறந்த இடம்" அதில் இடம் பெறவில்லை.

## என்.பி.ஆர் -2020 ஏற்கனவே இந்தியாவில் தொடங்கப்பட்டுவிட்டது: இது என்.ஆர்.ஐ. சிக்கு முதல் படி

ஜூலை 31, 2019 இன் கெசட் அறிவிப்பு மட்டுமல்ல, NPR இன் தொடக்கமும் செய்தித் தாள்களால் பரவலாக அறிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 11, 2019 இன் பி.டி.ஐ அறிக்கை கூறியது: "ஆர்ஜிஐ ஏற்கனவே 1,200க்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் 40 நகரங்கள் மற்றும் நகரங்களில் 5,218 கணக்கீட்டுத்




தொகுதிகள் மூலம் ஒரு பைலட் திட்டத்தைத் தொடங்கி யுள்ளது, அங்கு அது மக்களிடமிருந்து பல்வேறு தரவுகளை சேகரித்து வருகிறது. இறுதி கணக்கீடு ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் 2020 மற்றும் செப்டம்பர் 2020இல் முடிவடையும்."

அது மேலும் கூறியது: "தேசிய பயிற்சி யாளர்களின் பயிற்சி 2019 அக்டோபர் 14 முதல் தொடங்க உள்ளது, மேலும் பயிற்சியின் அட்டவணை குறித்து மாநில மூத்த அதிகாரி களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் டி.எம் மற்றும் ஏடிஎம் களுக்கான பயிற்சி டிசம்பர் முதல் வாரத்திற்குள் முடிக்கப்பட்டது. அவர்கள் இப்போது மற்ற அதிகாரிகளின் பயிற்சியாளர்களாக இருப்பார் கள், அவர்கள் அடிமட்டமட்டத்திலும் அதற்கு மேலாகவும் பயிற்சியை மேற்கொள்வார்கள்.


எனவே, என்.பி.ஆர் அல்லது என்.ஆர்.ஐ.சி / என்.ஆர்.சி செயல்முறை அறிவிக்கப்படவில்லை அல்லது தொடங்கப்படவில்லை என்று சொல்வது உண்மை இல்லை. அது தொடங்கப் பட்டுவிட்டது. முழுமையான வீடு வீடாக சென்று கணக்கீடு செய்யப்படுவது ஏப்ரல் 2020 முதல் தொடங்கும்.

முடிவுகள் தெளிவாக உள்ளன: நாடு தழுவியஎன். ஆர்.ஐ.சி (அசாம்தவிர்த்து) தயாரிக் கும் செயல்முறை என்.பி.ஆர் -2020 துவக்கத் துடன் தொடங்கியுள்ளது. CAA (2029) ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து முஸ்லிம்களை வடிகட்டு கின்றன - மேலும் தடுப்புக்காவல் நிலையங்கள் அவர்களுக்கு வீடாக தயாராக உள்ளன.

நன்றி - பிசினஸ்டுடே

- அபூ அஃப்ரஹ்

பாகம்-2




# பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

- எஸ்.எம். முஷ்ரிப்

**பிராமணிஸ்டுகளின் தேசம் தழுவிய தேசவிரோத சதித்திட்டத்தை வெளிப்படுத்தினார்.**

அவர் அத்தோடு நின்று விடவில்லை. இந்த சதிகளின் ஆணிவேரை கண்டுபிடித்து அதனை அசைத்து பார்க்க நினைத்தார். இந்த சதிகளை ஒட்டுமொத்தமாக அழித்துவிட தன் மனதில் உறுதி பூண்டார். இந்த உலகத்திற்கு பிராமணிஸ்டுகளின் உண்மையான தீவிரவாத முகத்தை வெளிச்சம் போட்டுக்காட்ட நினைத்தார்.

ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறை இதனை எவ்வாறு நடக்க அனுமதிக்கும். ஒருவேளை ஹேமந்த் கர்கரே அவருடைய வேலைகளை பூர்த்தி செய்து இருப்பாரேயானால் குண்டு வெடிப்புகளின் பின்னால் உள்ள தேச விரோத சதிகளில் இந்தியாவின் முதன்மை உளவு நிறுவனமான மத்திய உளவுத்துறையும் ஒரு கூட்டாளி என்ற உண்மை உலகுக்கு தெரிய வந்திருக்கும்.

எனவே அவர்கள் 26/11 என அடையாளப் படுத்தப்படும் மும்பை தீவிரவாத தாக்குதல்களை பயன்படுத்தி ஹேமந்த் கர்கரேவை கொலை செய்துவிட்டார்கள்.

லஷ்கரே தொய்பா அமைப்பினர் மும்பையை தாக்க இருந்தது குறித்த மிகச்சரியான உளவுத் தகவல்கள் மத்திய உளவுத்துறைக்கு ஏற்கனவே கிடைத்திருந்தன. மேலும் அந்த தீவிரவாதிகள் பயன்படுத்தப் போகும் கைபேசிகளின் எண்களும் மத்திய உளவுத்துறைக்கு ஏற்கனவே கிடைத்திருந்தன.

ஆனால் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை இந்த தகவல்களை எல்லாம் மறைத்து விட்டது. லஷ்கர்-இ-தொய்பா தாக்குதலுக்கு இணையாக மற்றொரு தாக்குதலை இந்த தாக்குதலுடன் ஒருங்கிணைத்து தங்கள் சதிகார கூட்டாளிகள் உதவியுடன் ஹேமந்த் கர்கரேவை கொலை செய்து விட்டது. இதற்காக ஐ.பி என்ற மத்திய உளவுத்துறை லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி களின் கப்பலின் நகர்வுகளை நொடிக்கு நொடி கண்காணித்தது. இந்த தீவிரவாதிகளின் கைப் பேசிகளை தெளிவாக ஒட்டு கேட்டதன் மூலம் மத்திய உளவுத்துறைக்கு இது சாத்தியமானது.

ஹேமந்த் கர்கரே கொலை செய்யப்பட்டு விட்டாலும் அவர் 2008க்கு முன்பு நடந்த குண்டு வெடிப்பு வழக்குகளில் அபிநவ் பாரத், ஆர்.எஸ். எஸ். மற்றும் இன்னும் பிற பிராமணிஸ்ட் இயக்கங்களின் தொடர்பு இருப்பதை உறுதிப் படுத்தும் விதமாக ஏகப்பட்ட அறிவியல் மற்றும் இதர ஆதாரங்களை புதையலென விட்டு விட்டு சென்றிருந்தார்.

இறுதியாக இவை பொதுவெளிக்கு மக்கள் மன்றத்தின் முன் வந்தது. 2008க்கு முன்பு நடந்த அனைத்து குண்டு வெடிப்பு வழக்குகளையும் மறுவிசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வளரத் தொடங்கியது.

2007இல் நடந்த அஜ்மீர் ஷரீஃப் குண்டு

வெடிப்பு வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை முதன் முதலாக அமைத்த மாநிலம் ராஜஸ்தான். ராஜஸ்தான் சிறப்பு புலனாய்வுக்குழு சரியான குறிப்புகளுடன் தன் விசாரணையை துவங்கியது. அதன் விசாரணையில் மொத்தப் படமும் தலைகீழானது. முஸ்லிம்கள் மிகத் தீவிரமாக சந்தேகிக்கப்பட்ட இந்த வழக்கில் அபிநவ் பாரத், ஆர்.எஸ்.எஸ்., ஜெய் வந்தே மாதரம் போன்ற இயக்கங்களின் தொடர்பு கண்டறியப்பட்டது. அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் மற்றும் மறுக்கவியலாத இதர சாட்சியங்களின் அடிப்படையில் சிறப்பு புலனாய்வுக்குழு பிராமணிஸ்ட் இயங்கங்களை சேர்ந்தவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக அக்டோபர் 2010இல் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இந்த உண்மை மற்ற குண்டு வெடிப்பு வழக்குகளையும் மறுவிசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலுப்படுத்தியது. அதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக இந்திய அரசு தீவிரவாத வழக்குகளை விசாரிக்கவென என்.ஐ.ஏ எனப்படும் தேசிய புலனாய்வு நிறுவனத்தை (National Investigation Agency) உருவாக்கியிருந்தது.

எஸ்.சி. சின்ஹா என்பவர் இதன் தலைவராக இருந்த போது இதன் நம்பகத்தன்மை மிக அதிக அளவில் இருந்தது. அதன் விசாரணை நடுநிலையாகவும் மிகத் திறமையானதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது. எனவே, சமூக ஆர்வலர்கள், மதச்சார்பற்றவர்கள், இஸ்லாமிய தலைவர்கள் போன்றோர் இதற்கு முந்தைய குண்டு வெடிப்பு வழக்குகளையும் என்.ஐ.ஏ எனப்படும் தேசிய புலனாய்வு நிறுவனமே விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

மக்களின் கோரிக்கைக்கு தலைசாய்த்திட வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. எனவே, குண்டு வெடிப்பு வழக்குகளான சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ், அஜ்மீர் ஷரீஃப், மெக்கா மஸ்ஜித், ஹைதராபாத் மற்றும் மாலேகான் 2006 வழக்குகள் மறுவிசாரணைக்காக என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்த வழக்குகளை என்.ஐ.ஏ. எந்தவித பாகுபாடுமில்லாமல் விசாரித்து இந்த வழக்கில் சந்தேகிக்கப்பட்ட, கைது செய்யப்பட்டிருந்த, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்த முஸ்லிம் இளைஞர்களை அப்பாவிகள் என கண்டறிந்து அவர்களை விடுதலை செய்தது. அல்லது அவர்களுடைய பெயர்களை குற்றப் பத்திரிகையிலிருந்து நீக்கி அவர்களை விடுவித்தது. அதற்கு பதிலாக ஆர்.எஸ்.எஸ், அபிநவ் பாரத் மற்றும் ஜெய் வந்தே மாதரம் போன்ற இயங்கங்களை சேர்ந்த தீவிரவாதிகளை கைது செய்து 2010-2011இல் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

இந்த முன்னேற்றங்கள் ஐ.பி என்ற மத்திய உளவுத்துறைக்கும் பிராமணிஸ்ட் இயக்கங்களுக்கும் சாவு மணி போல் கேட்கத்தொடங்கி விட்டது. இதே நிலை தொடருமானால், இதே உற்சாகத்துடன் தேசிய புலனாய்வு நிறுவனம் இதற்கு முந்தைய வழக்குகளையும் மறுவிசாரணை செய்யுமானால் தங்கள் விளையாட்டு முடிந்து விடும், தங்கள் கதை அவ்வளவு தான் என்பதை ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையினரும் பிராமணிஸ்ட் இயங்கங்களும் உணர்ந்து கொண்டனர்.

இப்போது மீதமுள்ள வழக்குகளை தேசிய புலனாய்வு நிறுவனத்திடம் ஒப்படைப்பதை விட்டு உடனடியாக அவர்கள் தடுத்தாக வேண்டும். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் கதைகளுக்கு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி அவற்றை சிக்கலாக்க வேண்டும். இதன் காரணமாக எவ்வளவு காலதாமதமாக்க வேண்டுமோ அவ்வளவு கால தாமதமாக்க வேண்டும். குண்டு வெடிப்பு வழக்குகளை மறுவிசாரணைக்கு கோருவதற்கு அச்சாரமாக உள்ள 2008 குண்டு வெடிப்பு வழக்கின் விசாரணையில் சந்தேகங்களை கிளப்ப வேண்டும். ஏற்கனவே முஸ்லிம்கள் மீது பொய் வழக்குகளை போட்ட பழைய செய்கைகளை நியாயப்படுத்தும் விதமாக இன்னும் பல முஸ்லிம் இளைஞர்கள் மீது தொடர்ந்து வழக்குகளை போட வேண்டும்.

அவர்கள் தங்களுக்கிருந்த அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தேசிய புலனாய்வு நிறுவனத்திடம் மீதமிருந்த வழக்குகளை மறு விசாரணைக்கு தரப்படுவதை நிறுத்த முடியும். ஆனால் மேலே சொல்லியுள்ள மற்ற நோக்கங்



களை நிறைவேற்ற என்.ஐ.ஏ எனப்படும் தேசிய புலனாய்வு நிறுவனத்தில் அவர்களின் நம்பிக் கைக்கு பாத்திரமான அதிகாரிகள் பதவி ஏற்க வேண்டும்.

இந்த நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் தேசிய புலனாய்வு நிறுவனத் தின் ஒட்டு மொத்த தோற்றத்தையும் மாற்றி அமைத்தனர். இதற்காக அவர்கள் நேர்மையான தகுதிவாய்ந்த அதிகாரிகளை பணியிடமாற்றம் செய்தனர். ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறைக்கு விசுவாசமான அதிகாரிகளை, அவர்களின் தலையாட்டி பொம்மைகளை என்.ஐ.ஏ என்ற தேசிய புலனாய்வு நிறுவனத்தில் ஊடுறுவ செய்து பணியமர்த்தினர்.

இப்படி மாற்றியமைக்கப்பட்ட என்.ஐ.ஏ. தங்களின் எஜமானர்களாகிய பிராமணிஸ்டு களின் நோக்கங்களை நிறைவேற்றும் விதத்தில் அவர்களுக்கேற்ப சீரமைக்கப்பட்டது.

*1) 2008* மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கை பொறுத்தவரை அவர்கள் முக்கியமான அறிவியல் பூர்வமான ஆதாரங்களாகிய லெட்டினன்ட் கர்னல் புரோகித், சாத்வி பிரக்யா சிங், இன்னும் மற்றவர்களும் பங்கேற்ற அபினவ் பாரத் அமைப்பின் சதிகார ஆலோசனைக் கூட்டங்களை அதன் வீடியோ ஆடியோக்களை பொதுமக்களிடம் இருந்து மறைத்து விட்டனர். வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட மோட்டார் சைக்கிளில் சொந்தக்காரரர் என்பது பற்றிய விஷயத்தை அமுக்கி வாசித்து மௌனம் காத்தார்கள் ஆனால் இரண்டாவது நிலை ஆதாரமான கர்னல் புரோகித்-இன் வீட்டி லிருந்து கைப்பற்றிய ஆர்.டி.எக்ஸ்-இல் உள்ள முரண்பாடுகளை வேண்டுமென்றே வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள். இதன் மூலம் ஹேமந்த் கர்கரேவும் அவருடைய அணியினரும் இந்த வழக்கில் செய்திருந்த விசாரணையில் சந்தேகங்களை உருவாக்க முயன்றனர்.

*2) 2012*-இல் அவர்கள் *2006* முதல் *2011* வரை நடந்த குண்டுவெடிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்டதாக கூறி தலைமறைவாக இருந்த இந்தியன் முஜாஹிதீன் அமைப்பை சேர்ந்தவர்கள் மீது ஒரு பொதுவான முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தனர். அப்படி தலைமறைவாக இருந்த குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் ஒரே பெயருடன் இல்லாமல் பல்வேறு மாற்றுப்பெயர்களுடன் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. இதற்கு காரணம் அப்போது தான் அவர்கள் தான் விரும்பிய யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம், அவர்களின் பெயர்களை தாங்கள் ஏற்கனவே முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பல பெயர்களில் ஏதாவது ஒன்றுடன் ஒப்பிட்டுக் கொள்ளலாம்.

அவர்கள் ஜெர்மன் பேக்கரி வழக்கில் யாசின் பட்கல் என்கிற முஹம்மது சித்திபப்பாவை *2013*ல் கைது செய்தனர். ஆனால் போதுமான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் *2018*வரை அவரை நீதிமன்றத்தில் அவர்களால் ஆஜர்படுத்த இயலவில்லை.

இதே போல் அவர்கள் புனேவை சேர்ந்த ஏஜாஸ் ஷேக் என்கிற வசீம் என்பவரை *2014*-இல் கைது செய்தனர். அப்துல் சுப்ஹான் குரைஷி என்கிற தவ்கீர் என்பவரையும் அரீஸ் கான் என்கிற ஜுனைத் என்பவரையும் *2018*இல் கைது செய்தனர். இவர்களின் உண்மையான பெயர்கள் இந்த வழக்குகளில் சுட்டிக்காட்டப் படவில்லை என்ற போதும் இவர்களுக்கு எதிராக எநத் ஆதாரமும் இல்லை என்ற போதும் டெல்லி *2008*, அஹ்மதாபாத் *2008*, சூரத் *2008*, ஜெய்பூர் *2008*, மும்பை *2011* போன்ற பல்வேறு குண்டுவெடிப்பு வழக்குகளில் இவர்கள் குற்ற வாளிகளாகக் காட்டப்பட்டனர். இன்னும் இது போன்ற பல்வேறு கைதுகள் எதிர்காலத்தில் செய்யப்படலாம். அவர்களின் ஒரே நோக்கம் இந்த விஷயத்தை குழப்பி தெளிவற்றதாக்கி, எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு நீதிமன்ற நடவடிக்கைகளை தாமதப்படுத்தி, அப்பாவி முஸ்லிம்களை வருடக்கணக்கில் சிறையில் வாடவிடவேண்டும். இந்த வழக்குகள் முடிவில் நீதிமன்றத்தின் நுண்ணாய்வின் முன் நிற்காது என்பது ஐ.பி. என்ற மத்தி உளவுத்துறைக்கு தெரியும்.

**- அடுத்த இதழில் தொடரும்**

அசாமில் குடியுரிமை சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட என்.ஆர்.சி.யில் பெயர்கள் விடுபட்டவர்கள் வெளிநாட்டவர் தீர்ப்பாயத்தில் (foreigner tribunal) வழக்கு தொடர்ந்து தங்களை இந்திய குடிமக்கள் என்று நிரூபிக்க வேண்டும். இப்படி நிரூபிக்க தவறியவர்கள் காவல்மையங்கள் எனப்படும் டிடென்ஷன் காம்ப்-இல் வைக்கப்படுவார்கள். கடந்த டிசம்பர் மாதம் 22ம் தேதி டெல்லியில் நடந்த பேரணியில் இப்படி காவல்மையங்கள் எதுவுமே இந்தியாவில் இல்லை என மோடி அவர்கள் மொழிந்த நிலையில் இந்த காவல்மையங்களில் அடைக்கப்பட்டிருந்த 988 பேரில் 28 பேர் இறந்துவிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

நவம்பர் 27 அன்று மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளிக்கப்பட்ட பதிலில் 988 பேர் வெளிநாட்டவர் என கண்டறிந்து தடுப்பு காவல் மையங்களில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 28 பேர் இறந்துவிட்டதாகவும் பதில் அளிக்கப்பட்டது. ஆனால் அந்த இறப்புகள் பயத்தின் காரணமாகவோ மன அழுத்தத்தின் காரணமாகவோ நிகழவில்லை என்றும் கூறப்பட்டது. தற்போது 29வது நபராக நரேஷ் கோச் என்ற 55 வயது நபர் இறந்துள்ளார்.

ஆனால் சி.ஜே.பி எனப்படும் சிட்டிசன் ஃபார் ஜஸ்டிஸ் அண்டு பீஸ் எனப்படும் அமைப்பு இந்த எண்ணிக்கை 100ஐ தாண்டும் என்று அறிவித்துள்ளது. மேலும் அப்படி இறந்தவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் தாங்கள் அறிந்து வைத்திருப்பதாகவும் கூறுகிறது. என்.ஆர்.சி நடைமுறைகளுக்கு பின்னர் தடுப்பு காவல் மையங்களில் மற்றும் வெளியே தற்கொலை செய்து கொண்டவர்கள் என இந்த எண்ணிக்கை 100ஐ தாண்டும் எனவும் அவர்களின் தகவல்கள் தங்களிடம் இருப்பதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஹர்ஷ் மந்தர் என்பவர் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவராக இருந்தார். 2018 ஜனவரியில் அவர் இந்த காவல் மையங்களுக்கு சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தார். அப்படியே அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டார்.

“அங்கிருந்தவர்களில் பலர் மனோநிலை பாதிக்கப்பட்டுவிட்டிருந்தனர். அவர்களின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. அவர்கள் அவர்களுடைய குடும்பத்தினரை விட்டு பிரிக்கப்பட்டு இருந்தனர். அவர்கள் நிரந்தர கவலையுடன் யார் வந்திருப்பது என்பது கூட தெரியாமல் இருந்தனர். அவர்களுடைய குறைகளை கேட்க ஒரு நபர் வந்துள்ளார் என்பதைக்கூட அறியாமல் அவர்கள் துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்” என்கிறார் ஹர்ஷ் மந்தர். பின்னர் அவர் இது குறித்து மத்திய அரசுக்கு ஒரு அறிக்கையை அனுப்பி தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் ஒரு துரும்பும் மாறவில்லை. கடைசியில் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்துவிட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கை தொடர்ந்துள்ளார்.

**29 மரணங்களில் 26 மரணம் பிஜேபி அரசின் சர்பானந்தா சோனோவால் பதவிக்கு வந்த பின்னர் நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

# என்.ஆர்.சி. காவல் மையங்களில் மனநிலை பாதித்தும் தற்கொலை செய்து கொண்டும் 100 பேர் மரணம்



# மக்கள் எழுச்சியும் அரசின் அடக்குமுறையும்



20-ம் நூற்றாண்டில் இந்தியர்களின் பேரெழுச்சி என்பது இதுதான் என்று சொல்லலாம். அந்தளவுக்கு வரலாறு காணாத மக்கள் எழுச்சியை இந்தியா தற்போது கண்டி ருக்கிறது. உண்மையில் இதற்கு முன்னால் இந்துத்துவாவினர் நிகழ்த்திய நாசகர திட்டங்களுக்கு காட்டிய எதிர்ப்பை போல் ஓரிரு நாட்களில் முடிந்து விடும் என நினைத்த போராட்டங்கள் இரண்டு மாதங்கள் கடந்தும் வீரியம் குறையாமல் எழுந்து கொண்டே இருக்கிறது. காஷ்மீர் முதல் குமரி வரை இந்துத்துவ சக்திகளுக்கு எதிராக மக்கள் போடும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

அடித்தால் ஓடி விடுவார்கள் என பார்த் தார்கள், கல்லூரியில் புகுந்து மாணவர்களை அடித்து நொறுக்கினார்கள். ஆனால், என்ன வேண்டுமானாலும் செய் எங்கள் குரல் நிற்காது. நாங்கள் இறைவனுக்கு மட்டுமே அஞ்சிய வர்கள் என ஹிஜாப் அணிந்த ஒரு பெண்மணி பாசிசத்தை எதிர்த்து குரல் எழுப்பினாள். அன்றே தீ பிடித்தது நாடு முழுவதும்.

பிறகு, சுட்டும் பார்த்தார்கள். 30 பேருக்கு மேலாக இந்த அநியாயச் சட்டங்களுக்கு எதிராக போராடியதால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். ஆனாலும், எவரும் பின் வாங்கவில்லை. முன்பை விட போராட்டங்கள் வீரியமாயிருக்கின்றன.

அடுத்ததாக சங்பரிவார ரவுடிகளை பயன் படுத்தினார்கள். கோட்சேக்களை விட்டு சுட் டார்கள். கோட்சேக்களை உருவாக்கினார்கள். ஆனாலும் எதுவும் செய்திட முடியவில்லை. இந்த வரலாற்று பேரெழுச்சி வெற்றி பெறும் இன்ஷா அல்லாஹ்.

## சர்வதேச அளவில் விரிந்திருக்கும் போராட்டம்

இந்துத்துவ அரசின் இந்த நாசகர திட்டத்தை எதிர்த்து போராடாத நாடுகளே இல்லையெனும் அளவுக்கு போராட்டங்கள் விரிவடைந்திருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளிலும் இந்த CAA சட்டத்திற்கு எதிரான போராட்டம் பெரிய அளவில் நடந்திருக்கிறது

## ஜெர்மனியில் நடைபெற்ற போராட்டம்

ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் இந்திய தூதரத்திற்கு முன்பாக நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடி தன் எதிர்ப்பை காட்டி வருகிறார்கள். இந்தியாவின் குடியரசு தினம் முதற்கொண்டு அங்கே போராட்டம் நடைபெற்றது.

இந்தியாவை பூர்வகுடியாக கொண்டு பெர்லினில் வளர்ந்து வரும் நக்ஸ் பந்த் கூறுகிறார், “ என் அம்மா முஸ்லிம் என் தந்தை சீக்கியர். எனக்கு இந்தியாவில் இருக்கும் மதச்சார்பின்மை மிகவும் பிடித்த விசயம். ஆனால், இன்று அதற்கு பாதிப்பு வந்திருப்பதை உணர முடிகிறது. நான் ஒரு முஸ்லிமாகவும், தென் இந்தியாவை சேர்ந்தவள் என்பதற்கும் அதிக பெருமைப்படுகிறேன். ஆனால் இன்று அந்த பெருமையும் பாசிஸ்ட்களால் சூரை யாடப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்னால் இந்தியாவில் ஒரு முஸ்லிம் பெண்மணி ஹிஜாப் அணிந்த தற்காக ஒரு நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றப் பட்டதை படித்தேன். அமெரிக்காவில் நடை பெற்ற 9/11 தாக்குதலுக்கு பிறகு ஐரோப்பா முழுவதும் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிய முடியவில்லை. அந்த நிலை மாறுவதற்கு வெகு காலமானது. அப்படி ஒரு நிலை இந்தியாவில் உருவாக்கப்பட்டிருப்பதை நினைத்தால் மிகுந்த அச்சமாக இருக்கிறது.”

பெர்லினை சேர்ந்த கெர்தி கூறும் போது, “ நாங்கள் ஜெர்மனியில் வளர்ந்ததால் நாஜிக்களின் ஆட்சி எப்படி இருக்குமென தெரியும். இப்படி யொரு நாஜி அரசு இந்தியாவில் உருவாவதை கண்டு உலகில் ஏன் மக்கள் அமைதி காக்கிறார்கள் என தெரியவில்லை. “ (The Wire 25.01.2020)

## தலைநகர் டெல்லியில் தொடரும் போராட்டம்

டெல்லியின் ஜாகிர் நகரில் பெண்கள் முழுவதும் இணைந்து ஒரு போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். ஜாமியா கல்லூரி அருகில் இருப்பதால் காலையில் மாணவர்கள் கல்லூரியில் போராடுகிறார்கள். மாலையில் ஜாகிர் நகரில் கலந்து கொள்கிறார்கள்.

டெல்லி ஜாகிர் நகர் சாலையின் இருபுறமும் பெண்கள் அமர்ந்தவாறு போராடுகிறார்கள். 70 வயதை தாண்டிய முதியவர்கள் முதல் சிறு குழந்தைகள் வரை டெல்லியின் அதீத குளிரில் அமர்ந்திருக்கிறார்கள்.




அவர்கள் கையில் உள்ள அட்டைகளில் அம்பேத்கர், பகத்சிங், அபுல் கலாம் ஆசாத் ஆகியோரின் படங்கள் இருக்கிறது. அப்பகுதி முழுவதும் புர்காக்களாக (உடலை மறைத்துக் கொள்ள முஸ்லிம்கள் உடுத்துவது) ஒளிர்கிறது.

அப்பகுதியை சேர்ந்த பெண்மணி நிசாட் சொல்கிறார், இன்று வரை எங்கள் வாழ்நாளில் நாங்கள் போராட்டம் என்று வெளியே வந்த தில்லை. ஆனால் இன்று வெளியே வந்து போராடு கிறோம். போராடும் எங்களுக்கு லத்திகளையும், புல்லட்களையும் பரிசாக தராதீர்கள். எங்களுக்கு வேலையையும், உணவையும் கொடுங்கள் அதுவே தேவை”.

கையில் அம்பேத்கர் படத்தை ஏந்திய வாறு பௌசியா சொல்கிறார், “இந்த மனிதர் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என தனித் தனியாக சட்டத்தை உருவாக்கவில்லை. அனை வருக்குமாக உருவாக்கியிருக்கிறார். ஆனால் இன்று இவரை களங்கப்படுத்துகிறார்கள்.”

முஸ்லிம் பெண்மணி நஜ்மா கேட்கிறார், “பிஜேபியினர் முஸ்லிம்களுக்கு எதிரானவர் களல்ல என்று சொல்கிறார்கள். ஆனால் முஸ்லிம் பெயர்களில் உள்ள மாவட்டங்களின் பெயர் களை மாற்றுகிறார்கள். அவர்களால் முஸ்லிம் பெயர்களையே சகித்து கொள்ள முடியாது




என்றால் முஸ்லிம்களை எப்படி சகித்துக் கொள்வார்கள்?.."

பௌசியா ஆவேசத்துடன் பேசுகிறார், " மோடி முஸ்லிம்களை கல்வியறிவற்றவர்கள் என்று நினைக்கிறார். எங்களுக்கு CAA என்றால் என்னவென்று தெரியும்! அது முஸ்லிம்களை எவ்வாறு தனிமைப்படுத்துகிறது என தெரியும்! இதை தெரியாதவர்களிடமும் நாம் தெரியப்படுத்துகிறோம்."

இந்த கூட்டங்களின் ஊடாக இரவு 10.30க்கு மேல் ஓர் இளைஞர் CAA என்னவென்பதை விவரித்து கொண்டிருக்கிறார். மக்கள் கூடி ஆர்வமாக கேட்டு கலந்து கொள்கிறார்கள்.

ஹிஜாப் அணிந்த பெண்மணிகள் சங்பரி வாரங்களுக்கு இப்படி பதிலடி கொடுப்பார்கள் என்று யாரும் எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள். (28.12.2019 The Caravan)

## போராட்டங்களை கலை நிகழ்வாக மாற்றினார்கள்

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் நடக்கும் போராட்டம் அனைத்து இடங்களை யும் மிஞ்சியதாக இருக்கிறது. இந்த போராட் டத்தை சாதாரணமாக நிகழும் போராட்டங் களுக்குள் அடக்கிட முடியாது.

கலை நிகழ்வை போல் ஒவ்வொரு நாளும் புதுப்புது கலை நுட்பத்துடன் போராடு கிறார்கள். புதிய சிந்தனை கொண்ட மனிதர் களாக உருவாகியிருக்கிறார்கள்.

டிசம்பர் 15ல் ஜாமியாவில் காவல்துறை புகுந்து தாக்கப்பட்ட பிறகு டிசம்பர் 19ம் தேதி பெண்கள் ஒன்றிணைந்து காவல்துறைக்கு "நீங்கள் எவ்வளவு தாக்கினாலும் நாங்கள் பூக்கள் மட்டுமே தருவோம்" என பூக்களை பரிசாக வழங்கினார்கள்.

டிசம்பர் 20ம் தேதி 60 வயதான பெண்கள் ஒன்று சேர்ந்து சிஏஏ சட்டத்திற்கு எதிராக கைகளில் இலவசமாக மருதாணி போட்டு விடும் பணியை செய்தார்கள்.

டிசம்பர் 22ம் தேதி "FREE HUG" என்ற பெயரில் முகாம் அமைத்து மதம், சாதி பாராமல் நாங்கள் ஒன்றாக இருக்கிறோம் என தெரிவிக்கும் விதமாக ஒவ்வொருவரும் அணைத்துக் கொண்டார்கள்.

ஜனவரி 5ம் தேதி டெல்லியின் ரோடுகளில் இந்திய அரசியலமைப்பின் கூறுகளை எழுதி தங்கள் போராட்டம் அரசியலமைப்பை பாதுகாப்பதற்கு என தெரிவித்தனர்.

இப்படி பல வழிகளில் தங்கள் போராட்ட வழிமுறைகளை அமைத்துக் கொண்டார்கள்.

## சாஹின் பாக் போராட்டம்

டெல்லியில் உள்ள சாஹின் பாக்கில் நடை பெற்று வரும் போராட்டம் தான் தற்போதைய போராட்டங்களுக்கு தலைமை தாங்குகிறது. இதனை நடத்துகிறவர்கள் பெண்கள்.

காலையில் வந்து இரவில் எழுந்து செல்லும் போராட்டம் அல்ல இது. இரண்டு மாதங்கள்

ஆகியும் இரவு, பகல் என பாராமல் அம்மக்கள் அமர்ந்த இடங்களில் இருந்து எழாமல் போராடி வருகிறார்கள். அதிலும் இந்த போராட்டங் களுக்கு காரணமாக இருப்பவர்கள் 70 வயதை தாண்டிய பாட்டிமார்கள்.

அர்ஷத் அஹ்மத் கான் சொல்கிறார், "நான் டெல்லியில் சிஏஏ-வுக்கு எதிரான ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டதால் கைது செய்யப்பட்டேன். அதன் பிறகு வேறு போராட்டங்களில் கலந்து கொள்ள தயங்கி னேன். ஆனால் சாஹின் பாக்கில் போராடி வரும் 70 வயது பாட்டியை பார்க்கிறேன். இந்த குளி ரிலும் நகராமல் இரவு முழுக்க அமர்ந்திருக் கிறார். இவரின் துணிச்சலே என்னை மீண்டும் போராட வைத்திருக்கிறது என்கிறார்.

போட்டோகிராபி படிக்கும் வைபவ் யாதவ் சாஹின் பாக் பகுதியில் முதலுதவி செய்வதற் காக மருத்துவ முகாம் ஒன்றை அமைத்திருக் கிறார். இவர் சொல்கிறார், சாஹின் பாக் போராட் டத்திற்கு மிக முக்கிய காரணம், யாராவது ஒருவர் முடியாமல் போகும் போது இன்னொருவர் அந்த இடத்தை நிரப்ப எப்போதும் தயாராக இருக்கிறார்கள். இதுவே போராட்டத்தின் மிகப்பெரும் வெற்றி."

சாஹின் பாக் போராட்டத்திற்கு ஒரு தலைமை கிடையாது. அவர்கள் எந்த அரசியல் கட்சியையும் பிரதிநிதித்துவ படுத்தவில்லை. பல்வேறு விதமான கருத்துக்களை அங்கே முன் வைக்கிறார்கள். அனைத்தும் மிக சாதரணமாக கடந்து செல்லப்படுகிறது. அம்மக்கள் தங்கள் போராட்டங்களில் மட்டும் மிக உறுதியாக இருக்கிறார்கள்.

கவிதைகள் பாடுகிறார்கள், பாடல்கள் பாடுகிறார்கள், நாடகங்கள் நடத்துகிறார்கள் இப்படி தங்கள் போராட்டங்களை அறிவு சார்ந்தும் நகர்த்துகிறார்கள்.


சஹீன் பாக் போராட்டத்தில் கலந்து கொள் வதற்காகவே பல பெண்கள் தங்கள் வேலையை வேண்டாம் என்று எழுதி கொடுத்து விட்டு வந்து போராடுகிறார்கள். சிஏஏ வில் இருந்து பிஜேபி அரசு பின்வாங்கும் வரை நாங்கள் எழ மாட்டோமென உறுதியுடன் ஒரு மாதத்திற்கும் மேலாக போராடுகிறார்கள்.

## மஹராஷ்டிராவில் போராட்டம்

பல்லாயிரக்கணககான் மக்கள் வீதிகளில் இறங்கி சிஏஏவுக்கு எதிரான போராட்டங் களில் தங்களை இணைத்துக் கொண்டனர். இப்போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக 1200 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட் டிருக்கிறது.

## கேரளாவில் முதியவர் தீக்குளிப்பு

70 வயதான ஸ்ரீநிவாஸ் பிராஜாபதி என்ற முதியவர் பொது இடத்தில் CAA சட்டத்திற்கு



எதிரான வாசகத்தை மக்கள் மத்தியில் தூக்கி எறிந்து விட்டு தன் உடலில் தீ வைத்து கொண்டார்.

உயிரை மாய்த்துக் கொள்ளும் உரிமை ஒருவரிக்கில்லை என்றால் கூட தன் தள்ளாத வயதில் இத்தகைய பாசிச அரசுக்கு எதிராக வாழ்வதை விட இறப்பதே மேல் என இந்த எதிர்ப்பை காட்டினார்.

## நீதிமன்றத்தின் செயல்பாடு

இந்துத்துவ அரசின் தொடர்ச்சியான அநியாயங்களுக்கு நீதிமன்றங்கள் துணை போவது போல நீதிமன்றங்கள் ஒன்று அமைதி காக்கிறது அல்லது பாபரி மஸ்ஜித் வழக்கிற்கு தீர்ப்பு வழங்கியது போல சனாதன தீர்ப்பை வழங்குகிறது. இதற்கு எதிராக மனசாட்சி கொண்ட முன்னாள் நீதிபதிகளே குரல் எழுப்ப தொடங்கியிருக்கிறார்கள்.

## CAA சட்டத்தை தடை செய்ய முடியாது - உச்சநீதிமன்றம்

இந்தியா முழுக்க சிஏஏ சட்டத்திற்கு எதிராக பெரும் போராட்டங்கள் வெடித்திருக்கும் சூழலில் இதனை விவாதிக்க கூட நேரம் கொடுக்க முடியாது என கூறி சட்டத்திற்கு இடைக்கால தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது.

இதுவரை மொத்தம் 144 வழக்குகள் சிஏஏ சட்டத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் போடப் பட்டிருக்கிறது. அற்ப காரணங்களை சொல்லி இந்த வழக்கின் விசாரணையை மறுதலித்து வருகிறார்கள் நீதிபதிகள்.

## முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியின் எதிர்ப்பு

டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாக இருந்த அஜித் பிரகாஷ் சாஹ் உச்சநீதிமன்றத்தின் மீதான தன் நம்பிக் கின்மையை வெளிப்படையாக தெரிவித்திருத் திருக்கிறார்.

நீதிபதி கூறும்போது, "பாஜக அரசால் கொண்டு வரப்பட்ட CAA என்ற சட்டம் அப் பட்டமாக இந்திய அரசியலமைப்பு வழங்கும் அடிப்படை உரிமையை தகர்க்க கூடியது.

> நாங்கள் இறைவனுக்கு மட்டுமே அஞ்சியவர்கள் என ஹிஜாப் அணிந்த ஒரு பெண்மணி பாசிசத்தை எதிர்த்து குரல் எழுப்பினாள். அன்றே தீ பிடித்தது நாடு முழுவதும்.
>
> "நாங்கள் ஜெர்மனியில் வளர்ந்ததால் நாஜிக் களின் ஆட்சி எப்படி இருக்குமென தெரியும். இப்படியொரு நாஜி அரசு இந்தியாவில் உருவாவதை கண்டு உலகில் ஏன் மக்கள் அமைதி காக்கிறார்கள் என தெரியவில்லை."
>
> அவர்களால் முஸ்லிம் பெயர்களையே சகித்து கொள்ள முடியாது என்றால் முஸ்லிம் களை எப்படி சகித்துக் கொள்வார்கள்?..
>
> இந்துத்துவ அமைப்பினர் சிஏஏவுக்கு எதிராக நடைபெறும் கூட்டத்தில் வன்முறை யில் ஈடுபட வேண்டும் என முகநூல், வாட்சாப் குழுக்கள் வழியாக பேசியிருப்பது வெளிச்சத் திற்கு வந்தது.
>
> இந்து மகாசபா ஜாமியாவில் சுட்டவனை "கோட்சே போலொரு தியாகி" என்று புகழ்ந் திருக்கிறார்கள். இதுபோல் சாஹின் பாக்கில் இருப்பவர்களும் சுட்டுக் கொல்லப்பட வேண் டும் என அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

வெளிப்படையாக முஸ்லிம்களுக்கு எதிரானது இச்சட்டம்.

அரசியலமைப்பு சட்டம் பிரிவு 15 தரக் கூடிய அடிப்படை உரிமைகளில் ஐந்து நிலை களிலும் இச்சட்டம் எதிரானது. ஆனால், அரசிய லமைப்பின் அடிப்படை உரிமைகளையே கேள்விக்குள்ளாக்கும் இவ்வழக்கை விசாரிக்கா மல் காலம் தாழ்த்துவது உச்சநீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையின்மையை அதிகரிக்கிறது.

நீதிமன்றங்கள் அதன் அரசியலமைப்பின் உரிமைகளுக்காக இயங்க வேண்டுமே ஒழிய அரசாங்கத்திற்கு ஆதரவாக இயங்கக் கூடாது.

சமீபத்திய நீதிமன்றத்தின் ஒவ்வொரு நடைமுறைகளும் பெரும் விமர்சனத்தை எதிர்கொள்கிறது. வழக்கை விசாரிக்க வேண்டுமென்றால் முதலில் போராட்டத்தை நிறுத்துங்கள் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பாப்டே முன் நிபந்தனை விதிக்கிறார்.

இதுவெல்லாம் எந்த சட்டத்தில் இருக்கிறது என தெரியவில்லை.

தேசத்துரோக சட்டம் போடுவதில் இதே போன்று அநியாயங்கள் தொடர்கிறது. உத்திர பிரதேச முதல்வர் 'ஆசாதி' என்ற கோசத்தை பயன்படுத்தினால் அவர்கள் மீது தேசத்துரோக வழக்கு என்கிறார். ஜாமியாவில் துப்பாக்கிச் சூடு நடத்திய மாணவனுக்கு பின்னால் இருந் தவர்கள் பாஜகவை சேர்ந்தவர்கள். அவர்கள் மீது தேசப்பாதுகாப்பு சட்டம் போடுவதற்கு எல்லா முகாந்திரமும் இருக்கிறது. ஆனால் போடப்படுவதில்லை.

இதை போலவே இந்திரா காந்தி அமல் படுத்திய நெருக்கடி காலநிலையில் நீதிமன் றங்கள் கோழைத்தனமாக நடந்து கொண்டன. தற்போதும் அதே சூழல் நிலவுகிறது. இது தொடருமானால் இதன் விளைவுகள் மிக மோசமானதாக இருக்கும்."

## மேற்கு வங்காளத்தில் இருவர் பலி

மேற்கு வங்காளத்தில் லட்சக்கணக்கான பேர் ஒன்று திரண்டு சிஏஏ வுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டனர். இந்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்களில் இருவர் காவல்துறையால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

## அறிஞர்கள் 19 மாநிலத்தின் முதலமைச்சர்களுக்கு கடிதம்

ரொமிலா தாப்பர், பிரதாப் பட்நாயக், பிரஷாந்த் பூசன், மகாத்மா காந்தியின் பேரன் உள்ளிட்ட முன்னாள் அரசு அதிகாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவரும் பிஜேபி ஆட்சி இல்லாத 19 மாநிலத்துக்கு NPR திட்டத்தை அமல்படுத்தக் கூடாது என கோரிக்கை வைத்து கடிதம் எழுதினார்கள்.

## கோவாவில் கிறிஸ்துவர்கள் போராட்டம்

கோவாவில் தொடர்ச்சியாக சிஏஏவுக்கு எதிராக பரவலாக போராட்டம் நடந்து வந்தாலும்கிறிஸ்துவர்கள்நடத்திய போராட்டம் பெரும் கவனத்தை ஈர்த்தது. தேவாலயங்கள், கிறிஸ்துவ அமைப்புகள் எல்லாம் கூடி இந்த போராட்டத்தை செய்தார்கள்.

இதில் பேசிய கிறிஸ்துவ தலைவர்கள், இன்று முஸ்லிம்களாக இருக்கலாம், நாளை கிறிஸ்துவர்கள், தலித்கள் என இந்த பாசிசம் விரிவுபடும். இது மனிதர்களுக்கு எதிரான சட்டம் அகற்ற வேண்டும் என்று சொன்னார்கள். (The caravan 26.01.2020)






## சிஏஏ வுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட வேண்டும் - சங்பரிவார் அமைப்புகள்

*சிஏஏவுக்கு எதிராக நாடு முழுக்க நடைபெறும் போராட்டங்களில் வன்முறையில் ஈடுபட வேண்டும் என இந்துத்துவ அமைப்பினர் திட்டம் போட்டிருப்பது அம்பலமானது.*

*பீகாரில் அமீர் என்ற 18 வயது சிறுவன் சிஏஏ வுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டதால் கொல்லப்பட்டான். இந்த கொலையில் பிடிபட்ட இந்துத்துவ அமைப்பினர் போன்களில் சிஏஏவுக்கு எதிராக நடைபெறும் கூட்டத்தில் வன்முறையில் ஈடுபட வேண்டும் என முகநூல், வாட்சாப் குழுக்கள் வழியாக பேசியிருப்பது வெளிச்சத்திற்கு வந்தது. (04.01.2020 தினகரன்)*

## ஜாமியா கல்லூரி போராட்டம்

*இன்று உலகில் நடைபெறும் சிஏஏ போராட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்தது ஜாமியாவில் காவல்துறை நிகழ்த்திய வன்முறை. அதற்கெதிராக திரண்ட ஹிஜாப் அணிந்த மாணவிகளின் வீரம்.*

*இதை தொடர்ந்து ஜாமியாவிலும் போராட்டம் ஓயவில்லை, தொடர்கிறது. தினசரி நாடகங்கள், கவிதைகள் என போராட்டம் கலை நிகழ்வாக மாறியிருக்கிறது, இதனை குலைக்கும் நோக்கில் பாஜகவினர் வெறுப்பு சிந்தனையில் உந்தப்பட்ட ஒருவன் கையில் துப்பாக்கியுடன் வந்து போராட்டத்தில் இருந்த ஒருவரை சுட்டான். இதனை காவல்துறை கைக்கட்டி வேடிக்கை பார்த்தது.*

*சுடப்பட்டதில் பாதிப்புக்குள்ளான மாணவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு கூட கடினம் காட்டினார்கள் காவல்துறையினர். இடையில் போடப்பட்ட தடுப்புகளை கூட அகற்றவில்லை. தடுப்பில் ஏறி ரத்த காயத்துடன் மாணவர் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார்.*


*இந்து மகாசபா ஜாமியாவில் சுட்டவனை "கோட்சே போலொரு தியாகி" என்று புகழ்ந்திருக்கிறார்கள். இதுபோல் சாஹின் பாக்கில் இருப்பவர்களும் சுட்டுக்கொல்லப்பட வேண்டும் என அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.* (Times now 31.01.2020)

## ஐ.நா தீர்மானம்

*இந்தியாவில் தற்போது இயற்றியுள்ள சிஏஏ சட்டம் மிகவும் ஆபத்தானது. இதனால் உலகிலேயே நாடற்றவர்களின் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் நாடாக இந்தியா மாறும். இச்சட்டம் சிறுபான்மை மக்களுக்கு எதிரானது என கண்டனத் தீர்மானம் ஐரோப்பிய யூனியனில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.*

*இந்த தீர்மானத்தின் மீதான விவாதமும், ஓட்டெடுப்பும் விரைவில் எடுத்துக் கொள்ளப் படும் என ஐ.நா வின் தரப்பில் சொல்லப் பட்டிருக்கிறது.*

**-அபூ சித்திக்**



## ஜனவரி 30

### தேசத்தந்தை காந்திஜி கொல்லப்பட்ட தினம்

# சுதந்திர இந்தியா தீவிரவாதம்

கடந்த ஜனவரி அன்று கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் மற்றும் நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதி என்ற தலைப்பில் காந்தி படுகொலை பற்றிய கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது

இக்கருத்தரங்கம் த.மு.மு.க.வின் நகர தலைவர் எஸ். அஷ்ரப் அலி தலைமையில் நடந்தது. வைகறை வெளிச்சம் வாசகர் வட்டத்தின் ஜெ. உமர் பாரூக் அவர்கள் வரவேற்புரையுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தில், சகோதரர் கி.ஜாகிர் உசேன் அவர்கள் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்த பிறிதொரு சிறப்புபேச்சாளர் சகோதரர் விடுதலை செல்வன்(மாநில துணை பொதுச் செயலாளர், ஆதி தமிழர் பேரவை) அவர்கள் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

இதில் பேசப்பட்ட சிறப்புரையிலிருந்து சில பகுதிகளை கொடுக்கிறோம்.

இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாம் அனைவரும்- அவர்கள் துறையை சேர்ந்தவர்களாக இருந்தாலும்-காந்திஜி படுகொலையை எளிதாக எடுத்துக்கொண்டு வாழ பழகிவிட்டோம். இதுவே இன்று காவி பயங்கரவாதம் வளர்ந்து நிற்பதற்கு காரணம்.

காந்தியை முன்னிறுத்தி பயனடைந்த காங்கிரஸ் தலைவர்கள் சர்தார் வல்லபாய் பட்டேல், நேரு உட்பட காந்தி படுகொலை நாளை “தீவிரவாத எதிர்ப்பு நாளாக” அறிவிக்கவில்லை. இது ஏன்?என ஆய்வு செய்வது காந்தி படுகொலை வரலாற்றில் ஒரு முக்கிய பகுதியாகும்.

காந்தி படுகொலை அதில் சொல்லப்படும் விதத்தில், தீவிரத்தை குறைத்து நீர்த்துப் போக செய்து விட்டார்கள். பயங்கரவாதத்தை இயல்பான செய்தியாக்கி, சடங்காக்கிவிட்டன மீடியாக்களும், பாடபுத்தகங்களும். இதனால் காந்தி கொலையை நியாயப்படுத்தி வாதிடுவோர் இன்று நாடாளும் நிலை உள்ளது.

இத்தீவிரவாத திட்டத்திற்கு பின்னணி மூளையாக செயல்பட்ட வி.டி.சவார்க்கர் தலைமையில் ஹிந்துத்துவா,இந்து ராஷ்டிரா பெயரால் இயங்கிய ரகசிய தீவிரவாத கும்பல் காந்திஜியின் உயிரை துப்பாக்கி குண்டுகளால் துளைத்தது. இவர்கள் பிராமணர்கள்.

இந்த சவார்க்கரை பெரிய சுதந்திர போராட்ட வீரர் என காவியை பயங்கரவாதமாக்கியவர்கள்

பொய்யுரை செய்துவருகிறார்கள். சவார்க்கர் ஒரு ஆங்கிலேயே அதிகாரியை இலண்டனில் கொலையை செய்ததின் விளைவாக, பிரிட்டிஷ் அரசு அந்தமான் சிறையில் அடைத்தது.சிறைக் கொட்டடியில் கிடந்து உயிர் நீத்து தியாகி யானார் என நாம் நம்பினால்,அது பெரிய வரலாற்று பிழை.நம்மை அடிமைப்படுத்திய தோடு,செல்வங்களை சுரண்டி உள்நாட்டு உற்பத்திக் கூடங்களை நசிய செய்து, செயற்கை யான பஞ்சத்தை உருவாக்கிய பிரிட்டிஷ் அரசுக்கு **1911**இல் ஒரு மன்னிப்பு கடிதம் எழுதினார் சவார்க்கர்.

அக்கடிதத்தில் "இனி பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக செயல்பட மாட்டேன்"என உறுதி கூறி மன்னிப்பு கோரியது வெட்ட வெளிச்சமாகி விட்டது. இந்த எண்ணங்கள் பிற சுதந்திரப் போராட்ட கைதிகளுக்கு தோன்றவில்லையா? என்று கேட்கலாம். சுதந்திர போராட்டத்தில் தியாகத்தின் பங்களிப்பை உணர்ந்த பிற கைதிகள், சமரசம் செய்துகொள்ளவில்லை. துரோகம் என்று நினைத்தார்கள்.

ஏன் மன்னிப்பு கடிதம் எழுதிக்கொடுத்தார் தெரியுமா?. சிறையிலிருந்து விடுதலை அடைந்து சுதந்திரப் போராட்டத்தை வேறு ஒரு வடிவில் நடத்தவே அன்றி வேறில்லை என்று சப்பைக்கட்டு கட்டுகிறார்கள் RSS வகையறாக்கள். இப்படி ஒன்றும் நடக்கவில்லை என்பதை சவார்க்கரின் விடுதலைக்கு பிறகான வாழ்க்கை காட்டுகிறது.

சிறை விடுதலைக்குப்பின் ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தில் இவர் பங்கெடுக்கவில்லை. பங்கெடுக்க மாட்டேன் என்றுதான் மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்து விடுதலையானார் .ஆக, சுதந்திரப் போராட்ட உணர்வை இழந்தவர் இந்த சவார்க்கர். பிறகு எப்படி சுதந்திரப் போராட்ட வீரர்? இந்த லட்சணத்தில் பாராளுமன்றத்தில் இவருக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைக்குப் பிறகு, இவர் இந்தியர்களை குறிப்பாக முஸ்லிம்களை, எதிரிகளாக கருதத் தொடங்கினார். தனது ஆயுத அனுபவங்களை, பயிற்சிகளை பயன்படுத்த ஆரம்பித்தார். இது பிரிட்டிஷ் அரசின் பிரித்தாளும் திட்டத்திற்கு வசதியாயிற்று.

**1923** இல், "ஹிந்துத்துவா"என்ற புத்தகம் எழுதி பிரபலமடைந்தார். இதில் இந்திய துணைக் கண்டத்தை இரு கூறுகளாக பிளந்து போடும் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார். இரு தேச கொள்கையை வலியுறுத்தினார். (FRONTLINE, NOV-05,2004,P-83) இது சிந்தனையாளர்கள், வாசிக்கும் பழக்கமுடையோர் மத்தியில் பரவலாக பரப்பப்பட்டது.

இதை முஸ்லிம் லீக்கும், இதனுடன் தொடர் பில்லாத பிரபல வக்கீலாக விளங்கிய முகமது அலி ஜின்னாவும் கடுமையாக எதிர்த்தனர்.

ஏனெனில் இந்தியா என்றொரு கட்டுமானத்தை, பரப்பளவை இன்றைய வரைபடத்துடன் நெருக்கமாக ஒத்துப்போகும் நிலப்பகுதியை, முகலாய மன்னர் அவுரங்கசீப் பால் முதல் முதலாக உருவாக்கப்பட்டு உணர்வு பூர்வ தொடர்புடையவர்களாக அன்றைய முஸ்லிம்கள் விளங்கினர். இப்பூமியை வளப் படுத்தி இரண்டர கலந்து விட்டவர்கள் முஸ்லிம்கள்.

அனைத்து வேறுபாடுகளையும் கலைந்து, முழுவீச்சில் சுதந்திர போராட்டத்தை நோக்கி மக்களை அணிதிரட்டும்போது, இவரின் செயல் ஒன்றுபட்ட போராட்டத்தை குழிதோண்டி புதைக்கும் கருத்தாக இருந்தது.

உண்மை இவ்வாறு இருக்க, "நாட்டை பிளக்க காந்தி உடன்பட்டார் என்பதால்தான் நாங்கள் அவரை கொலை செய்தோம்" என்றது இத்தீவிரவாத கும்பல்.

இங்கு ஒன்றை நினைவு கூறுவது முக்கிய மானது. அன்று இருந்த "பிரிட்டிஷ் இந்தியா" என்பது பாகிஸ்தான், நேபாளம், இந்தியா, பங்களாதேஷ், பர்மா, இலங்கை இவைகளை உள்ளடக்கியது. இதை பழைய வரைபடத்தில் பிரிட்டிஷ் இந்தியா வரைபடத்தில் பார்க்கலாம். இதில் எதை இந்தியாவாக தரமுடியும் என்று பிரிட்டிஷ் கூறியதோ, அதைத்தான் காங்கிர சால் பெற முடிந்தது.கொடுத்ததை வாங்கிக் கொண்டு போ! என்ற தோரணையில் தான் பிரிட்டிஷாரின் குரல் இருந்தது.நேபாளம் இந்து நாடு தான்.அதை ஏன் இவர்கள் இந்தியாவுடன்

கேட்டு பெறவில்லை?என்பதை இப்பொழுது நாம் புரிந்து கொள்ளலாம்.

*1935*-இல் முதன் முதலில் இந்திய அரசிய லமைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டு, *1937*இல் தேர்தலும் நடந்தது. காங்கிரஸ் பெரும்பாலான மாகாணங்களில் (அன்று மாநிலங்கள் இவ்வாறு தான் அழைக்கப்பட்டது. இன்றைய மாநில எல்லையிலிருந்து முற்றிலும் வித்தியாசப்பட்டு இருந்தது) தனித்து வெற்றி பெற்றும், முஸ்லிம் லீக் ஒரு சில மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றும் இருந்தன. வேறு சில மாகாணங்களில் இவ்விரு கட்சிகளும் தனித்து ஆட்சி அமைக்க வேண்டிய பெரும்பான்மையை பெறாத சூழலில், முஸ்லிம் லீக் காங்கிரஸிடம் கோரிக்கை வைத்தது.

சில மாகாணங்களில் நாங்கள் ஆதரவு தருகிறோம். நீங்கள் ஆட்சி அமையுங்கள். வேறு சில மாகாணங்களில் நீங்கள் ஆதரவு தாருங்கள். நாங்கள் ஆட்சி அமைக்கிறோம் என்ற ஜனநாயக வழிமுறையில் காங்கிரஸிடம் முஸ்லிம் லீக் கோரிக்கை வைத்தது.

எதிர்க்கட்சி இல்லையென்றால் ஜனநாயகமே இல்லை. ஆனால் முஸ்லிம் லீக்கின் வளர்ச்சியை உதாசீனப்படுத்தி, இந்தியாவின் ஒரே கட்சி, காங்கிரஸ் தான் என்று வெளிப்படை யாக நறுக்கென்று பதிலளித்தது காங்கிரஸ்.

பிராமண ஆதிக்கத்தில் வெறித்தனதுடன், அதே நேரத்தில் கமுக்கமாக காயை நகர்த்தி கொண்டிருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் ஒருபுறம், மதச்சார்பின்மை பேசி முற்போக்கு வாதியாக காட்டி தன்னால் மட்டுமே புது இந்தியாவிற்கு வளர்ச்சியை கொண்டுவரமுடியும் என துடுக்குத்தனத் துடன் இருந்த நேரு மறுபுறம். ஆக, இவ்விருவரின் செயல்பாடும் முஸ்லிம் லீக்குக்கு சந்தேகத்தையும், அச்சத்தையும் அளித்தன. (காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு மிக்க பிறிதொரு தலைவரான,நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இக்காலகட்டத்தில் கருத்து வேறுபாடு கொணடிருந்தார். இதையொட்டிய காலகட்டத்தில், காங்கிரசை விட்டு வெளியேறி னார். சர்தாரின்" அதிகாரத்தில் மாற்று மதத்தினர் இருந்தால், ஹிந்து தான் ஆள வேண்டும் என்பது .அதே அதிகாரத்தில் ஒரு ஜாதி இந்து இருந்தால், பிராமணனே ஆள வேண்டும் என்பது போன்ற சிந்தனையையும், நேருவின் பிம்பத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை நேதாஜி).

ஆக, அதிகாரத்தில் பங்கெடுத்தல் என்பது பெரும்பான்மை மற்றும் பெரிய கட்சிகளின் தயவில் தான் முடியுமேயன்றி, மக்களின் ஓட்டளிப்பை, விருப்பத்தை, அங்கீகாரத்தை கொண்ட அல்ல என்ற ஜனநாயக ஓட்டையை புரிந்துகொண்டது முஸ்லிம்லீக்.

காங்கிரசின் மறுப்பு இந்து - முஸ்லிம் ஒற்றுமையை நடைமுறை சாத்தியமற்ற தாக்கிவிட்டது. உதாசீனப்படுத்தி விட்டது.

வளர்ந்து வரும் புது இந்திய சூழலில், (தேர்தல்) தலைமுறை தலைமுறையாக மன்ன ராட்சியில் பழக்கப்பட்ட மக்கள் ஜனநாயக தேர்ந்தெடுத்தல் முறைக்கு மாற்றும் பொறுப்பை சுமந்த ஜனநாயக சிந்தனையாளர்களாக தங்களைக் காட்டிக் கொண்ட அன்றைய காங்கிரஸின் பெரும் தலைவர்களின் கருத்து ஒற்றுமையை விரும்புபவர்களிடம் சந்தேகத்தை விதைத்தது.

பெரும்பான்மையை அளவுகோலாக கொண்ட ஜனநாயகத்தால் ஏமாற்றப்படுவோம். இது ஜனநாயகத்தின் மறுபக்கம். இதன் அச்சத்தால் காங்கிரசை பரந்த மனப்பான்மைக்கு கொண்டுவர,சிறிய கட்சியாக இருந்தாலும் அதை அங்கீகரித்து நாகரீகமாக நடந்திட செய்ய, பாகிஸ்தான் கோரிக்கையை நெம்பு கோலாக (Leverage) *1940*இல் லாகூர் மாநாட்டில் முஸ்லிம் லீக் அறிவித்தது.

நியாயமான பேரத்திற்கான ஆயுதமாக, பாகிஸ்தான் கோரிக்கையை முஸ்லிம் லீக் முன் வைத்தது என்பதற்கு ஆதாரம், அது தொடர்ச்சி யாக ஒன்றுபட்ட இந்திய யூனியனுக்கான பல பேச்சு வார்த்தைகளில் எந்த சலிப்பும் இல்லாமல் கலந்து கொண்டதுதான்.

முஸ்லிம் லீக்கின் தனிநாடு கோரிக்கைக்கு யாரும் எதிர்பாராத துருவத்திலிருந்து உடனடியாக ஆதரவு கிடைத்தது, ஆதரித்தவர் ராஜாஜி என்ற மூத்த காங்கிரஸ்கார். பிராமண தலைவர்களில் ஒருவர். அதிர்ந்தது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி. ராஜாஜியை உடனடியாக

காங்கிரஸிலிருந்து நீக்கியது.

ஆனால் மதராஸ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும், அதன் தலைவருமான காமராஜ ருக்கும் தெரிவிக்காமல் 1942-இல் ராஜாஜி காங்கிரஸில் மீண்டும் சேர்க்கப்பட்டார். ஏன்?

1940 முதல் 1942 வரை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ராஜாஜியின் தேசப் பிரிவினை ஒப்புதல் வாக்குமூலத்தை பற்றிய ஆலோசனை நடவாமல், ராஜாஜியின் சேர்க்கை நடந்திருக்காது. பிரிவினையை ஆமோதிக்கும் அடையாளமாகத்தான் ராஜாஜியை காங்கிரஸ் இணைத்துக்கொண்டதா?

மேலும் பிரிவினையை தவிர்க்க, முஹம்மது அலி ஜின்னாவுடன் காந்திஜி மேற்கொண்ட பேச்சு வார்த்தையில், பிரிவினையை சரியான கண்ட ராஜாஜியும் கலந்து கொண்டார். பிறகு எப்படி ஒன்றுபட்ட இந்திய யூனியன் சாத்தியம்?.

1942 முதல் 1946 வரை பிரிட்டிஷ் இந்தியா வின் வைஸ்ராய் வாவேல் (wavell) ஒன்றுபட்ட இந்திய யூனியனுக்காக, இரு தரப்பை சந்தித்தும், சந்திக்க வைத்தும் பேச்சுவார்த்தை நடத்தினார். இது எதுவும் வெற்றி பெறவில்லை என்றதும், பி-ரிட்டிஷ் அரசு மவுண்ட்பேட்டனை வைஸ்ரா யாக அனுப்பி பிரிவினையை உறுதிப்படுத்தியது.

ஒற்றுமைக்கான பேச்சுவார்த்தைகளில் முகமது அலி ஜின்னா "ஒன்றுபட்ட இந்து-முஸ்லிம் சமூகத்திற்கான நடைமுறை சாத்தியப் பட்ட அதிகாரப் பரவலை உள்ளடக்கிய "மாநில சுயாட்சி" (federal) முறையை கேட்டார். ஆனால் அதிகாரக் குவிப்பை மையப்படுத்திய மத்திய அரசு (Centralised Govt) மீது ஆழ்ந்த நம்பிக்கையும், செயல் திட்டத்தையும் வைத்திருந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, மாநில சுயாட்சி ஜனநாயக முறையை மறுத்தது.

இந்திய யூனியனில் பல மதங்கள் மட்டு மல்ல, ஒரே மதத்தில் பல்வேறு பிரிவினருக்கான சிறப்பு நலன்களையும், கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இது மொழி வடிவிலும், புவியியல் ரீதியாகவும் வித்தியாசப்படுகிறது. இதனை கருத்தில்கொண்டு அதிகாரத்தை மாநிலத்துடன் மத்திய அரசு பகிர்ந்து கொள்ள வேண்டும். ராணுவம், நீதி, வெளியுறவு போன்ற துறைகள் மட்டும் மத்திய அரசிடம் இருக்க வேண்டும். மற்ற துறைகள் மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் வர வேண்டும் என்பதே முஸ்லிம் லீக்கின் கோரிக்கையாக இருந்தது.


காங்கிரஸின் பிராமண ஆதிக்கம் ஒத்துக் கொள்ளவில்லை. இறுதியாக இந்திய துணைக் கண்டம் பிளக்கப்பட்டது. சுதந்திரம் வாங்கிய காந்தி பிராமணர்களிடம் தான் இந்தியாவை ஒப்படைத்தார். முஸ்லிம்களிடமா ஒப்படைத் தார்? ஹிந்துக்கள் என்ற வார்த்தை கூட தரவு களின் படி தவறு.

ஏனெனில் அன்றைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அனைவரும் பிராமணர் களே. இவர்களே காங்கிரஸின் முடிவை கட்டுப்படுத்தினர். இவர்களிடம் தான் சுதந்திர இந்தியா கொடுக்கப்பட்டது. அன்று ஜாதி ஹிந்துக்கள் படிப்பறிவு பெறவில்லை என்பதால் அடிமட்டத்தில் இருந்தனர். படித்த ஒன்றிரண்டு ஜாதி இந்துக்களும் பிராமணர்களுக்கு சேவை செய்வதை புண்ணியமாக கருதிவந்தனர். இதில் தந்தைபெரியார் விதிவிலக்கு. எப்பொழுதும் போல் மேல்மட்டத்தில் பிராமணர்கள் இருந்தனர். இந்துக்களின் பிரதிநிதிகளாக தங்களை அறிவித்துக் கொண்டனர்.

காலம் காலமாக பிராமணர்கள் அரசர்களின் ராஜ குருக்களாக இருந்து பழகியவர்கள். இவர் களின் ஆலோசனையின்படி தான் மன்னர் ஆட்சி நடைபெற்றது. இவர்களுக்கு போக மீதம் தான் மற்ற ஜாதியினருக்கு கொடுக்கப் பட்டது. பல நேரங்களில் மற்ற ஜாதியினர் பிராமணர்களுக்கு உழைத்து போடும் அடிமைகளாக இருந்துள்ளனர்.

"சதுர்வேதி மங்கலம்" என்றொரு பட்டயம் மன்னர்களால் பிராமணர்களுக்கு கொடுக்கப் படும். இப்பெயர் சில மாறுதல்களுடன் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அதன் நோக்கம் ஒன்றுதான். இத்தகைய பட்ட யங்களில் குறிப்பிட்ட ஒரு சில கிராமங்கள் (பல நூறு ஏக்கர் கொண்டதுதான் ஒரு கிராமம்) அவர்களின் உணவு தேவைக்காக தானமாக கொடுக்கப்பட்டிருக்கும். அந்த கிராமங்களில் உள்ளவர்கள் பிராமண எஜமானர்களுக்கு தலைமுறை, தலைமுறையாக

உழைத்து தாங்கள் சூம்பி போனாலும் அவர்களின் வயிற்றைக் கழுவ வேண்டும் என உழைத்து ஓடாய் போனார்கள். திமிரி எதிர்ப்பு குரல் எழுப்பினால், அரசன் தூண்டப்படுவான். தண்டிப்பான். கொலைகள் அரங்கேறும். சட்டம் அதன் கடமையைச் செய்ததாக நியாயப்படுத்தபடும்.




விவசாயம் செய்வது பாவம், விவசாயி அசைவமாகதான் இருப்பான். அசிங்கங்களுடன் துர்நாற்றம் வீசும் அழுகிய கழிவுகளுடன் அவன் புரளுவான். ஏனெனில் இதுவே இயற்கை உரமாகும். இது ராஜகுருக்களுக்கு தீட்டு, இம்மாதிரியான நம்பிக்கைகள் காலங்காலமாக அவர்களை மேல்மட்டத்தில் உள்ளவர்களாக கருத செய்துள்ளது. இவர்களே இப்பொழுது காங்கிரஸ் காரியக் கமிட்டியின் உயிர்நாடி.

ராஜ குருக்கள் இப்பொழுது புது இந்தியாவின் அரசியல் அதிகாரத்தில். முடியாமல் போனால், அரசின் முடிவெடுக்கும் துறைகளில், கட்டுப்படுத்தும் துறைகளில் பெரும் பதவிகளில் ஆக்கிரமித்து உட்காருவது. இவர்களின் முடிவே நாட்டு மக்களின் முடிவாக திணிக்கப்படும். இவர்களின் எதிரி நாட்டு மக்களின் எதிரி. இவர்களின் தேசப்பற்று இலக்கணம், பிற மக்களின் இலக்கணமாக இருக்க வேண்டும். இது போன்ற தன்மைகள் சமூகத்தில் இவர்களால் உருவாக்கப்பட்டு நிலை நிறுத்தப்படுகிறது. சுதந்திரமாக சிந்திக்கும் முஸ்லிம்கள், கலகக்காரர்களாக, தீவிரவாதிகளாக, தேச விரோதிகளாக சித்தரித்து அவர்களை கொலை செய்வது தேச சேவை என்று இன்று வளர்ந்து நிற்கிறது.

இப்படித்தான் அதிகாரக் குவிப்பை நியாயப்படுத்தி, மாநில சுயாட்சி கோரிக்கையை செல்லாக்காசாகி தனிநாடு கோரிக்கையை லாவகமாக முஸ்லிம்கள் மீது பழி போட்டு முடித்தார்கள்.

இதற்கு வித்திட்டவர் தான் சவார்க்கர். இந்த சவார்க்கர் காந்திஜி படுகொலையின் மூளை. ஆனால் 1949இல் காந்தி கொலை வழக்கு தீர்ப்பில் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட தீர்ப்பை "திருப்திகரமான தீர்ப்பு" என்றது அன்றைய ஆனந்தவிகடன் தலையங்கம்.

1942-ல் சவார்க்கர் "இந்துராஷ்டிரா தள்" என்றொரு பயங்கரவாத கும்பலை உருவாக்க, அது பல கலவரங்களுக்கு காரணமானது.

முஸ்லிம்கள் ஊர்வலத்தில் குண்டு வீசுவது, ஹைதராபாத் நிஜாம், நேரு, காந்தி போன்றோரை கொலைசெய்யும் நோக்கத்துடன் ஆயுதப் பயிற்சி போன்றவைகள் சுதந்திர இந்தியாவின் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இத்தீவிரவாத கும்பலில் இருந்த மதன்லால் பேஷ்வா, விஷ்ணு கர்காரி ஆகிய இருவரும், தங்களுக்கு பணம் தேவைப்படும் போதெல்லாம் பம்பாய், பூனா போன்ற பகுதியிலுள்ள முஸ்லிம் வியாபாரிகளுக்கு வரி விதிப்பார்கள். மாமூல் வசூலிப்பார்கள். தவறினால், கடைகளை தீ வைத்து எரிப்பார்கள்.

ஏமாற்றி பிழைப்பது, அச்சுறுத்துவது, சந்தர்ப்பவாதம், சுயநலத்திற்காக ஜாதி, மதம்,

ஆன்மீகம் என யுத்தி வகுத்து சுரண்டுவது என வாழ்வு.

நாசவேலைகளை செய்துவிட்டு, பிறர் மேல் பழி போடுவது போன்ற தந்திரங்கள் இவர்களின் இயக்கத்தை வளர செய்யும். உணர்ச்சி வயப்படும் மக்கள் ஏன்? என கேட்க மாட்டார்கள். அணி திரளுவார்கள்.

மதன்லால் பேஷ்வா, விஷ்ணு கர்காரி, நாதுராம் கோட்சே, நாராயண ஆப்தே ஆகியோர் உள்ளடக்கிய 9 பேர் கொண்ட கும்பல் காந்திஜியை கொலை செய்ய திட்டமிடுகிறது.

மதன்லால் பேஷ்வா, விஷ்ணு கர்காரி ரயிலில் தில்லியை நோக்கி பயணம் செய்தனர்.

நாதுராம் கோட்சேவும், நாராயணன் ஆப்தேவும் பம்பாயிலிருந்து டில்லிக்கு விமானத்தில் பயணம் செய்தனர்.

அன்றே செலவு மிக்க விமான பயணம் செய்ததை கவனித்தால், படுகொலையின் முழு வடிவம் நமக்கு கூறப்படவில்லை எனலாம். பணம் தாராளமாக புழங்கியுள்ளதால் இக்கொலைக்கு பின்னால் பெரிய கைகள் இருக்க வேண்டும்.

இவர்கள் ஒரே முயற்சியில் பிர்லா மாளிகையில் காந்தியை கொன்றிடவில்லை. மூன்று முயற்சிகள் செய்தனர். இரண்டாவது முயற்சியில் வெடிகுண்டு வீசப்பட்டது. தவறி அருகில் விழுந்து வெடித்ததால் காந்திஜி தப்பினார். வெடி குண்டு வீசிய மதன்லால் பேஷ்வா கைது செய்யப்பட்டான். இது ஜனவரி-20, 1948-ல் நடந்தது. விசாரணையும் நடந்தது. எனினும் மற்ற தீவிரவாதிகள் கைது செய்யப்பட வில்லை.

மற்றவர்கள் தப்பித்தார்கள். பயந்து கொலை திட்டத்தை நிறுத்திடவில்லை. கொலையை கச்சிதமாக நிறைவேற்றிட பயிற்சி எடுத்தனர். புதுவித ஆயுதங்களை வாங்கினர். ஒத்திகை பார்த்தனர். போலீஸ் பயமின்றி மீண்டும் டெல்லியில் உள்ள பிர்லா மாளிகையில் மாலை பொழுதில் காந்திஜி கலந்து கொள்ளும் பிரார்த்தனை கூட்டத்தில் பங்கெடுத்தனர். நாதுராம் கோட்சே, நாராயண ஆப்தே. இது ஜனவரி-30,1948 இல் நடந்தது.

எந்தப் போலீஸ் கெடுபிடியும் இல்லாமல், இவர்கள் பிரார்த்தனை கூட்டத்தில் பங்கெடுக்கிறார்கள் என்ற செய்தி நமக்கு வியப்பூட்டுகிறது. பிரிட்டிஷாரிடம் கட்டுப்பாடு, கெடுபிடி, கண்காணிப்பு போன்றவற்றிற்கு பெயர் பெற்றிருந்த போலீஸ், அதில் எதையும் காட்டாமல் வானாளாவியிருந்துள்ளது.

தீவிரவாத தாக்குதலுக்கு பின்பு, பிர்லா மாளிகையில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்திருக்க வேண்டும். இப்போலீஸ் துறை மத்திய உள்துறை அமைச்சரும், துணை பிரதமருமான சர்தார் வல்லபாய் பட்டேலின் அதிகாரத்திற்கு உட்பட்டது. தனது பாபுஜியின் கூட்டத்திற்கு பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதை அவர் ஏன் புரிந்து பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லை? என்பது புரியாத புதிராக உள்ளது. (இன்று வல்லபாய் பட்டேல் காவிகளால் உரிமை கொண்டாடப்படுகிறார். பிரமாண்ட சிலை வைத்து கொண்டாடுகிறார்கள்).

மதன்லால் பேஷ்வாவிடம் வெடிகுண்டு தாக்குதல், அதில் ஈடுபட்டவர்களின் விவரங்களும், நோக்கமும் போலீஸ் விசாரணையில் கிடைத்திருக்க வேண்டும். இப்பணியை செய்வதற்கே போலீஸ்.

மேலும் இரண்டாவது கொலை முயற்சிக்கும், காந்திஜி கொலைக்கும் இடைப்பட்ட பத்து நாட்களில் என்னவிதமான போலீஸ் பாதுகாப்பு நடவடிக்கை இருந்தது? அல்லது போலீஸின் கைகள் கட்டி போடப்பட்டதா? என்றெல்லாம் நமக்கு கேள்விகள் எழும்.

உள்ளேயிருக்கும் தங்கள் ஆட்களின் துணையில்லாமல், பயங்கரவாதிகள் காந்திஜியை கொலை செய்திருக்க முடியாது என்ற சந்தேகம் உருவாவது இயல்புதான்.

நாதுராம் கோட்சே ஜனவரி-30, 1948இல் மாலைப் பொழுதில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு பங்கேற்க வந்த காந்திஜியை சுட்டுக் கொன்றான்.

செய்தி அறிந்தவுடன் கடைசி வைஸ்ராயான மவுண்ட் பேட்டன் பிர்லா மாளிகைக்கு விரைந்தார். சுட்டது யார்? எனக்கேட்க, முந்திக் கொண்டு முஸ்லிம் என்றான் ஒருவன்.



தீவிரவாத கூட்டத்துடன் சம்பந்தப்பட்ட வனாக அவன் இருந்திருக்க வேண்டும். முஸ்லிம் கள் மீது பழி போட்டு வகுப்பு கலவரத்திற்கு வித்திட்ட வேண்டும் என்ற நரி தனத்தை கொண்டவனாக இருந்திட வேண்டும். முட்டாளே சுட்டவன் ஒரு இந்து அல்லவா என்றார் மவுண்ட்பேட்டன்.

அரைமணி நேரம் கழித்து, இச்சோக நிகழ்ச்சியை வானொலி அறிவித்தது. ஒரு ஹிந்து கொன்றான் என்ற உண்மையையும் அறிவித்தது. பிராமணன் கொன்றது ஹிந்து கொன்றான் என்றானது.

நாதுராம் கோட்சே கையில் இஸ்மாயில் என்று பச்சை குத்தி இருந்தான். காந்தியை நாம் கொலை செய்ய வேண்டும். பழியை முஸ்லிம்கள் மீது போட வேண்டும் என்ற சூதுமதியையே இது காட்டுகிறது.

இவர்கள் செய்யும் சதிகளை முஸ்லிம்கள் மீது திசை திருப்பிவிட்டு, சாமானியர்களை நம்பும்படி செய்து விடுவார்கள் என்பதை பல்வேறு குண்டுவெடிப்பு செய்திகள் இன்று நமக்கு சுட்டிகாட்டுகின்றன.

இந்திய வரலாற்றை அரசன் மற்றும் அதிகாரம் படைத்தோரின் நோக்கில் அல்லாமல், மக்கள் நலன் நோக்கில் வாசிப்ப வர்களுக்கு இச்சதிகள் ஒன்றும் புதிதில்லை.

இந்திய துணைக்கண்டத்தில் உருவான சமண, பௌத்த மத பூர்வகுடிகள் அழிக்கப்பட்ட வரலாறு நமக்கு படிப்பினையாக இருக்கிறது. இன்று வெளிநாடுகளில் சிறப்புற்று விளங்கும் பௌத்தம் தோன்றிய இந்திய மண்ணில் வேரோடு பிடுங்கப்பட்டு உள்ளது.

சமணர்கள், பௌத்தர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர். கழுவேற்றப்பட்டனர். அவர் களால் ஆபத்து என்கிற பிரச்சாரம் முடக்கி விடப்பட்ட பிறகு, அரசர்களை கொண்டு, அரசு இயந்திரங்களை கொண்டு கருவறுக்கப்பட் டார்கள் பூர்வகுடிகள்.

சனாதன மதத்தை உயிர்ப்பிக்கும் காரி யத்தில் ஆதிசங்கரர் ஈடுபட்ட கி.பி.700களில், அதன் எதிர்மறை விளைவால் சமண, பௌத்த சமயங்கள் அழித்தொழிக்கப்பட்டன அவர்களின் வழிபாட்டு தலங்களான பள்ளிகள், கோவில்களாக மாற்றப்பட்டன. மற்றவைகள் இடிக்கப்பட்டன. சிலைகள் சிதைக்கப்பட்டன.

இன்று சமண, பௌத்த சிலைகளின் தலை அல்லது கை என ஏதாவது ஒன்று உடைந்த நிலையில் தொல்லியல் துறையால் மீட்கப்படுகின்றன. பிற சிலைகள் முழுதாக கிடைக்க,சமண பவுத்த சிலைகள் மட்டும் ஏன் சிதைந்த நிலையில் கிடைக்கின்றன?. இதைப் பற்றிய ஆய்வு ஒன்றில், சமண பவுத்த சிலைகளில் புதையல் இருப்பதாக கதை கட்டி பரப்பப்பட்டன என்றும் இதனால் பேராசை கொண்ட மக்களே இச்சிலை உடைப்பில் ஈடுபட்டனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

சாம, தான, பேத, தண்ட என்ற வசனத்தை காவிகள் அடிக்கடி தங்கள் கூட்டங்களில் சொல்லி மிரட்டுவார்கள். இந்த வழிமுறைகளில் தங்களுடைய நெருக்குதலுக்கு, அடி பணிய வில்லையெனில் கொன்று ஒழிப்பது என்ற தத்து வத்தை சொல்லுவதுதான் சாம, தான, பேத, தண்ட என்பது.

இது சமண பௌத்தர்களின் விஷயத்தில் பின்பற்றப்பட்டது. அவர்களின் கலாச்சார, பண்பாட்டு சின்னங்கள் நொறுக்கப்பட்டன.

பொய்களை கொண்டு தத்துவம், திட்டம், வரலாறு என பரிணமித்து ஆட்சியைப் பிடிப் பார்கள். இதனை தடுத்து நிறுத்த பல தளங்களில் வேலை செய்ய வேண்டியுள்ளது. அப்படியான தளங்களில் ஒன்று காந்திஜி படுகொலை நாளை “பயங்கரவாத எதிர்ப்பு நாளாக” நினைவு கூர்ந்து கடைப்பிடித்து வரவேண்டும் என்ற முடிவுடன் இனிதே முடிந்தது கருத்தரங்கம்.

# தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழக இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் கட்சிகளின் கூட்டமைப்பு சந்திப்பு







என்.ஆர்.சி, மற்றும் சி.ஏ.ஏ-வுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ஓங்கி குரல் கொடுத்தமைக்கு நன்றி கூறும் வண்ணம் தமிழகத்தில் எதிர்கட்சி தலைவராகவும் தி.மு.க.வின் தலைவராகவும் உள்ள மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழக இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் கட்சிகளின் கூட்டமைப்பு 13.01.2020 அன்று அறிவாலயத்தில் சந்தித்தது. அப்போது இந்த போராட்டத்தை மேற்கொண்டு தீவிரமாக கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டின் தலைவர் மு.குலாம் முஹம்மது அவர்கள், தமிழகத்தில் என்.ஐ.ஏ.வின் தவறான நடவடிக்கைகளுக்கு எதிராக ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிக்கைக்கு தங்கள் நன்றியை அப்போது தெரிவித்துக் கொண்டார்கள். பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பும் நடைபெற்றது.



# அன்பகம் தாஃவா குழு முன்னிலையில் இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரருக்கு திருமணம்





அன்பகம் தாஃவா குழு முன்னிலையில் சிதம்பரம் லால்கான் பள்ளிவாசலில் கடந்த 31.01.2020 அன்று இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது. இத் திருமண நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக இறைவன் ஒருவன், நாம் மனிதர் கட்சி அதிரை தவ்ஃபீக் அவர்கள் சிறப்புரையாற்றினார். இதில் இன்றைக்கு முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் அநியாயங்களுக்கு தீர்வாக நாம் இஸ்லாத்தை எடுத்துச் செல்ல வேண்டும் அழைப்பு பணியே என் இறுதி மூச்சு இஸ்லாத்திற்காக எதையும் இழக்க நாம் தயாராக வேண்டும் ஒட்டுமொத்த முஸ்லிம் சகோதர, சகோதரிகள் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்ய வேண்டும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இந்த உயர்ந்த பணியை முன்னெடுக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்றார். இறுதியாக துஆ ஓதியபின் மக்கள் கலைந்து சென்றார்கள். இதில் சுமார் 50க்கும் மேற்பட்ட முஸ்லிம்களும், சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்கள் கலந்துக் கொண்டார்கள். – தகவல்: யாசர் அரஃபாத்.S



# இஸ்லாத்தைத் தாக்குவதே இலக்கு

வளமும், வனப்பும் நிறைந்த ஹாரூன் ரஷீதின் இஸ்லாமிய ஆட்சியில், இஸ்லாமிய அறிஞர்களின் ஆராய்ச்சிகள் புதுப்புது எல்லைகளை அடைந்து கொண்டிருந்தார்கள்.

**- முறையான சாக்கடை முறை**

**- விரைந்து செய்திகளைப் பறிமாறிடும் தபால் முறை**

அங்கிங்கெனாதபடி எங்கும் விரிந்து வியாபித்து நின்ற, இலவச மருத்துவ மனைகள், சீனா வரை கிளைகளைக் கொண்ட வங்கி முறை. இவையெல்லாம், இஸ்லாமிய ஆட்சியின் மாட்சிகள்.

'சிசிலி' என்றொரு நாடு. அதற்கு இஸ்லாமிய சிசிலி என்றே பெயர். அன்றைய உலகில் மிகவும், கீர்த்திபெற்ற நாடாக விளங்கியது. அதனை முஸ்லிம் சிசிலி என்றே உலகம் அழைத்தது. அதன் தலைநகர் 'பாலிர்மோ' நாகரிகத்தின் உச்சியில் நின்றது. பாலிர்மோவை நோக்கியே நகர்ந்தார்கள். 1072-இல் 'நார்மன்' என்ற கூட்டத்தார் அந்த மாநகரை அழிக்கும் வரை முஸ்லிம் சிசிலியும் அதன் தலைநகர் பார்லிமோவுந்தான் உலக நாகரிகத்தின் முன்னோடிகள்.

கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் இவற்றில் அவர்கள் மிகவும் முன்னேறி நின்றார்கள். கெய்ரோவிலும், ஃபெஸ்சியும் அவர்கள் நிறுவியப் பல்கலைக்கழகங்கள்தாம். அவர்கள் கல்வியின் கலங்கரை விளக்கங்கள்தாம்.

இவையெல்லாம் ஐரோப்பா முறையான முதுல் கல்விக் கூடத்தை நிறுவுவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் நடந்தவை.

வரலாற்று ஆசிரியர் டேவிட் லிவரில் லூயிஸ் - கூறுகின்றார், எட்டாம் நூற்றாண்டில் இஸ்லாம், ஐரோப்பாவை விட நான்கு நூற்றாண்டுகள் முன்னதாக முன்னேறி இருந்தது. (Source : David Levering Lewis the God's Crucible, page-286)

முஸ்லிம்கள் ஐரோப்பாவிலும் வேகமாக முன்னேறி கொண்டே வந்தார்கள். அந்த முன்னேற்றத்தை கி.பி. 732 ஆம் ஆண்டு, மன்னர் சார்லஸ், டூர்ஸ் என்னுமிடத்தில் வைத்துத் தடுத்து நிறுத்தினார். அப்போதும் ஐரோப்பா மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது.

அந்த ஐரோப்பாவுக்கு, கிரேக்க இலக்கியங்களைப் பற்றியோ, ரோமர்களின் இலக்கியங்கள் பற்றியோ எதுவும் தெரிந்திருக்கவில்லை. ஆனால், அதே இலக்கியங்களை முஸ்லிம்கள்

கண்டெடுத்தார்கள். அவற்றின் அருமை பெருமைகளைப் புரிந்து கொண்டார்கள்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை முதல் சிலுவைப் போர் வீரர்கள். குரூரமான கொலை காரர்கள். அவர்கள் ஒட்டுமொத்தமாக அநாகரிக மானவர்கள். அவர்களின் செயல்கள் அனைத்தும் அநாகரிகமானவையாகவே இருந்தன. அவர்கள் முஸ்லிம்களின் பிணங்களைத் திண்ணும் கழுகு களாகவே இருந்தார்கள். உண்மையில் அவர்கள் பிணங்களைத் திண்பதிலும் ஈடுபட்டார்கள்.

சிலுவைப்போர் வீரர்களின் கொடுமை கனைப் பற்றி, சிலுவைப் போரைப்பற்றி எழுதிய ஒருவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"மாஆறா" என்னுமிடத்தில் நம் வீரர்கள் (சிலுவைப் போர் வீரர்கள்) எதிரிகளின் முஸ்லிம்களை சமையல் உலைகளில் வைத்து அவித்தார்கள். இதனை கிருஸ்தவ வரலாற் றாசிரியர் Radulph of Caen ராகுல் செயின் ஒத்துக் கொள்கின்றார்.

அவர்கள் (முதல் சிலுவைப் போர் வீரர்கள்) முஸ்லிம் குழந்தைகளைத் துண்டு துண்டாக, வெட்டி கூறுப்போட்டார்கள். கூர்மையான கோல்களில் குத்தி அடுப்புகளில் வேக வைத்தார்கள். பின்னர் பசி வெறியுடன் அவற்றை உண்டார்கள்.

இத்தகைய கோரமான கொலை வெறியை அவர்கள் வெளிக்காட்டியதற்கான காரணம் அவர்களைப் போப் அர்பன் II அவர்களை அப்படித் தயார் செய்திருந்தார். முஸ்லிம் நினைத்துக்கூட பாத்திராத கொடுமையான செய்கைகளைச் செய்ததாகக் கூறி அவர்களைத் தயார் செய்திருந்தார்.தயார் செய்தார் என்பதை விட வெறுப்பை ஊட்டியே வைத்திருந்தார்.

அவர்கள் 1365-இல் அலக்ஸாண்ட்ரியாவை அழித்தது. அவர்களின் இன்னொரு காட்டு மிராண்டித்தனத்தின் வெளிப்பாடாகும். இதனை சிலுவைப்போர் வரலாற்றை எழுதியவர்கள் நாகரிகத்தின் மேல் (இஸ்லாத்தின் மோல்) காட்டுமிராண்டித்தனம் பெற்ற வெற்றி என்றே வர்ணித்தார்கள்.

இதனை அதாவது, கிருஸ்தவர்கள் காட்டு மிராண்டித்தனத்தை ஸ்காண்லாண்ட் தத்துவ வல்லுநர் டேவிட்கூவும், வரலாற்றின் மிகப் பெரிய அவமானச் சின்னம். மனித விழுமியங் களின் வீழ்ச்சி அத்தகைய குரூரம் அதன்பின் இன்றளவும் நடந்ததில்லை என்று கூறுகிறார்.

பைசாந்திய (கிருஸ்தவர்கள்) காலத்தின் மிகப்பெரிய வரலாற்று ஆசிரியர்கள். Stephen Runciman ஸ்டீபன் ரண்சிமான் அவர்கள், "அலக் ஸாண்ட்ரியா 365-இல் அழித்தது. 1099-இல் ஜெரூசலத்தில் (சிலுவைப் போர் வீரர்கள் 1099 கிருஸ்தவர்கள்) செய்த குரூரங்களுக்கு இணையானது. அதாவது அலக்ஸாண்ட்ரியாவில் கிருஸ்தவப் படைகள் செய்த கொடுமைகளுக்கு நிகர். 1099-இல் ஜெரூசலத்தில் அதே கிருஸ்த வர்கள் செய்த கொடுமைகள்தான்." - எனக் கூறுகின்றார்.

அவர்கள் - அலக்ஸாண்ட்ரியாவில் கிருஸ் தவப் படைகள் கண்ட செல்வம் அவர்களைப் பிரம்மிப்பில் ஆழ்த்தியது. அவற்றைக் கொள்ளையடிப்பதில் அவர்கள் முழு பைத்தியங் களைப் போலவே நடந்து கொண்டார்கள். இந்த பைத்தியக்காரத் தனத்தில் அவர்கள் அலக் ஸாண்ட்ரியாவில் வந்து தங்கி வியாபாரம் செய்து செழித்துக் கொண்டிருந்த ஐரோப்பிய கிருஸ்தவர்களையே விட்டுவைக்க வில்லை. அவர்களின் ஆஸ்திகளையும் கிட்டங்கிகளையும் அவர்கள் கொள்ளையடித்தார்கள். கொடுமைப் படுத்தினார்கள். கொலைகளைச் செய்தார்கள். (Source : Stephen Runciman : A History of the crusades, Volume-3. Cambridge : Cambridge University Press-1951) (page-446)

கிருஸ்தவர்கள் (சிலுவைப் போர் வீரர்கள்) செய்த வரலாற்றுக் கொடுமைகள் ஏராளம்... ஏராளம்..? இப்படி ஒரு வரலாறு இஸ்லாத் திற்கோ இஸ்லாத்திற்காக படை நடத்திச் சென்றவர்களுக்கோ இல்லை. ஆனால், நாம் இருப்பதாகப் புனைந்துரைத்தோம். பசப்பினோம். வெறுப்பை - இஸ்லாமோ, ஃபோபியாவை வளர்த்தோம்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்.

**தமிழ் வடிவம் - மு. குலாம் முஹம்மத்**
**ஆங்கிலம் - ஜான் பெஃபர்**

Crusade 2.0, The Weste Resurgent war on Islam



# மௌலானா அபுல் கலாம் ஆஸாத்

ஹாஜி பி.எம். அப்துல் கரீம், குளச்சல்

மௌலானா அபுல் கலாம் ஆஸாத் கி.பி. 1888-ம் ஆண்டு நவம்பர் 11-ல் மக்காவில் பிறந்தார். இவரது இயற்பெயர், 'முஹ்யித்தீன் அஹ்மது' இந்தியா வம்சா வழியில் வந்தவர். இவர் மௌலானா அபுல கலாம் ஆஸாத் ஓர் இஸ்லாமிய அறிஞர். எகிப்திலுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் பயின்ற இவர் சிறுவயதிலேயே குர்ஆனை முழுமையாக மனனம் செய்தார்.

திருக்குர்ஆனுக்கும் ஹதிசுக்கும் விளக்கவுரை எழுதியவர். இதனால் இவர் 'இல்முல் இந்த்', 'இமாமுல் இந்த்' என்றும் இஸ்லாமிய அறிஞர் களால் பாராட்டப்பட்டவர். அறிவியல், கணிதம், தத்துவம் ஆகிய துறைகளில் நிபுணரான இவர் அரபி, உருது, ஹிந்தி, ஆங்கிலம், பெங்காளி, பாரசீகம் போன்ற பன்மொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். 'ஆஸாத்' என்றால் அதற்கு முழுத்தகுதியானவராக இருந்தார் இவர்.

இந்தியாவின் முதல் மத்திய கல்வி அமைச் சராக 1947 முதல் 1955 வரை பணியாற்றிய போது, இந்தியாவிலேயே பெருமை கொள்ளும் அறிவியல் ஆய்வுக் கழகம் (SIR) போன்ற நிறுவனங்களை உருவாக்கிய கல்வி சிற்பியவர்.

ஆஸாத்தின் கல்வியறிவு பற்றி மகாத்மா காந்தி குறிப்பிடுகையில் 'அறிவியல் சக்கரவர்த்தி' என்று குறிப்பிட்டார். அரிஸ்டாட்டில், பிளாட்டோ, கிரோக்க பித்தாகரஸ் போன்ற கிரேக்க அறிஞர்களுக்கு ஒப்பானவர் என்றும் கூறினார். இதிலிருந்து அபுல் கலாம் ஆஸாத்தின்



அறிவு எத்தகையது என நாம் அறியலாம்.

ஒருமுறை, நேருஜியிடம் நண்பர் ஒருவர், 'உங்களிடம் இக்குறை இருக்கிறதாமே'... என்று கேட்டபோது அவரிடம், 'என்னிடம் இக்குறை பற்றி உங்களிடம் சொன்னது மௌலானா தானா?' என்று திருப்பிக் கேட்டார். ஆஸாத்தின் மனம் பிரகாசமானது என்று நேரு குறிப்பிடுகிறார்.




இந்தியாவின் முதல் மத்தியக் கல்வி அமைச்சராக இருந்தபோது எதிர்காலச் சுதந்திர இந்தியாவில் கல்வியை மேம்படுத்த ஐஐடி கல்வி மூலம் உலக ஆதாரத்திற்கு கல்வியை வளர்க்கத் திட்டமிட்டவர். இலவசக் கல்வியை ஏழை எளியோர் கற்க வழிவகை செய்தவர்.

'அல்ஹிலால்', 'அல் பலாக்' ஆகிய பத்திரிகைகள் மூலம் சுதந்திர வேட்கையை மக்களிடையே ஏற்படுத்தினார்கள். அப்போதைய ஆங்கில அரசால் இப்பத்திரிகைகள் தடை செய்யப்பட்டது.

ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ஒன்றை ஆண்டுகள் சிறை சென்றவர். 1940-ம் முதல் 1946 ஆண்டு வரை காங்கிரஸின் அகில இந்தியத் தலைவராக இருந்த அபுல் கலாம் ஆஸாத் பாகிஸ்தான் பிரிவினையை விரும்பாதவர்கள்.

இவர் எழுதிய, 'இந்திய விடுதலை வெற்றி' என்ற நாவலை ஏ.ஜி.வேங்கடசாமி மற்றும் க. பூரணசந்திரன் ஆகியோர் தமிழில் மொழிப் பெயர்த்துள்ளனர். 1956-ல் வெளியிடப்பட்ட இந்நூலில் சிலப் பகுதிகள் 30 ஆண்டுகளுக்குப் பிறகு சேர்க்கப் பட்டு வெளியிடப்பட்டது.

வல்லபாய்படேலின் அணுகு முறையே நாடு பிரிவினைக்கு ஒரு காரணமாக அமைந்ததாக அந்நூலில் குறிப்பிடுகிறார். தேசியப் பற்றும், சமூகப் பற்றும், நிதி நியாயத்தின் பக்கம் நின்று பணியாற்றிய அபுல் கலாம் ஆஸாத் 22-02-1958-ல் வபாத்தானார்கள். டில்லி, ஜும்ஆ மஸ்திக்கு எதிரே அமைந்துள்ள தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டார். மேலும், சுதந்திரப் போட்டத் தியாகி ஷா நவாஸ்கானின் அடக்கமும் இவர் அடக்க இடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.



# செய்கு அஹ்மத் சர்ஹிந்தின் தியாக வாழ்க்கை

ஒரு காலத்தில் இப்பகுதியில் சிங்கங்கள் அதிகம் வாழ்ந்ததால் 'சேர்ஹிந்த்' என அழைக்கப்பட்டு மருவி 'ஷர்ஹிந்த்' ஆனது. ஹிஜ்ரி 971, ஷவ்வால் 19-ல் செய்கு அஹ்மது தந்தை செய்து மஃதூம் தம்பதியருக்கு மகனாராக 'சர்ஹிந்தில்' பிறந்தார்கள் செய்கு அஹ்மது.

அக்பரின் அயினியே அக்பரியில், செய்கு அஹ்மதைப் பற்றி அக்கால அறிவுலக மேதை யென குறிப்பிடுகிறார் அபுல் பைசல். மேலும் அபுல்பைசல் புள்ளி இல்லாத எழுத்துக்களால் (ஸலாத்தியுல் இல்ஹாம்) என்ற பெயருடன் குர்ஆனுக்கு விளக்க உரை எழுதியபோது புள்ளி இல்லாத எழுத்திற்காக திணறிய போது இன்ன இன்ன எழுத்துக்களைப் போடுங்களென சொன்னவர் செய்கு அஹ்மாதென வாயாறப் புகழ்கிறார்.

அக்பர் கி.பி. 1606-ல் காலமானார். அவர் இறந்ததும் அவர் மகன் ஜஹாங்கீர் அரசரானார். அக்பரின் பிந்திய ஆட்சி சீரழிந்த நிலை. ஜஹாங்கீர் ஆட்சியின் போது செய்கு அஹ்மது மௌலானா முகம்மது காசீம் தலைமையில் எழுபது பேர் அடங்கிய குழுவை துரிக்கிஸ் தானுக்கும், மௌலானா முகம்மது ஸாதிக் தலைமையில் பத்து பேர் குழு காஷ்கர் பகுதிக்கும் மௌலானா செய்கு அஹ்மது பாகியின் தலைமையில் முப்பது பேர் கொண்ட குழு குரோசான் படக்சான், தூரான் போன்ற பகுதிகளுக்கும் இஸ்லாமிய பிரச்சாரகர் அனுப்பப்பட்டு இஸ்லாமியர்களனைவரும் தெளிவடையச் செய்யப்பட்டனர்.

அக்பர் காலத்தில் உலகாதய உலமாக்கள் அவருக்கு தவறான போதனைகள் நல்கி வழிகேட்டிலாக்கினர். அந்த நேரத்தில் செய்கு 'இப்றாஹீம் முஹத்தித்' அக்பர் அவையில் 'ஸஜ்-தாயே' தர்பார் செய்வதை இடித்துரைத்ததால் சிறை கொட்டடியில் அடைக்கப்பட்டார். அக்பர் அஜ்மீர் சென்ற போது தர்காவில் முக்கிய பொறுப்பிலிருந்து ஷைகு ஹுசைன் அவர்கள் மறைந்து இருந்ததால் அவர் நாடு கடத்தப்பட்டு சிறைத் தண்டனைக் கொடுக்கப்பட்டார். கொடுங்கோல் அரனுக்கு முன் சத்தியத்தை எடுத்துச் சொல்வது சிறந்த ஜிஹாத் என்ற பெருமானார் வாக்கை மெய்ப்பித்தனர் அப்பெரியார்கள்.

சமுதாயத்தில் தவறுகள் நடக்கும் பொழுது நாவால், கரத்தால், மனதால் வெறுத்தலால் குறைகளை தடுக்க முற்படுங்கள் என்ற பெருமானார் (ஸல்) பொன்மொழியை உயிர் கொடுக்கின்ற வகையில் ஷெய்கு அஹ்மது ஸர்ஹிந் அவர்களின் செயல்பாடுகள் அன்றைய ஜஹாங்கீர் ஆட்சிக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. ஆட்சியரின் செல்வாக்கு மிக்க உலமாக்கள் மூலம் அரசின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள் ஷெய்கு அஹ்மது. அன்னார் உபதேசம் மேட்டு நிலத்துக்கு இறைத்த நீர் போலாயின.

மன்னர் ஜஹாங்கீர் மதுராவில் இஸ்லாமியர் குர்பானி கொடுத்தார்கள் என்பதற்காக இஸ்லாமியர்களை, உலமாக்களை சிரச்சேதம் செய்தார். பல பள்ளி வாசல்களை இடித்துத் தள்ளினார். நிரபராதிகள் பல அவர் ஆட்சியில் தண்டிக்கப்பட்டனர். இறுதியாக தன்னை அரச வையில் பார்க்க வருவோர் 'சஜ்தாயே தர்பார்' செய்தே பார்க்க வேண்டுமென அரசாணைப் பிறப்பித்தார். இதனை காரணமாகக் கொண்டு ஷெய்கு அஹ்மது சர்ஹிந்தை அரசவையில் வந்துதன்னைப் பாரக்க் ஆணைப் பிறப்பித்தார்.

ஜஹாங்கீர் அரசவைக்கு வந்த ஷெய்கு அஹ்மது 'சஜ்தாயே தர்பார்' செய்ய முடியாது எனக் குரல் கொடுத்ததால் சிறை தண்டனை விதிக்கப்பட்டு குவாலியர் ஜெயிலில் அடைக் கப்பட்டார். சிறை தண்டனை அனுபவித்த ஷெய்கு அஹ்மது ஜெயிலில் தன்னுடன் இருந்த இஸ்லாமிய கைதிகளை தன் நடவடிக்கை மூலமும், இஸ்லாமிய பிரச்சாரங்கள் மூலமும் புனிதர்களாக மாற்றினார்கள். ஜெயியில் இருந்த ஜைன, புத்தமத, இந்து, சீக்கிய அனைத்து ஜெயிர் கைதிகளையும் நல்ஒழுக்க சீலர்களாக, புனிதர்களாக மாற்றினார்கள். ஷெய்கு அஹ்மது அடைக்கப்பட்ட குவாலியர் ஜெயில் மகான்களின் இருப்பிடமாக, புனிதர்கள் வசிக்குமிடமாக மாறியது.

அரசர் ஜஹாங்கீர் ஒற்றர்கள் மூலம் ஷெய்கு அஹ்மதின் மூலம் ஜெயிலில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து அவரையும் அவருடன் ஜெயிலில் இருந்த கைதிகளையும் விடுதலை செய்தார். ஜஹாங்கீர் ஆஸ்துமா நோயால் அவதிப்பட்டார். ஷெய்கு அஹ்மதின் கண்ணி யத்தை அறிந்து தன் நோய் அகல இறைவனிடம் பிரார்த்திக்க தன் ஆலோசர்கள் மூலம் வேண்டினார்.

ஜஹாங்கீர் ஆலோசகர்கள் ஷெய்கு அஹ்மதை அணுகி அரசரின் முறையீட்டைச் சொன்னார்கள். ஷெய்கு அஹ்மது அரசர் செய்த அனைத்து பிழைகளுக்கும் இறைவனிடம் பிழை பொறுத்தல் கேட்க வேண்டும். மதுராவில் இடித்த பள்ளிவாசல்களைத் திருப்பிக் கட்டிக் கொடுக்க வேண்டும். நிரபராதியான மக்களும், உலமாக்களும் உடனடி ஜெயிலிலிருந்து விடுதலை செய்ய வேண்டும். இம்மாதிரியான என் வேண்டுகோள்கள் ஏற்றால் இறைவனிடம் அரசரின் ஆஸ்துமா நோய் நிவாரணத்துக்கு பிரார்த்தனை செய்கிறேன் என அரசரின் ஆலோசர்களிடம் சொல்லியனுப்பினார்.


அரசு ஆலோசகர்கள் மன்னர் ஜஹாங்கிரிடம் செய்கு சொல்லியனுப்பிய நிபந்தனைகளைச் சொன்னார்கள். இதுகேட்ட அரசர் மனமிறங்கி இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்டதோடு, ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த நிரபராதி களையெல்லாம் விடுதலை செய்து உத்தரவிட் டார். மதுராவில் இடித்த பள்ளி வாசல்களைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க உத்தரவிட்டார்.

ஷெய்கு அஹ்மது, மன்னர் ஜஹாங்கீரின் நடவடிக்கைகளால் சந்தோசமுற்று அவரின் ஆஸ்துமா நோய் நிவாரணத்துக்கும், மனப்பிணி அகன்று ஆன்மீக வாதியாக மாறி நல்லாட்சி மக்களுக்கு நல்க இறைவனிடம் இறைஞ் சினார்கள். மகானின் துஆ பரக்கத்தால் மன்னர் ஜஹாங்கீர் நோயிலிருந்து நிவாரணமும், தன் ஆட்சியின் பல்வேறு வெற்றிகளைப் பெற்று நல்லாட்சியாளரென வரலாற்றில் இடம் பெற்றார்.

ஜஹாங்கீரை புனிதராக மாற்றிய ஷெய்கு அஹ்மது சர்ஹிந் 'முஜத்தில் அல்பசானி' யென வரலாற்றல் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள்அடக்க இடம் டெல்லியிலிருந்து பஞ் சாப் போகும் வழியில் சர்ஹிந்தில் உள்ளது. இவர்கள் 'காதிரிய்யா' தரீகாவின் வழி காட்டியாக இருந்தார்கள் என வரலாறு மூலம் அறிகிறோம்.

இக்கட்டுரை : ஆரணி கமாலுத்தீன்
மௌலவி எழுதிய தேவுபந்த் உலமாக்களின்
வரலாற்று நுலிலிருந்து

**நான் கயிறு வியாபாரம் செய்தபோது பஞ்சாப் சென்றேன். அப்போது மார்க்கெட்களான அமீர்தரஸ், லூதியானா, ஜலந்தர், ரோட்டக், மோவா போன்ற வியாபார தலங்களை பார்வையிட்டேன். அந்நேரம் இரயிலில் வரும்போது 'சர்ஹிர்' இரயில்வே ஸ்டேசனில் இரயில் சிறிது நேரம் நின்றது. அப்போது என்னோடு வந்த மர்ஹூம் MAS சர்ஹிந்தின் செய்கு அஹ்மது, சர்ஹிந்த் முஜத்தி அல்பசாணி மக்பறா இருப்பதைச் சொன்னார். நாம் வரலாற்றில் மன்னர் ஜகாங்கீரின் மார்க்க புறம்பான செயல்களை இடித்துரைத்து அவரை மார்க்கம் பேணிய மன்னராக மாற்றிய முஜத்தின் உடல் அடக்கமாயிருக்கும் ஊரில் இருக்கிறோம் என்று என்னை அறியாத ஓர் உணர்வு எனக்குள் ஏற்பட்டது.**



ஆக்கம் : நீதியரசர் ஜி.எம்.அக்பர் அலி
மேனாள் நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம்

# குடியுரிமை திருத்த சட்டம் (CAA) தேசிய குடியுரிமை பதிவேடு (NRC) தேசிய மக்கள் பதிவேடு (NPR)

## ஒரு புரிதல்

**மத்திய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள**

*1) குடியுரிமை சட்ட திருத்தம் 2019; சி.ஏ.ஏ* (Citizenship Amendment Act) *தலைக்கு மேல் கத்தியாக தொங்கி கொண்டிருக்கும்*

*2) தேசிய குடியுரிமை பதிவேடு; என். ஆர். சி* (National Register of Citizens) *அதனை கொல்லைப்புறமாக கொண்டு வர இருக்கும்*

*3. தேசிய மக்கள் பதிவேடு- என்.பி.ஆர்* (National Population Register)

*இந்த பிரச்சனைகள் இந்தியா முழுவதும் தீயாய் பற்றி எரிந்து கொண்டு இருக்கும் இந்த சூழலில் ஒட்டு மொத்த தமிழகம், குறிப்பாக தமிழக முஸ்லிம்கள் வர இருக்கும் 2020 - 2021 மக்கள் கணக்கெடுப்பு,தேசிய மக்கள் பதிவேடு ஆகியவற்றை எண்ணி குழப்பத்திலும் மிகுந்த அச்சத்திலும் இருக்கிறார்கள். குடியுரிமை, தேசிய குடியுரிமை பதிவேடு, தேசிய மக்கள் பதிவேடு பற்றிய புரிதல் முதலில் அவசியம். அதற்காக வரலாற்றையும் மற்றும் அடிப்படை சட்டங்களையும் முதலில் தெரிந்து கொள்வது குடிமக்களாகிய நமது ஒவ்வொருவரின் கடமை.*

### 1) இந்திய அரசியலமைப்பு சட்டம் 1950

*ஆகஸ்ட் 15, 1947 நள்ளிரவில் சுதந்திரம் பெற்றோம்.26 ஜனவரி 1950 அன்று நமது இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது.அரசியல் அமைப்பு சாசனத்தின் சட்டம் பகுதி 2 மற்றும்பிரிவு 5 குடியுரிமை பற்றி பேசுகிறது. அதன்படி,*

*1) அரசியல் அமைப்பு சட்டம் நடை முறைக்கு வந்த 26.01.1950 அன்று இந்தியாவை தன்னுடைய குடியிருப்பாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு இந்தியரும்இந்தியகுடிமக்கள்:*

*2) இந்திய எல்லைக்குள் பிறந்த ஒவ்வொருவரும் அல்லது தன் பெற்றோரில் யாராவது ஒருவர் இந்திய எல்லைக்குள் பிறந்திருந்தால் அவரும் அல்லது இந்திய எல்லைக்குள் 26.01.1950 க்கு 5 வருடங்களுக்கு முன்பாக பிறந்த எவரும் இந்திய குடிமக்கள் ஆவார்கள்.*

*உதாரணத்திற்கு என்னுடைய தாய் தந்தையர் 26 .01.1950 க்கு முன்பாக தமிழ்நாட்டில் தஞ் சாவூர் மாவட்டத்தில் வல்லம் கிராமத்தில் பிறந்தவர்கள். எனவே அவர்கள் பிரிவு 5 அரசியல் அமைப்பு சாசனப்படி இந்திய பிரஜைகள்(குடிமக்கள்) ஆவார்கள்.*

### 2. இந்திய குடியுரிமை சட்டம் 1955

*1955 இல் இந்திய குடியுரிமை சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு 30.12.1955 அன்று நடைமுறைக்கு வந்தது.*

இதன் பிரிவு (3), பிறப்பின் அடிப்படையில் குடியுரிமைபற்றி கூறுகிறது. அதன்படி,

யாரெல்லாம் 26.01.1950க்கு பிறகு இந்திய எல்லைக்குள் பிறந்தார்களோ அவர்கள் இந்திய பிரஜைகள் என்று குறிப்பிட்டுள்ளது.

பிரிவு (4) வம்சாவழி குடியுரிமை பற்றி கூறுகிறது. அதன்படி,ஒரு நபர் இந்தியாவுக்கு வெளியே 26 .01.1950 க்கு பிறகும், 30.12.1955 க்கு முன்பும் பிறந்து இருந்து ஆனால் அவருடைய தந்தை இந்திய குடிமகனாக இருந்தால் அவர் வம்சா வழி அடிப்படையில் இந்திய குடிமகன் ஆவார். முந்தையது பிறப்பின் அடிப்படையிலான பிரஜா உரிமை(குடியுரிமை) பிந்தையது வம்சா வழி அடிப்படையிலான பிரஜா உரிமை (குடியுரிமை).

உதாரணமாக நான் 23.11.1952-ல் தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வல்லம் கிராமத்தில் பிறந்ததால் நானும் இந்திய குடியுரிமை சட்டம்1955 பிரிவு 3 இன்படி இந்திய குடிமகன். இது பிறப்பின் அடிப்படையிலான குடியுரிமை.

## 3. பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969

பிறப்பு இறப்பு பதிவு சட்டம், 31.05.1969 அன்று நடைமுறைக்கு வந்தது. இதன்படி 31.05.1969-க்கு பிறகு பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் பிறப்பும் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்கான பிறப்பு சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 4. இந்திய குடியுரிமை சட்டத்திருத்தங்கள்.

அ) குடியுரிமை (திருத்தம்) 1986.

ஆ) குடியுரிமை (திருத்தம்) 1992

இ) குடியுரிமை (திருத்தம்) 2003
(ஆக்ட் 6 ஆப் 2004- 3.12.2004)

ஈ) குடியுரிமை (திருத்தம்) 2005

## அ) குடியுரிமை 1986 (திருத்தம்)

1) இந்திய குடியுரிமை சட்டம் 1986இல் திருத்தம் செய்யப்பட்டு, திருத்தம் 01.07.1987 அன்று நடைமுறைக்கு வந்தது. பிறப்பின் அடிப்படையில் குடியுரிமை என்ற பிரிவு 3இல் திருத்தம் செய்யப்பட்டு, அதன்படி 26.01.1950-க்கு பிறகும் 01.07.1987-க்கு முன்பும் இந்திய எல்லைக்குள் பிறந்தவர்கள் பிறப்பின் அடிப்படையில் இந்திய குடிமக்கள்.

உதாரணத்திற்கு எனது மூத்த மகன் 10.11.1980 அன்று தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வல்லம் கிராமத்தில் பிறந்ததால் அவனும் இந்திய குடிமகன். இது பிறப்பின் அடிப்படையில் குடியுரிமை உரிமை. பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969படி பிறப்பு பதிவு செய்யப்பட்டு பிறப்புச் சான்று பெறப்பட்டுள்ளது.

2) மேலும் 01. 07. 1987 க்கு பிறகு ஒருவர் பிறந்து அவருடைய தாய் அல்லது தந்தையில் ஒருவர் இந்திய குடிமகனாக இருந்தால், அவரும் இந்திய குடிமகன்.

உதாரணத்திற்கு எனது இரண்டாவது மகன் 29.01.1993 இல் பிறந்ததாலும் நானும் என் மனைவியும் ஏற்கனவே இந்திய பிரஜைகள் என்பதாலும் எனது இரண்டாவது மகனும் இந்திய குடிமகன். இது வம்சா வழி குடியுரிமை ஆகும். பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969-ன் கீழ்பிறப்பு பதிவு செய்யப்பட்டு சான்று பெறப்பட்டுள்ளது.

## ஆ) குடியுரிமை (திருத்தம்) 1992

இந்திய குடியுரிமை சட்டம் 1992-ல் திருத்தம் செய்யப்பட்டது. இதில் எற்கனவே ஒரு நபர் இந்தியாவுக்கு வெளியே 26.01.1950 க்கு பிறகும்,30.12.1955-க்கு முன்பு பிறந்தும் இருந்து ஆனால் அவருடைய தந்தை இந்திய குடிமகனாக இருந்தால் அவர் வம்சாவழி அடிப்படையில் இந்திய குடிமகன் என்றிருந்ததில், அவர் தாய் இந்திய குடிமகளாகஇருந்தால் அவர் வம்சாவழி அடிப்படையில் இந்திய குடிமகன். இந்த திருத்தத்தின் மூலம் ஏற்கனவே விடப்பட்ட தாய் சேர்க்கப்பட்டாள்.

## இ) குடியுரிமை (திருத்தம்) 2003 (சட்டம் 6/2004) -(3.12.2004)

i) இதன்படி 2004-க்குபின்னர் பிறக்கும் குழந்தையின் பெற்றோர் இருவருமே இந்திய

குடிமக்களாக இருக்க வேண்டும்:

ii) பெற்றோரில்ஒருவர்இந்தியகுடிமகனாக இருந்து மற்றவர் சட்ட விரோதமாக குடியேறி யவராக இல்லாமல் இருந்தால் அந்த குழந்தை யும் இந்திய பிரஜை. அதாவது பெற்றோரில் ஒருவர் சட்ட விரோதமாக குடியேறியவராக இருந்தால் அந்த குழந்தை இந்திய பிரஜை ஆகாது.

iii) பிரிவு 2 திருத்தம் செய்யப்பட்டு, குடிமகன் அல்லது பிரஜை யார் என்ற விளக்கம் நீக்கப்பட்டு, பிரிவு 2(1) (2b) சட்ட விரோத குடியேறி என்பவர், ஆவணங்கள் இல்லாமல், நாட்டிற்குள் வந்தவர் என்று குறிப்பிட்டது.

iv) புதிதாக பிரிவு 14- ஏ சேர்க்கப்பட்டு, தேசிய அடையாள அட்டை விநியோகம் எனத் தலைப்பிடப்பட்டது.

1) மத்திய அரசு இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரையும் கட்டாயமாக பதிவு செய்து அவர்களுக்குதேசிய அடையாள அட்டை வழங்க வேண்டும்

2) மத்திய அரசு இதற்காக தேசிய குடிமக்கள் பதிவேடு ஒன்றை ஏற்படுத்தி, பராமரிக்க வேண்டும்

3) குடியுரிமை 6 சட்டம்2003 (திருத்தம்) (சட்டம் 6/2004) நடைமுறைக்கு வந்த 3.12.2004 நாள் முதல், பிறப்பு இறப்பு பதிவு சட்டம் 1969 பிரிவு 3(1)ல் சொல்லப்பட்டுள்ள இந்திய பொது பதிவாளர், தேசிய குடியுரிமை பதிவாளராக இருப்பார்.

3.12.2004 இல் நடைமுறைக்கு வந்த குடியுரிமை (திருத்தம்) 2003 (சட்டம் 6/2004) பிறப்புரிமை மற்றும் வம்சா வழியுரிமை மற்றும் குடியுரிமை பற்றி கூறுகிறது.

இந்த குடியுரிமைகள் முதலில் பிறப்பின் அடிப்படையிலும் பிறகு பெற்றோரில் ஒருவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் என்றும், அதன் பிறகு பெற்றோர் இருவருமே இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும் அதிலும் குறிப்பாக ஒரு நபர் சட்ட விரோதமாக குடியேறி யவராக இருக்க கூடாது என்ற வம்சாவழி அடிப்படையிலும், நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஏற்கனவே கிழக்கு பாகிஸ்தானாக இருந்து, பின்னர் பங்களாதேஷ் ஆகி இருக்கும் நாட்டில் இருந்து இந்தியாவிற்கு குறிப்பாக அசாம் மற்றும் மேற்கு வங்கத்திற்கு சட்ட விரோதமாக மக்கள் குடியேறியதால் பெற்றோரில் இருவருமே இந்திய குடிமக்களாக இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக ஒருவர் சட்ட விரோதமாக குடியேறி இருக்க கூடாது என்று சொல்லப்பட்டது. 1986 ஆம் ஆண்டின் திருத்த சட்டத்தில் அஸ்ஸாமிலிருந்து இந்தியாவிற்குள் வந்த இந்திய வம்சாவழி மக்களை பொருத்து, பிரிவு 6-ஏ ஏற்படுத்தப்பட்டது. அஸ்ஸாம் மாணவர்கள் அமைப்பு நடத்திய போராட்டத் திற்கு பிறகு சட்ட விரோதமாக குடியேறியவர் களை கண்டுபிடித்து வெளியேற்ற அஸ்ஸாம் உடன்படிக்கை ஏற்பட்டது. குடியுரிமை (திருத்தம்) 2003 (சட்டம் 6 / 2004)-இல் இதற்கு வழி செய்யப்பட்டது.

## • குடியுரிமை விதிமுறை 2003

குடியுரிமை விதிமுறை 2003, வாஜ்பாய் அரசால் 03.12.2003 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்த விதிமுறையின் பெயரே, குடிமக்கள் (குடியுரிமை பதிவுசெய்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்கல்) விதிமுறை 2003 என்பதாகும். இந்த குடியுரிமை விதிமுறைதான்,தேசிய குடிமக்கள் பதிவேடு என்.ஆர்.சி மற்றும் தேசிய மக்கள் பதிவேடு என்.பி.ஆர் பற்றி விவரிக்கிறது.

## • தேசிய குடிமக்கள் பதிவேடு (என் ஆர் சி)

தேசிய குடிமக்கள் பதிவேடு என்பது, இந்தியாவிலும், வெளிநாட்டிலும் வாழும் இந்திய குடிமக்கள் பற்றிய விவரம் அடங்கிய பதிவேடு என்கிறது.

## • மக்கள் பதிவேடு

மக்கள் பதிவேடு என்பது, இந்தியாவில், கிராமத்தில், நகரத்தில், நகர்புறத்தில், சாதாரணமாக வசிக்க கூடிய ஒவ்வொரு நபரை பற்றிய விவரம் அடங்கிய பதிவேடு என்கிறது. அதாவது, அந்த நபர் இந்திய குடிமகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேசிய மக்கள் பதிவேடு என்பதில் பதிவு செய்யப்பட வேண்டும்.

### விதிமுறை 3


பிறப்பு இறப்பு பதிவு 1969-ஆம் சட்டத்தில், பதிவாளர் தலைவர் என்று யாரை குறிப்பிட்டுள்ளதோ அவர் குடிமக்கள் பதிவு பதிவாளர் தலைவராக இருப்பார் என்றும், அவர் தேசிய குடிமக்கள் பதிவேட்டினை ஏற்படுத்தி, அதனை பராமரிப்பார் என்றும், அவை தேசிய பதிவேடு, மாநில பதிவேடு, மாவட்ட பதிவேடு, துணைமாவட்ட பதிவேடு, பகுதி பதிவேடு என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த பகுதி பதிவேட்டில் பகுதி12 விவரங்கள் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. உட்பிரிவு 4-இல் மத்திய அரசு, அந்தந்த பகுதியில் சாதாரணமாக வசிக்க கூடிய ஒவ்வொரு நபரை பற்றிய மக்கள் பதிவேடு தயாரிக்கநாள் ஒன்றை குறித்து உத்திரவிட வேண்டும் என்று கூறுகிறது.

### விதிமுறை 4

பிரிவு-4,தேசிய குடிமக்கள் பதிவேடு தயார் செய்யும் முறை பற்றி கூறுகிறது. உட்பிரிவு1 வீடு வீடாக சென்று, ஒவ்வொரு குடும்பம்,அதில் உள்ள தனி நபர் பற்றிய தனிப்பட்ட விவரங் களுடன், அவர்கள் குடியுரிமை நிலை பற்றிய விவரங்களும் சேகரிக்க வேண்டும் என்று கூறுகிறது. உட்பிரிவு 3 இல்,தேசிய குடிமக்கள் பதிவேடு (என்.ஆர்.சி.) தயார் செய்ய, மக்கள் பதிவேட்டில் (என்.ஆர்.பி) பதிவு செய்துள்ள விவரங்கள், சரிபார்க்கப்பட வேண்டும் என்கிறது. எனவேதான் மக்கள் பதிவேடு என்பது தேசிய குடிமக்கள் பதிவேடு தயார் செய்ய முதல்படி என்றாகிறது.

உட்பிரிவு-4 இல் அவ்வாறு சரிபார்க்கும் போது, எந்த நபருடைய குடியுரிமை சந்தேகத் திற்குரியதாக இருக்கிறதோ அதனை மக்கள் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது என்.ஆர்.சி தயார் செய்ய, எந்த நபருடைய குடியுரிமை சந்தேகத்திற்குரியதாக இருக்கிறதோ அதனை என்.பி.ஆர். யிலேயே குறிப்பிட வேண்டும் என்பது இதன் பொருள். அந்த நபரின் பெயர் என்.ஆர்.சி யில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. பிறகு அந்த நபர் 2003 விதிமுறை களில் சொல்லப்பட்டுள்ள மற்ற உட்பிரிவு களில் கண்டுள்ளபடி தன் குடியுரிமையை நிரூபிக்கவேண்டும். அவ்வாறு நிரூபித்து வந்த பின்னர்தான் அவர் பெயர் தேசிய குடிமக்கள் பதிவேட்டில் சேர்க்கப்படும். இல்லையெனில் அவர் சட்டவிரோத குடியேறியாக கருதப்படு வார். இந்த விதி சாதி, மதம் வேறுபாடு இல்லாமல் எல்லோருக்குமே இது பொருந்தும்.

எனவே தான், தேசிய மக்கள் பதிவேடு, அதன் அடிப்படையில் தயாரிக்கப்படும் தேசிய குடிமக்கள் பதிவேடு, குடியுரிமை திருத்த சட்டம் ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை.




குடியுரிமை (திருத்தம்) 2003 (சட்டம் 6/2004) பிரிவு-2 ல் யார் சட்ட விரோதமாக குடியேறியவர்கள் என்ற திருத்தமும், பிரிவு-14 (ஆ) அறிமுகமும், பங்களாதேசத் திலிருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களை, கண்டுபிடித்து அவர்களை வெளியேற்றுவதற்காக கொண்டு வரப்பட்டது.

2003-ஆம் ஆண்டே இந்த இரண்டு அம்சங்களும் நடைமுறைக்கு வந்துவிட்டா லும், அசாமில் இந்த அயல்நாட்டினர் பிரச்சினை

அப்படியேதான் இருந்தது. இறுதியாக, என்.ஆர்.சி-யை நடைமுறைப்படுத்த, மூன்று கோடி இருபது லட்சம் மக்களில், *19* லட்சம் பேர்தான் அயல் நாட்டினர் என்ற அறியப்பட்டது. அதில் அதிக மாக இந்துக்கள் இருந்ததால், முஸ்லிம் அல்லாத மற்றவர் சட்டவிரோத குடியேறிகள் இல்லை என்று பிரிவு2-ல் ஒரு திருத்தமும், முஸ்லி மல்லாத மற்றவர்களை குடிமக்களாக அங்கீகரிக்க, பிரிவு *6* பி என்ற திருத்தமும் கொண்டுவரப்பட்டு சி ஏ ஏ என்று வந்துள்ளது.




தற்போது, என்.பி.ஆர் அதனை அடுத்த என்.ஆர்.சி, நாடு முழுவதும் அமல்படுத்தப்படும் பட்சத்தில், *135* கோடி மக்களும் இந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

## ஏன் ''சி.ஏ.ஏ'' எதிர்க்கப்படுகிறது?

ஒரு குறிப்பிட்ட மதத்தினரை மட்டும் பிரித்து வைப்பது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பானது என்பதும், தற்போதைய அரசு, மதசார்பற்ற நாட்டை, மதத்தின் அடிப்படையில் பிரிக்க பார்க்கிறது என்ற ஆதார பூர்வமான குற்றச்சாட்டு ஒரு காரணம். என்.பி.ஆர் என்ற பெயரில், என்.ஆர்.சியை அமல்படுத்தினால், மேலே சொன்னது போல், சந்தேகத்தின் அடிப்படையில் ஒரு சமூகத்தினரை அல்லது தங்கள் சித்தாதங்களுக்கு உடன்படாதவர்களை என்.ஆர்.சியில் சேர்க்காமல் விட்டுவிட்டால், அவர் சந்தேகத்திற்குரிய குடிமகனாக கருதப்பட்டு அவர் தன் குடியுரிமையை நிரூபிக்க வேண்டும். அவர் முஸ்லிமாக இருந்தால் திருத்தபட்ட சி.ஏ.ஏ. படி அவர் அந்நியராக கருதி அரசு நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஏன் என்.பி ஆர் எதிர்க்கப்படுகிறது?

உண்மையில் என்.பி.ஆர் எதிர்க்கப்பட வில்லை. என்.பி.ஆர் *2020-2021* இன் தற்போதைய வடிவம் மற்றும் அதன் நோக்கம்தான் எதிர்க்கப்படுகிறது.

**காரணங்கள்;**

I) *2011*இல் பயன்படுத்தப்பட்ட படிவம் பயன்படுத்தப்படாமல் புதிய படிவம் பயன்படுத்தப்படுகிறது. அது என்.பி.ஆருக்கான கேள்விகளை கேட்காமல் என்.ஆர்.சி.க்கான கேள்விகளை கேட்கிறது.

II) *2020*படிவம், பெயர், பிறந்ததேதி, பெற்றோர் பிறந்த இடம், அவர்கள் பிறந்த தேதி ஆகியவற்றை கேட்பதோடல்லாமல், அதற்கான ஆவணச் சான்றுகளையும் சரிப்பார்க்க சொல்கிறது.

III) பிறப்புச்சான்று, பள்ளிச்சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், பான் அட்டை ஆகிய சான்றுகளை கணக்கெடுப்பின்போது வைத் திருந்து சரிப்பார்க்க கொடுக்க வேண்டும் என்கிறது.

IV) விவரங்களை குடும்பத் தலைவர் கொடுக்க வேண்டும்; மறுத்தால், கிரிமினல் குற்றம்என்கிறது.

V) *2003* விதிமுறைப்படி, என்.பி.ஆர்-தான் என்.ஆர்.சி-க்கு அடிப்படை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படும்.

VI) விதி *2003* உட்பிரிவு *3* என்.பி.ஆர்.ஐ என்.ஆர்.சிக்கு அடிப்படை தகவலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. உட்பிரிவு *4* ஒரு நபர் மீது அதிகாரி சந்தேகப்பட்டால் அவருடைய குடியுரிமை சந்தேகத்திற்குரியது

என்று. என்.ஆர்.சி-இல் குறிப்பிட வேண்டும் என்று கூறுகிறது.

VII) ஒரு அதிகாரி யாரை வேண்டுமானாலும் சந்தேகப்படலாம். அப்படி சந்தேகத்திற்கு ஆளானநபர் பிறகு தன் குடியுரிமையை நிரூபிக்க வேண்டும்.

VIII) என்.பி.ஆர். என்பது மக்கள் கணக் கெடுப்பு போல், குடிமக்களோ இல்லையோ, இந்திய எல்லையில் குடியிருக்கும் ஒவ்வொரு மனிதனைப் பற்றிய விவரங்களை சேகரிக்கும் பணி. அதனால்தான், 2011 என்.பி.ஆர், ஆவணங்கள் அடிப்படையில் இல்லாமல் பதிவு செய்யப்பட்டது.

IX) சுமார் 7½ கோடி தமிழக மக்களில், ஏறத்தாழ 50% மக்கள் வறுமையிலும், வறுமைக் கோட்டுக்கு கீழாகவும் இருப்பவர்கள். இவர் களுக்கு இருப்பிடமும் இல்லை, இவர்களிடம் பெரும்பாலும் தேவையான ஆவணங்களும் இல்லை.

X) மத்திய அரசின் திட்டம் சிறுபான்மை இனத்தவர்களுக்கும், மற்றும் தலித் மக்களுக்கும் மட்டும் அல்லாமல், தமிழர்கள் அனைவருக்கும் எதிரானது. பாதிப்பு ஏற்படுத்தக்கூடியது.

XI) ஏனெனில் யாரை வேண்டுமானாலும், பட்டியலில் இணைக்கலாம், அல்லதுநீக்கலாம்.

XII) பட்டியல் தயாரிப்பை, தனியாரிடம் ஒப்படைக்கும் திட்டமும் உள்ளது.

## 2011 தேசிய மக்கள் பதிவேடு மற்றும் 2020 தேசிய மக்கள் பதிவேடு ஒரு ஒப்பீடு

*1)* இரண்டும், இந்தியாவில், கிராமத்தில், கிராமப்பகுதியில், நகரத்தில், நகர்புறத்தில், சாதாரணமாக வசிக்க கூடிய ஒவ்வொரு நபரை பற்றிய விவரம் அடங்கிய பதிவேடு என்கின்றன. அதாவது, அந்த நபர் இந்திய குடிமகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேசிய மக்கள் பதிவேடு பதிவேட்டில் செய்யப்பட வேண்டும்.

*2) 2011* பயன்படுத்தப்பட்ட படிவம் அடிப்படை விவரங்களை சேகரித்தது. சரிப்பார்க்க ஆவணங்களை கேட்க வேண்டாம் என்று விபர சேகரிப்பாளருக்கு அறிவுறித்தியது.

*3)* குடிமக்களோ இல்லையோ, ஒருவரையும் விட்டுப்போகாமல் தகவல் சேகரிக்க சொன்னது. அதன் அடிப்படையில்தான் ஆதார் அட்டை வழங்கப்பட்டது.அந்த பதிவுகுடிமக்களை அச்சுறுத்தவில்லை. விடுதல் இல்லாமல் அனைவரையும் சேர்த்து ஆவணமாக்கியது.

கவனிக்க: குடியுரிமை (திருத்தம்) 2003 (சட்டம் 6 / 2004) பிரிவு 14-(ஆ)தேசிய அட்டை வழங்கல் குறித்து கூறுகிறது. 2003 குடியுரிமை விதிமுறையின் பெயரே, குடிமக்கள் (குடியுரிமை பதிவுசெய்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்கல்). தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக ஆதார் அட்டை வழங்கப்பட்டது.

*4) 2020*-ல்வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள், என்.ஆர்.சி என்ற தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிக்க தேவையான விவரங்களை சேகரிக்க அறிவுறுத்துகிறது.

*5)* கூடுதல் விவரங்களாக, பெற்றோர் பிறந்த இடம், பிறந்த தேதி ஆகியற்றையும், ஆவணங்களை பற்றியும் பதிவு செய்ய வேண்டும். குறிப்பாக ஆதார் எண் பதிவு செய்ய வேண்டும்.

*6) 2011* என்.பி.ஆரில், விவரம் பதிவு செய்யப்பட்டதற்கான ஒப்புகை சீட்டு கொடுக்கப்பட்டது. ஆனால் 2020 படிவத்தில் அது இல்லை. விவர சேகரிப்பாளர், படிவத்தில் அல்லது மொபைல் ஸ்க்ரீனில், சம்பந்தபட்ட நபரிடம் கையெழுத்து பெறவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

*2020* என்.பி.ஆரில் சரிப்பார்க்கப்பட வேண்டிய ஆவணங்களாக குறிப்பிடப்படும் ஆவணங்கள்;

1. பிறப்புச் சான்றிதழ்
2. பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ்கள்
3. குடும்ப அட்டை
4. வாக்காளர் அட்டை
5. கடவுசீட்டு

6. ஓட்டுனர் உரிமம்

7. பான் கார்டு

8. ஆதார் அட்டை

*இவை அனைத்தும் எல்லோரிடமும் இருப்பதற்கான வாய்ப்பில்லை. இந்த ஆவணங் களில் ஏதாவது சந்தேகம் என்றால் பிறகு இதர ஆவணங்களை கொண்டு குடிமகன் என்ற அந்தஸ்தை விதிமுறைகளின்படி நிரூபிக்க வேண்டும்.*

*என் பி ஆர் 2020 புதிய படிவம், 2011 இல் இல்லாத புதிய கேள்விகள் அதன் உள்ளர்த்தம்.*

*கேள்விகள்:*

*7) பிறந்த இடம் இந்திய எல்லைக்குள் என்றால் எந்த மாநிலம்?*

*இந்தியாவுக்கு வெளியே என்றால் எந்த நாடு?*

13 (i) *தந்தை, தாய், கணவர், மனைவி ஏற்கனவே பதிவு செய்யவில்லை அல்லது உயிருடன் இல்லை என்றால் பெயருடன் பிறந்த தேதி எழுதவும்*

13(ii) *தாய்/தந்தை பிறந்த இடம் இந்திய எல்லைக்குள் என்றால் எந்த மாநிலம்; இந்தியாவுக்கு வெளியே என்றால் எந்த நாடு.*

*இந்த விவரங்கள் ஒரு நபருடைய வம்சா வழி மற்றும் முன்னோர்கள் நாடு பற்றி அறிந்து கொள்ள கேட்கப்படுகிறது.*

## ஆவணக் கண்ணோட்டத்தில் 2020 படிவம்

*குடியுரிமையை நிரூபிக்க ஆவணங்கள் இருக்கிறதா என்ற கேள்வியை 2020-இல் வர இருக்கும் தேசிய மக்கள் பதிவேடு படிவங்கள் எழுப்புகின்றன.*

*ஏற்கனவே குறிப்பிட்டது போல் 1969 பிறப்பு இறப்பு பதிவு சட்டத்திற்கு பிறகு பிறப்பு கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.*

*உங்கள் பிள்ளைகளுக்கு, பிறப்புச்சான்றுகள் உள்ளன. ஆனால், உங்களுக்கு பிறப்புச்சான்று இல்லை, உங்கள் பெற்றோருக்கும் இல்லை என்றால், உங்களுடைய பெற்றோர், 1947 க்கு முன்பாக இந்தியாவில் பிறந்து, 26.01.1950 அன்று, இந்தியாவை தன் வாழ்விடமாக கொண்டவர்கள் என்றும், நீங்கள் 26.01.1950 க்கு பிறகு இந்தியாவில் பிறந்தவர் என்றும் நிரூபிக்க வேண்டும். இதை கண்டறியவே மேலே குறிப்பிடப்பட்ட தாய்/தந்தை, கணவன்/ மனைவி பிறந்த தேதி மற்றும் பிறந்த இடம் குறித்த கேள்விகள் கேட்கப்படுகின்றன. இதற்கு சான்றுகள் கேட்டு அது இல்லாமல் போனால் உங்கள் குடியுரிமையும், கேள்விக்குறியாகிறது; பிறப்புச்சான்று இருந்தும் உங்கள் பிள்ளைகள் குடியுரிமையும் கேள்விக்குறியாகின்றது. ஏற்கனவே குறிப்பட்டது போல, பிறப்புரிமை வழி குடியுரிமை தற்போது வம்சாவழியுரிமை குடியுரிமை ஆகிவிட்டது. அதனால்தான் தற்போதைய என் பி ஆர் 2020, என் ஆர் சி யின் முன் வடிவு என கருதப்படுகின்றது.*

### எழுப்பப்படும் கேள்விகள்

*1) எழுபது ஆண்டுகளாக தேவைப்படாத பதிவேடுகள் இப்போது தேவையா?*

*2) மக்களை அச்சத்தில் வைத்திருப்பதுதான் ஆட்சியாளர்களின் சித்தாந்தமா?*

*3) தற்போதைய தேசிய மக்கள் பதிவேடு, அதன் அடிப்படையில் தயாரிக்கப்படக்கூடிய தேசிய குடிமக்கள் பதிவேடு இரண்டும் ஒன்றே; அது வேறு இது வேறு என்பது மக்களை ஏமாற்றும் மாபெரும் பொய். ஏன் இந்த பொய்?*

*4) 2019 குடியுரிமை திருத்த சட்டம் அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமானது என்ற நிலையில் ஏன் ஒரு சமூகத்தினரை ஒதுக்க வேண்டும்?*

*5) தமிழகத்தில் முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களின் நிலை என்ன?*

*6) ஏற்கனவே ஏழ்மையில் வாடிக்கொண்டி ருக்கும் மக்களை, நிரந்தர குடியிருப்பு கூட இல்லாத எளியவர்களை ஏன் துன்புறுத்த வேண்டும்?*

*7) கோடியில் புரளும் அதீத பணக்காரர்கள், பணக்காரர்கள், ஓரளவு படித்த நடுத்தர*



**கேட்கப்படகூடிய ஆவணங்கள் யாவை?**

1. பிறப்புச் சான்றிதழ்
2. பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ்
3. குடும்ப அட்டை

4 வாக்காளர்அட்டை

5. கடவுசீட்டு
6. ஓட்டுனர் உரிமம்
7. பான் கார்டு
8. ஆதார் அட்டை

*குடும்பத்தினர், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்று 35% முதல் 40% இந்திய மக்கள் மட்டுமே ஆவணங்கள் வைத்திருக்க வாய்ப்புள்ள நிலையில், வறுமையிலும், வறுமை கோட்டிற்கு கீழாகவும் உள்ள மக்கள் ஆவணங்களின்றி சிரமப்படவேண்டுமா?*

*8) அரசுக்கு சுமார் 15 கோடி இந்திய முஸ்லிம்கள் மீது காழ்ப்புணர்ச்சி என்றால் ஏன் 120 கோடி மக்களை அக்னி பரீட்சையில் இறக்க வேண்டும்?*

*9) "சப் கா சாத்; சப் கா விகாஸ்"; சப் கா விஸ்வாஸ் (எல்லோரும் ஒன்றாக; எல்லோருக்கு மாக; எல்லோருடைய நம்பிக்கையுடன்) என்பது இதுதானா?*

**எழும் கோரிக்கைகள்**
**மத்திய அரசு**

*1) 2019 குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பப்பெற வேண்டும்;*

*2) தேசிய குடிமக்கள் பதிவேடு அமல்படுத்தும் திட்டத்தை கைவிட வேண்டும்;*

*3). அதற்கு முன்னோடியான தேசிய மக்கள் பதிவேடு அமல்படுத்தும் திட்டத்தையும் கைவிட வேண்டும்.*

*4) இந்திய மக்களை அமைதியாக வாழவிடவேண்டும்.*

**சந்தேகங்கள் மற்றும் அடிக்கடி எழும் கேள்விகள்**

**கேள்வி 1**

**கேள்வி 2: ஆவணங்கள் இல்லை என்றால் என்ன செய்வது?**

**பதில்:** *மேலே குறிப்பிட்ட ஆவணங்களை வைத்திருப்பது நல்லது. இல்லாவிட்டால், விரைவாக தயார் செய்து கொள்வது நல்லது. ஆவணங்கள் இல்லாதவர் நீங்கள் மட்டும் இல்லை. சமுதாயத்தினர் பலரிடமும் ஆவணங்கள் இருப்பதற்கான வாய்ப்பில்லை. சமீபத்தில் டெல்லியில் நடந்த உயர்மட்ட அதிகாரிகள்கூட்டத்தில்ஆவணங்களைக்காட்ட வேண்டிய அவசியமில்லை என்று கூறப்பட்டது. ஆனால்,எழுத்து மூலம் அதிகாரப்பூர்வ அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.*

*2020 வழிகாட்டு நெறிமுறையில் அரசு விவர சேகரிப்பாளர்கள், அரசு அதிகாரிகள் படிப்படியாக செய்ய வேண்டிய செயல் முறைகள் என்ன?*

*1) மத்திய அரசு என்.பி.ஆர். 2020 - 2021 ஐ மேம்படுத்த இருப்பதை, கெஜட் அறிக்கையாக வெளியிட வேண்டும். அரசு அதனை 31.07.2019 தேதியிட்ட அரசாணை மூலம் அறிவித்து விட்டது.*

*2) விவர சேகரிப்பாளர்களையும், அதிகாரி களையும் நியமனம் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர், துணை ஆட்சியர், தாசில்தார், பள்ளி ஆசிரியர்கள், மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் இந்த பணிகளை மேற்கொள்வார்கள். விவர சேகரிப்பாளர்கள் அரசு அலுவலர்களாகத்தான் இருப்பார்கள்.*

3) வீடுவீடாக சென்று விவரம் சரிபார்க்க, சேகரிக்க வேண்டும் என்பதால், வீடுகள் தொகுப்பு விவரம் செய்ய வேண்டும். உதாரண மாக, வார்டுகள், தெருக்கள், வீடுகள் என்று பிரித்து, ஒரு விவர சேகரிப்பாளருக்கு, இத்தனை, வார்டு, தெரு, வீடுகள் என்று பிரித்து கொடுக்கப்படும்.


4) மாநில நிலை, மாவட்ட நிலை, தாலுகா நிலை, கிராம நிலை, வார்டு நிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, ஏற்கனவே 2011ல் எடுக்கப்பட்ட பதிவு புத்தகம் கொடுக்கப்படும். இதனை இவர்கள் தங்கள் பதிவிறக்கம் செய்ய வசதியுள்ள கைபேசியிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

5) வழிகாட்டு நெறிமுறை 1.17-ன் படி, விவர சேகரிப்பாளர், வீடு, வீடாக சென்று, ஏற்கனவே உள்ள விவரங்களை சரிப்பார்க்க வேண்டும், புதிதாக கோரப்பட்டுள்ள விவரங்களையும், வாக்காளர் அட்டை எண், ஆதார் எண், கைபேசி எண், பாஸ்போர்ட் எண், ஓட்டுனர் உரிம எண், பான் அட்டை எண் ஆகியவற்றை சேகரித்து குறிக்கவேண்டும்.

6) வழிகாட்டு நெறிமுறை பிரிவு 2.1-ன் படி, விவர சேகரிப்பாளர், தன் அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும், அவர் தன் வேலையை ஆரம்பிப்பத்தற்கு முன்பாக, தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்கு சென்று, தன்னை அறிமுகம் செய்துகொண்டு, பகுதியின் முக்கிய பிரமுகர்கள், ஊர் தலைவர்கள், பஞ் சாயத்து உறுப்பினர், பஞ்சாயத்து தலைவர் ஆகியோரை சந்தித்து தனக்கிடப்பட்ட பணியை விளக்க வேண்டும்.

7) மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட பதிவாளர், வழிகாட்டு நெறிமுறை 2.2.2-ன் படி தகவல் சேகரிப்பு பற்றி விரிவாக விளம்பரம் செய்ய வேண்டும். அவருக்கு அடுத்த அதிகாரி, 2.2.3-ன் படி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த விளம் பரம் செய்ய வேண்டும், குறிப்பாக மேலே கண்ட ஆவணங்களின் எண்களை தயார் நிலையில் வைத்திருக்க விளம்பரம் செய்ய வேண்டும்.

8) என்.பி.ஆர் 2020 மேம்படுத்தல் என்றால், ஏற்கனவே 2011-இல் சேகரிக்கப்பட்ட தகவல்கள், விவரசேகரிப்பாளரிடம், புத்தகமாகவோ, கைபேசி பதிவிறக்கமாகவோ இருக்கும். உதாரண மாக அவர் கதவிலக்கம் 32, மூன்றாம் குறுக்கு தெரு 10 வது வார்டுக்கு செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அந்த வீட்டை அடைந்ததும், வீடு திறந்திருந்து, குடும்ப தலைவர் இருந்தால், தன்னிடம் எற்கனவே உள்ள பதி வேட்டில் உள்ள விவரங்கள் சரிதானா என்றும், அதில் கண்டுள்ள நபர்கள் இருக்கிறார்களா என்றும் சரிப்பார்த்து, பெயர், பிறந்த தேதிகளை, ஆவணங்கள் அடிப்படையில் சரிபார்ப்பார். புதிதாக யாரையும் சேர்க்க வேண்டும் என்றாலோ, இறந்தவர் பெயரை நீக்க வேண்டும் என்றாலோ அதன்படி சரி செய்வார்.


NATIONAL POPULATION REGISTER-2020

Page No: 1

Side-A

To be copied from HLO Schedule

Census House Number

Household number

Household Status:

Household Status: Available - 1, Locked- 2, Moved Out - 3, Not Available - 4, New - 5

House Number and Locality

Present Address

Number of Members

PIN CODE

| S.No | Q1a. Name of the Person<br>Q1b. (Skip for new household) in case of Available -1, Died - 2, Moved Out 3, New Member -4 | Q2. Relationship to Head<br>Q3. Sex Male-1 Female-2 Third Gender-3<br>Q4. Marital Status<br>Q5. Date of birth as per English calendar - Day Month Year (DD-MM-YYYY) | Q6. Place of Birth if within India, write the name of the state and district. If outside India, write the name of the country and put '-' for district | Q7.* (i) Nationality as declared Indian - 1, Others - write name of the country.<br>(ii) If Indian, Passport Number. | Q8. Educational Qualification | Q9. Occupation / Activity | Q10. Mother Tongue (Fill code as per Annex VII given in manual ) |
|---|---|---|---|---|---|---|---|
| | | Q2<br>Q3<br>Q4<br>(DOB as DD-MM-YYYY)<br>Q5 | State/Country<br>District | Passport Number | | | |
| | | Q2<br>Q3<br>Q4<br>(DOB as DD-MM-YYYY)<br>Q5 | State/Country<br>District | Passport Number | | | |
| | | Q2<br>Q3<br>Q4<br>(DOB as DD-MM-YYYY)<br>Q5 | State/Country<br>District | Passport Number | | | |

| Q.2 Relationship to Head: | | Q4. Marital Status: | Q8. Educational Qualification : | | Q9. Occupation/Activity : | |
|---|---|---|---|---|---|---|
| Head / Self--01<br>Spouse--02<br>Daughter / Son--03<br>Granddaughter/Grandson--04<br>Mother / Father--05<br>Sister / Brother--06 | Daughter-in Law / Son-in-law--07<br>Grandmother / Grandfather--08<br>Mother-in-law / Father-in-law--09<br>Other Related Person--10<br>Domestic Servant--11<br>Other Unrelated Person--12 | Never Married--1<br>Currently Married--2<br>Widowed--3<br>Separated--4<br>Divorced--5 | Pre-Primary--00<br>Class (1-12) -- 01-12<br>ITI--13<br>Polytechnic--14<br>Nursing Diploma--15<br>Teacher Training Diploma--16<br>Certificate / Other Diploma--17 | Bachelor / Undergraduate--18<br>PG Diploma--19<br>Masters / Post graduate --20<br>M.Phil--21<br>Doctorate & above--22<br>Without formal education--23<br>Illiterate--99 | Cultivator--1<br>Agricultural Labourer--2<br>Daily Wages Earner (other than Agricultural Labourer)--3<br>Single/Family Worker/Self Employed--4 | Employer--5<br>Government Employee--6<br>Private Employee (Other than Domestic Helper)--7<br>Domestic Helper--8<br>Non-Worker--9 |

* Nationality recorded is as declared by the respondent. This does not confer any right to Indian Citizenship.
I declare that all the information provided in side A and side B is true to the best of my knowledge and belief.

| Serial Number of Respondent | Signature/Thumb impression of Respondent with date | Signature of Enumerator with date | Signature of Supervisor with date |
|---|---|---|---|
| | | | |

*9) வீடு பூட்டி இருந்தால் அல்லது அங்கிருந்தவர்கள் புலம் பெயர்ந்து சென்று விட்டார்கள் என்றால் அவ்வாறே குறித்துக் கொள்வார்.*

*10) 2011 என்.பி.ஆர் படிவத்தில் இல்லாத 2020 படிவத்தில் உள்ள கூடுதல் விவரங்களை, குறிப்பாக மேலே சொன்ன ஆவணங்கள் சரிப் பார்த்தல், ஆதார் எண் போன்றவற்றை அறிந்து அவற்றை புதிய படிவத்தில் குறித்துக்கொள்வார்.*

*11) நீங்கள் 2011-இல் ஒரு வீட்டில் இருந்து விட்டு, 2020-இல் வேறொரு ஊரில், வேறு வீட்டில் வசிப்பவராக இருந்தால், பழைய வீட்டு விவரம், "புலம் பெயர்ந்து விட்டார்கள்" என்று அந்த பகுதி அலுவலரால் குறிக்கப்படும். புதிய முகவரியில் புதிய படிவத்தில் அந்த பகுதி அலுவலர் அனைத்து விவரங்களையும் குறிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள தகவல் என்ன ஆகும் என்பது குறித்து வழிகாட்டு நெறிமுறையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.*

*12) விவர சேகரிப்பாளர் ஒரு வீடு கூட விடுபடாமல்விவரம் சேகரிக்க வேண்டும். வீடு பூட்டியிருந்தால், மீண்டும் சென்று விவரம் சேகரிக்க வேண்டும் என்றுகுறிப்பிட்டுள்ளது.*

**2020 என். பி. ஆர் படிவத்தில் கேட்கபோகும் விவரங்கள்:**

**கேள்விகள்**

1) பெயர்

2) குடும்பத்தலைவருடனான உறவு

3) பாலினம்(ஆண்/பெண்/மூன்றாம் இனம்)

4) திருமணம் ஆனவரா/இல்லையா

5) பிறந்த தேதி (ஆங்கில வருடத்தில்).

*6) பிறந்த இடம் இந்திய எல்லைக்குள் என்றால் எந்த மாநிலம்?*

*இந்தியாவுக்கு வெளியே என்றால் எந்த நாடு? (2011 இல் இல்லாத புதிய கேள்வி)*

*7)* Nationality as declared *எந்த தேசத்தவர் (அந்த நபர் சொன்னவாறு)*

*8) கல்வித்தகுதி*

*9) செய்யும் வேலை/அலுவல்*

*10) தாய்மொழி*

*11) நிரந்தர முகவரி*

*12) தற்போது குடியிர்க்கும் வீட்டில் பிறந்தது முதல் வசிப்பவரா அல்லது எவ்வளவு காலமாக வசிக்கிறார்.*

**(2011 இல் இல்லாத புதிய கேள்விகள்)**

*13)* (i) *தந்தை, தாய், கணவர், மனைவி பெயர்கள். உயிருடன் இருக்கிறார் அல்லது உயிருடன் இல்லை. பிறந்த தேதி.*

*13)* (ii) *தாய்/தந்தை பிறந்த இடம் இந்திய எல்லைக்குள் என்றால் எந்த மாநிலம்; இந்தியாவுக்கு வெளியே என்றால் எந்த நாடு.*

*14) ஆதார் எண்; கைபேசி எண்; வாக்காளர் அட்டை எண்; ஓட்டுனர் உரிமம் எண்.*

*பின் குறிப்பு ; எந்த தேசத்தவர் என்பது அந்த நபர் சொன்னவாறு குறிக்கப்படுகிறது, எனவே, அது இந்திய குடிமகன் என்ற உரிமையை தராது.*

*குடும்பத்தலைவர் தான் சொல்லிய விவரங்கள் உண்மை என்று பிரகடனம் செய்து கையொப்பம் செய்ய வேண்டும்.*

*மேலே கண்டுள்ள கேள்விகள் 6,13,14 என்.பி.ஆர் 2020-ல் புதிதாய் சேர்க்கப்பட் டுள்ளவை.*

**2020 புதிய படிவ நகல் இணைக்கப்படுள்ளது.**

*உங்களுடைய பெற்றோர், 1947-க்கு முன்பாக இந்தியாவில் பிறந்து, 26.01.1950 அன்று, இந்தியாவை தன் வாழ்விடமாக கொண்டவர்கள் எனவே அவர்கள் இந்திய குடிமக்கள்; நீங்கள் 26.01.1950 க்கு பிறகு இந்தியாவில் பிறந்தவர், எனவே நீங்களும் இந்திய குடிமகன் அல்லது குடிமகள்; அதன் பிறகு பிறந்து, பிறப்பு பதிவு செய்யப்பட்டு பிறப்புச்சான்றுகள் மற்றும் பள்ளிச்சான்றுகள் உள்ள உங்கள் பிள்ளைகளும் இந்திய குடிமக்கள். இந்த சான்றுகள் இருந்தா லும் இல்லாவிட்டாலும் நீங்கள் அனைவரும் இந்திய குடிமக்கள். இதனை நிரூபித்து வாருங்கள் என்று சொல்ல யாருக்கும் உரிமை யில்லை.*

# டீம் PSAO நடத்திய மாணவர்களுக்கான தொடர் நிகழ்ச்சிகள்







*16.12.2019* அன்று தேர்வு எழுதும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பிஸ்கட் வழங்கி தேர்வு சம்மந்தமான அறிவுரைகள் கொடுக்கப் பட்டது. அதன்பிறகு *30-01-2020* காலை 10 மணியளவில் கடலூர் மாவட்டம் பரங்கிப் பேட்டையில் செயல்பட்டுவரும் சமூகநல அமைப்பான டீம் PSAO கச்சேரி தெருவில் அமைந்துள்ள தொடக்க பள்ளி மாணவர்களை, பரங்கிப்பேட்டை மரைன் பயாலஜிக்கு டீம் PSAO அழைத்து சென்றது.

மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் விதமாக, மரைன் பயாலஜி-ல் அமைந்துள்ள மியூசியம், லைப்ரரி, பயோடெக் லேப், புயலின் வேகத்தை அளவிடும் கருவி, ஹைதர் அலி போர் நினைவு சின்னம், மாங்குரோ காடுகள் ஆகியவற்றை பார்வையிட்ட தோடு, மாணவர்களிடம் கேள்விகள் கேட்டு அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப் பட்டது.

நமதூர் பரங்கிப்பேட்டை பல பொக்கி ஷங்களை தன்னகத்தே அடக்கியுள்ள ஊர் என்பதை அனைவரும் அறிவோம். அந்த பொக்கிஷங்களை நம் மாணவ கண்மணிகளுக்கு காண்பிக்க டீம் PSAO இந்த முயற்சியை எடுத்து, வெற்றியும் பெற்றுள்ளது.

கச்சேரித்தெரு பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. மான்விழி அவர்கள், தன் பள்ளி மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்புகளை கண்டு மிகவும் சந்தோசப்பட் டார்கள். இந்த நிகழ்விற்கு பிறகு மாணவர் களிடம் கிடைக்கப்பெற்ற உற்சாகத்தையும், ஆர்வத்தையும் கண்டு டீம் PSAO நிர்வாகி களுக்கும் சந்தோசமே!

மரைன் பயாலஜி மட்டும் இல்லாமல், லைட் ஹவுஸையும் மாணவர்களுக்கு காண்பிக்க







வேண்டும் என்பது டீம் PSAO-ன் முடிவாக இருந்தது. ஆனால், நேரமில்லாத காரணத்தினால் மேலே சொன்ன இடங்களை மட்டும் மாணவர்களுக்கு காண்பித்து விட்டு திரும்பினோம்.

இந்த ஒரு பள்ளிகூடம் மட்டுமில்லாமல், ஊரில் உள்ள மற்ற அரசு பள்ளிகூடங்களின் மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும் விதமாக இன்னும் இதுபோன்ற அனைத்து சமூக மக்களும் பலன்பெறும் விதமாக ஊர் மக்களின் உதவியுடன் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்த டீம் PSAO திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

- யாசர் அரஃபாத். S

# அத்திகடையில்
# NRC, NPR, CAA விளக்க கூட்டம்





திருவாரூர் மாவட்டம் அத்திகடை பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் NRC, NPR,-CAA பற்றிய சிறப்பு விளக்க கூட்டம் நடைபெற்றது. பெரிய பள்ளிவாசல் தலைவர் மற்றும் நிர்வாகிகள் மற்றும் சுமார் 50க்கும் மேற்பட்ட சகோதரர்கள் NPR, NRC, CAA பற்றிய பல்வேறு விதமான கேள்விகளுக்கு மதுரை மாவட்ட தலைவர் ஜாகீர் ஹுஸைன், வைகறை வெளிச்சம் பத்திரிகை நிருபர் அபூசித்திக் அவர்களும் கணினி மூலமாக நேரடி விளக்கம் கொடுக்கப்பட்டது. ஆர்வத்துடன் கலந்துக் கொண்ட மக்கள் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் கொடுக்கப்பட்டது. – வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் – அத்திகடை

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.